# சரித்திரம் பேசும் சாஹித்தியரத்னா விருதாளர்கள்




இலங்கை அரசின்
இலக்கியத்திற்கான உயர் விருது



தி. ஞானசேகரன்
















ஞானம்
பதிப்பகம்

ISBN:978-955-8354-80-3

# சரித்திரம்பேசும் சாஹித்தியரத்னா விருதாளர்கள்

தி. ஞானசேகரன்

ஞானம் பதிப்பகம்

51ஆவது வெளியீடு

**நூல்**
சரித்திரம்பேசும் சாஹித்தியரத்னா
விருதாளர்கள்

**ஆசிரியர்**
தி.ஞானசேகரன்

**பதிப்பு**
முதலாம் பதிப்பு, 2018

**நூல் வடிவமைப்பு**
இ.சொரூபி

**பதிப்பகம்**
ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6
இலங்கை
தொலைபேசி: + 94 11 2586013
தொலைநகல்: + 94 11 2362862
மின்னஞ்சல்: editor@gnanam.info
இணையத்தளம்: www.gnanam.info

**Book**
SarithiramPesum Shakiththiyarathna
Viruthalarkal

**Author**
T.Gnanasekaran

**Edition**
1st Edition, 2018

**Designed By**
R.Soruby

**Publisher**
Gnanam Pathippakam
3B, 46th Lane, Colombo 6
Sri Lanka
Tel: + 94 11 2586013
Fax: + 94 11 2362862
Email: editor@gnanam.info
Web: www.gnanam.info

**Pages**
(xii + 128)

**Price**
Rs. 500/=

**ISBN**
978-955-8354-80-3

This licensed work is free to use, share, remix, and redistribute with attribution to Gnanam Pathippakam, but not permit for any commercial work

# அணிந்துரை

ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியிலே முக்கியம் பெறுகின்ற ஆளுமைகள் குறித்து படைப்பாளிகள், முன்னோடிகள் பல்துறைப்புலமையாளர்கள் என்ற விதங்களில் அவர்களை இனங்கண்டு அவ்வப்போது நூல்கள் வெளிவருவது வழக்கமே. இந்நூலும் அவ்வகையானதேயாயினும் இதில் கவனத்திற்குட்படுவோர் ஈழத்தில் இலக்கியத்திற்காக இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற 'சாஹித்திய ரத்தினா' விருது பெற்ற ஆளுமைகளாகும். இவ்விருது வழங்கப்படுவது தொடர்பாக சர்ச்சைகள் சிலவிருப்பினும் இந்நூல் அதுபற்றி வாதிக்காது - ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் இவர்கள் பதித்த தடங்களை இனங்காட்டுவதுபற்றி - கவனஞ்செலுத்தியிருப்பது காலத்தின் தேவையாகின்றது, பாராட்டுக்குரியதாகின்றது.

இந்த நூலிலிடம்பெற்றுள்ள பதினேழு ஆளுமைகளுள் பதினொருவர் ஆக்க இலக்கியப்படைப்பாளிகள். இவர்களுள் சாஹித்திய ரத்தினா விருதினை முதன்முதலில் (2002) பெற்றவரென்றபடியால் மட்டுமன்றி ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றின் 'மணிக்கொடி' என்று கூறத்தக்கதான 'மறுமலர்ச்சி' சஞ்சிகையின் முதல் பிரதம ஆசிரியர் என்ற முக்கியத்துவம் பெற்றவர் வரதர் (தி.ச. வரதராசன்). அன்னாரது இதழியல் துறைகள் முயற்சிகளோடு சிறுகதை, குறுநாவல், குறுங்காவியம்,

நாவல், வாழ்க்கை வரலாறு முதலான இலக்கிய முயற்சிகள், நூல் வெளியீட்டு முயற்சி பற்றியெல்லாம் ‘மறுமலர்ச்சி தந்த வரதர்’ என்ற தலைப்பில் விவரிக்கப்படுகின்றன. அம்முயற்சிகள் ஒவ்வொன்றினதும் முக்கியத்துவம் பற்றியும் நறுக்காக குறிப்பிடப்படுகின்றது.

அவ்வாறே ‘சொக்கன்’ (க. சொக்கலிங்கம்(2002), சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, ஆய்வு, மொழிபெயர்ப்பு, நாடகம் முதலான துறைகளில் செய்தவை பற்றிப் பேசப்படுகிறது. தொடர்ந்து டொமினிக் ஜீவா (2005), பண்டிதர் சச்சிதானந்தன்(2006), இ.முருகையன் (2007), செங்கை ஆழியான் (2009), தெணியான் (2013), தெளிவத்தை ஜோசப் (2014), முல்லைமணி (2015), நீர்வை பொன்னையன் (2017), மு.பொ. (2018) ஆகியோரது பல்துறைசார் முயற்சிகள் பற்றி விவரிக்கப்படுகிறது.

ஆய்வாளர்கள் அறுவருள் முதல் சாஹித்திய ரத்தினா விருது பெற்றவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி (2004) அவர்கள். இதனால் மட்டுமன்றி உலகப்புகழ் பெற்ற ஈழத்து ஆய்வாளர் வெகு சிலருள் முக்கியமானவர் என்ற விதத்திலும் கவனத்துக்குரியவர், மிகப்பொருத்தமானவர். இவ்விருதுக்குத் தெரிவு செய்யப் பட்டிருந்தாலும் இது காலந்தாழ்த்திய செயற்பாடோ என்ற ஐயம் ஆர்வலர் மத்தியில் எழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தொடர்ந்து உலகப் புகழ் பெற்ற மொழியியல் பேராசிரியரான ஆஷா அவர்களின் வழிகாட்டலில் கலாநிதிப்பட்டம் பெற்றவரும் நைஜீரியா, ரோக்கியோ பல்கலைக்கழகங்களில் வருகைதரு பேராசிரியருமாக இருந்தவருமான பேராசிரியர் அ. சண்முகதாஸ் (2008) அவர்களது பல்துறை ஆய்வுப்பங்களிப்பு பற்றி விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது.

பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களது (2011) கல்வியியல் துறைசார் ஆய்வுகள் நுண்கலைத்துறைசார் ஆய்வுகள் முதலியன வற்றோடு பல்கலைக்கழக கற்பித்தற் பணிகள் பற்றியும் விரிவாக விளக்கப்படுகின்றன.

இவ்வாறே பேராசிரியர் க. அருணாசலம் (2012), பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் (2015), முகம்மது சமீம் (2010) ஆகியோரது ஆய்வுலகச் செயற்பாடுகள் பற்றியும் எடுத்துரைக்கப்படுகின்றது.

பெரும்பாலான ஆளுமைகள் பற்றி ஆங்காங்கே கூறப்படும் புதிய - அரிய - தகவல்கள் இந்நூலாசிரியரது நுண்ணாய்வுத் திறனுக்குச் சான்று பகர்கின்றன. உதாரணமாக 1940, 1950 களிலே முற்போக்கு எழுத்தாளர்கள் உட்பட பல எழுத்தாளர்களுக்கு ஆதர்ஷ புருஷராக விளங்கியிருந்த த. இராஜகோபாலன், 'யாழ்நூல்' ஆராய்ச்சியிலீடுபட்டிருந்த சுவாமி விபுலானந்தருக்கு ஆராய்ச்சித் துணைவராய் விளங்கியிருந்த பண்டிதர் சச்சிதானந்தன், கல்வியியல் துறையில் புதிய கண்டுபிடிப்புகளை வெளிப் படுத்தியிருந்த பேராசிரியர் சபா ஜெயராசா என்ற விதங்களிலான அவர்கள் பற்றிய அறிமுகத்தைக்குறிப்பிடலாம்.

கவனத்துக்குட்பட்ட ஆளுமைகள் பலருக்கு வழங்கப்பட்ட அடைமொழிகளும் இந்நூலாசிரியரது நுண்ணாய்வுத் திறனுக்கு இன்னொரு விதத்தில் சான்று பகர்வனவாகவிருப்பது பற்றியும் இறுதியாகக் குறிப்பிடத்தோன்றுகிறது. 'மலையகம் என்னும் உணர் வுக்கு தனது எழுத்தாற்றலால் உருவம் கொடுத்த தெளிவத்தை ஜோசப்', 'படைப்பாளுமையும் செயற்திறனும் மிக்க செங்கை ஆழியான்', 'நிலையான கருத்தியல்கொண்ட இலக்கியவாதி நீர்வை பொன்னையன்', 'ஈழத்து இதழியல் சாதனையாளர் டொமினிக் ஜீவா', 'மெய்முதல் வாத கருத்தியலை முன்னிறுத்தும் மு.பொ.' முதலியன அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகின்றன.

சுருங்கக் கூறின் இளந்தலைமுறை ஈழத்து இலக்கிய ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலருக்கும் பயன்படக்கூடியதொரு நூலை ஆக்கித்தந்த இந்நூல் ஆசிரியர் தொடர்ந்தும் இத்தகைய ஆய்வு முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகின்றது!

வாழ்த்துக்களுடன்

**பேராசிரியர் செ. யோகராசா**

## என்னுரை

**சா**ஹித்தியரத்னாவிருது இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலக்கியத்திற்கான உயரிய விருதாகும். 2002ஆம் ஆண்டிலிருந்து இந்த உயரிய விருது வருடாவருடம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 17 பேர் இந்த உயரிய விருதினைப் பெற்றுள்ளார்கள். இதில் பதினொருவர் ஆக்க இலக்கியப் படைப்பாளிகள். அறுவர் பல்வேறு துறைசார்ந்த புலமையாளர்கள். இவ்விருதினைப் பெற்றவர்கள் யாவருமே கௌரவத்துக்கும் பெருமைக்கும் பெருமதிப்புக்கும் உரியவர்கள். தத்தம் துறைகளில் சாதனைகள் பல புரிந்த ஆளுமைகள். இளம் தலைமுறையினருக்கு ஆதர்ஷமாக விளங்க வேண்டியவர்கள். அவர்கள் புரிந்த சாதனைகளை இளந்தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் "சரித்திரம் பேசும் சாஹித்யரத்னா விருதாளர்கள்" என்ற மகுடத்தில் அவர்கள் பற்றிய இந்தக் கட்டுரைத் தொடரை எழுதினேன். இக்கட்டுரைத் தொடர் சாஹித்தியரத்னா விருதாளர்களை அறிமுகப்படுத்துவதுடன் இளம் ஆய்வாளர்களின் ஆய்வுத்தேவைக்கான அடிப்படை விபரங்களை ஆவணப்படுத்தும் நோக்குடனேயே எழுதப்பட்டது.

இதனை நான் எழுதுவதற்குத் தூண்டுதலாக இருந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

ஞானம் சஞ்சிகையில் வெளிவந்த நேர்காணல்களின் தொகுப்பாக ஞானம் 200ஆவது இதழ், சிறப்பிதழாக வெளிவந்தது.

அந்தத் தொகுப்பினை வடிவமைக்கும் வேளையில் வடிவமைப்புப் பணியை மேற்கொண்ட உதவியாளர், "இதில் ஒரு தவறு இருக்கிறது, பேராசிரியர் தில்லைநாதன் அவர்களுக்கான அடைமொழி 'சாஹித்யரத்னா' போடப்படவில்லை, திருத்தவேண்டும் என்றார்.

"பேராசிரியர் அவர்கள், இலக்கியச் செம்மல், தேசத்தின்கண், கலாகீர்த்தி போன்ற உயரிய அரச விருதுகள் பலவற்றைப் பெற்றவர். ஆனால் சாஹித்யரத்னா விருது பெற்றதாக நான் அறியேன்" எனக்கூறி அதனை உறுதிசெய்ய முயன்றேன். முதுபெரும் இலக்கியவாதிகள் சிலரிடம் "பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் சாஹித்யரத்னா விருது பெற்றவரா?" எனக் கேட்டேன். "சரியாகத் தெரியவில்லை" என்றார் ஒருவர். வேறொருவர் "ஆம், அவர் சாஹித்தியரத்னா விருது பெற்றவர் என்பதுதான் எனது ஞாபகம்" எனப் பதில் தந்தார்.

நான் குழப்பம் அடைந்தேன். எதற்கும் பேராசிரியர் தில்லைநாதனிடம் இதனைக் கேட்டு உறுதி செய்யலாம் என எண்ணி அவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டேன்.

"எனக்குச் சாஹித்தியரத்னா விருது வழங்கத் தீர்மானித் திருப்பதாக ஏற்பாட்டுக் குழுவினர் ஒருமுறை என்னிடம் தெரிவித்தார்கள். அது எனக்கு வேண்டாம் என்று நான் அவர்களிடம் கூறிவிட்டேன்" எனப் பேராசிரியர் பதில் தந்தார்.

இதனை நான் இங்கு குறிப்பிடுவதற்கான முக்கிய காரணம் யாதெனில், இலக்கியத்துடன் தொடர்புடைய பல்வேறு மட்டங்களில் உள்ளவர்களும் இந்த உயரிய விருதினை இதுவரை யார் யார் பெற்றார்கள் என்பதனைத் தெரியாமல் இருக்கிறார்கள். எனவேதான் இந்த விருதாளர் பட்டியலை இலக்கிய உலகிற்கு அறியத்தரும் நோக்குடன் முதலில் ஞானம் சஞ்சிகை 209ஆவது இதழில் அதனை வெளியிட்டேன்.

சாஹித்தியரத்னா விருதாளர்கள் தேர்வு பற்றிய வாதப்பிரதிவாதங்கள் அவ்வப்போது இலக்கிய உலகில் நடந்து வந்துள்ளமை பற்றியும் இங்கு பதிவு செய்ய வேண்டும். இந்த விருதுக்கு பொருத்தமற்றவர்கள் சிலர் தெரிவு செய்யப்பட்டதாகவும், இந்த விருதுக்கு தகுதியுடைய பலர் நிராகரிக்கப்பட்டதாகவும், அவர்களில் சிலர் அமரத்துவம் அடைந்து விட்டதாகவும்

தகுதியுடையோர் மூப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்படாமல் சிலருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதாகவும் சர்ச்சைகள் எழுந்தன. அந்தச் சர்ச்சைகள் பற்றி அலசுவது இக்கட்டுரைகளின் நோக்கமல்ல.

தினக்குரலில், சரித்திரம் பேசும் சாகித்தியரத்தினா விருதாளர்கள் என்ற இத்தொடரை நான் எழுதிய காலகட்டத்தில் இத்தொடரில் உள்ள கட்டுரைகள் பலவற்றின் முதன்நிலை வாசகனாக இருந்து பல ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறி உற்சாகமூட்டியவர் பேராசிரியர் துரை மனோகரன் அவர்கள். இத் தொடரினை தினக்குரல் வாரமஞ்சரியில் சிறப்பாக வெளியிட்டவர் அதன் பொறுப்பாசிரியர் பாரதி இராஜநாயகம் அவர்கள். இவர்களுக்கு எனது மனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக் கட்டுரைத் தொடரை நூலாக்கும் வேளையில் எழுத்தாளர் மு. பொ. அவர்களும் சாஹித்தியரத்னா விருதினைப் பெற்றார். அவர் தொடர்பான கட்டுரையும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்தொடர் வெளிவந்த காலகட்டத்தில் பலர் என்னுடன் தொடர்புகொண்டு உற்சாகமூட்டினர். சிலர் தமது முகநூல்களில் இக்கட்டுரைகளில் சிலவற்றை மீள்பிரசுரம் செய்தனர். வேறு சிலர் இக்கட்டுரைத் தொடரை நூலாக்கம் செய்யும்படி ஆலோசனை கூறினர். அதற்கமையவே தற்போது இத்தொடர் நூலுருவம் பெற்று உங்கள் கைகளில் தவழ்கிறது. இந்நூலுக்குப் பொருத்தமானதொரு அணிந்துரையை எழுதிச் சிறப்பித்த பேராசிரியர் செ.யோகராசா அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

ஈழத்து நவீன இலக்கியத்தின் வளர்ச்சிப்போக்கை, அறிந்து கொள்ள இக்கட்டுரைத் தொகுப்பு நூலில் பல வரலாற்றுத் தகவல்கள் அடங்கியுள்ளன.

இந்நூல் இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஆய்வு மாணவர் களுக்கும் பயனுடையதாக அமையும் என நம்புகிறேன்.

**தி. ஞானசேகரன்**

**“ஞானம்” பிரதம ஆசிரியர்**

**3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.**

**19.10.2018**

# விருதாளர்கள்...


| | |
|---|---|
| வரதர் | 01 |
| சொக்கன் | 08 |
| பேராசிரியர் கா.சிவத்தம்பி | 16 |
| டொமினிக் ஜீவா | 23 |
| பண்டிதர் க. சச்சிதானந்தன் | 31 |
| முருகையன் | 38 |
| பேராசிரியர் அ.சண்முகதாஸ் | 45 |
| செங்கை ஆழியான் | 52 |
| முகம்மது சமீம் | 59 |
| பேராசிரியர் சபா ஜெயராசா | 66 |
| பேராசிரியர் க. அருணாசலம் | 74 |
| தெணியான் | 82 |
| தெளிவத்தை ஜோசப் | 90 |
| முல்லைமணி | 98 |
| பேராயர் எஸ்.ஜெபநேசன் | 106 |
| நீர்வை பொன்னையன் | 112 |
| மு.பொ. | 120 |



# 1

# மறுமலர்ச்சி தந்த வரதர்

ஈழத்து இலக்கிய வரலாற்றில் முதன்முதலில் சாஹித்தியரத்னா விருதினைப் பெற்ற பெருமைக்குரியவர் வரதர். 2002ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முப்பதாம் திகதி இடம்பெற்ற சாஹித்ய விழாவில் அவருக்கு இந்த விருது வழங்கப்பெற்றது.

தி.ச.வரதராசன் என்ற இயற்பெயர் கொண்ட வரதர், யாழ்ப்பாணத்திலுள்ள பொன்னாலை என்ற கிராமத்தில் 01-07-1924 அன்று பிறந்தார். இவரது தந்தை பெயர் தியாகர் சண்முகம். தாய்பெயர் சின்னத்தங்கம்.

இவர் தனது கல்வியை பொன்னாலை அமெரிக்க மிஷன் தமிழ்ப்பாடசாலை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை, காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை ஆகியவற்றில் பெற்றுள்ளார்.

வரதரது மனைவிபெயர் மகாதேவியம்மா. இவர்களுக்கு செந்தாமரை, தேன்மொழி, மலர்விழி ஆகியோர் புதல்விகள்.

சிறுகதை, குறுநாவல், கவிதை, புனைகதைசாரா எழுத்துக்கள், இதழியல், பதிப்பு முதலிய பல்துறைப் பங்களிப்புகள் மூலம் ஈழத்து நவீன இலக்கியத்தை வளப்படுத்தியவர் வரதர். இவர் இளமையிலே பொன்னாலையில் இருந்த சமூகத்தொண்டு நிலையம் வெளியிட்ட சமூகத்தொண்டன் கையெழுத்து இதழின் ஆசிரியராக இருந்தார். பின்னர் அவர் மாணவராய் இருந்த மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் மாணவர் தேர்ச்சிச் சங்கம் வெளியிட்ட கையெழுத்து இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். அதுமட்டுமன்றி கையெழுத்து இதழ்களின் ஓவியராகவும் விளங்கினார்.

அச்சில் வெளிவந்த வரதரது முதலாவது கட்டுரை ஈழகேசரி பத்திரிகையின் கல்வி அனுபந்தம் என்ற பகுதியில் 1939ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்போது அவருக்கு வயது 15 மட்டுமே. தொடர்ந்து 1940இல் ஈழகேசரி ஆண்டு மலரில் இவரது முதலாவது சிறுகதை "கல்யாணியின் காதல்" வெளிவந்தது.

13-06-1943இல் வரதர் எழுதிய முதலாவது கவிதை "ஓர் இரவினிலே" ஈழகேசரியில் வெளியாகியது. இக்கவிதையே ஈழத்தில் வெளிவந்த முதலாவது புதுக்கவிதை ஆகும்.

ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் ஈழகேசரி பத்திரிகைக்கு முக்கிய இடமுண்டு. எனினும், ஈழகேசரி தனது இலக்கியத்துறையில் பழைய பண்டிதத்தனத்தில் காலூன்றி நின்றது. புதிய இலக்கியத் துறையில் ஓரளவே அக்கறை காட்டியது. இதனால் நவீன இலக்கியத்துக்கான சஞ்சிகை ஒன்றை வெளியிடவேண்டும் என்ற எண்ணம் ஈழகேசரியில் இளம் எழுத்தாளர்களாக எழுதிக் கொண்டிருந்த வரதருக்கும் அவரது நண்பர்களான அ.செ. முருகானந்தன், நாவற்குழியூர் நடராசன், பண்டிதர் ச.பஞ்சாட்சர சர்மா போன்றோருக்கும்

ஏற்பட்டது. இவர்களுடன் இன்னும் சிலர் இணைந்து தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் என்ற அமைப்பை 13-06-1943 அன்று உருவாக்கினார்கள். இச்சங்கத்தின் பிதாமகர் வரதர் ஆவார். இதுவே ஈழத்தின் முதலாவது தமிழ் எழுத்தாளர் சங்கமாகும். நவீனத் தமிழிலக்கியத்தின் வரலாற்றில் ஓர் இலக்கியம்பற்றிய ஒரு குறிப்பிட்ட கருத்துநிலையோடு தொழிற்பட்டுவந்த முதலாவது இயக்கம் மறுமலர்ச்சி இயக்கமாகும்.

இச்சங்கத்தினால் மறுமலர்ச்சி என்ற சஞ்சிகையை நடத்தவும் தீர்மானித்து அதற்கு ஆசிரியராக வரதரைத் தேர்ந்தெடுத்தார்கள். அப்போது வரதருக்கு வயது 19. ஆரம்பத்தில் மறுமலர்ச்சி கையெழுத்துப் பத்திரிகையாக வெளிவந்தது. அதனை அச்சு இதழாக்க வேண்டும் என்ற கனவு வரதருக்கு இருந்தது. 1946 மார்ச் மாதத்திலிருந்து 1948 ஒக்டோபர் மாதம் வரை 23 இதழ்கள் அச்சு இதழ்களாக வெளிவந்தன. மறுமலர்ச்சி இதழ் ஈழத்தின் முதலாவது நவீன இலக்கியச் சிற்றிதழ் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டது. மறுமலர்ச்சி இதழின் இணை ஆசிரியர்களாக முதலில் வரதரும். அ.செ. முருகானந்தனும் இருந்தனர். 1948இன் ஆறாவது இதழிலிருந்து இணை ஆசிரியர்களாக வரதரும் பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மாவும் விளங்கினர்.

"மஹாகவி பாரதியாருக்குப்பின் தமிழகத்தைவிட ஈழத்திலேயே முற்போக்குச் சிந்தனை வளர்ந்துள்ளது. அதற்கு முக்கிய காரணம் மறுமலர்ச்சி இயக்கமும் அதன் செயற்பாடுகளுமே ஆகும்" எனக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் சு. வித்தியானந்தன்.

"இந்தியாவில் மணிக்கொடிக்காலம் எனப் படைப்பிலக்கிய நலனாய்வாளர்கள் கூறுவதுபோல ஈழத்தில் மறுமலர்ச்சிக்காலம் என 1940களை கலாநிதி கைலாசபதியே கணிப்பிட்டுக்

கூறுவார்" எனக் குறிப்பிட்டுள்ளார் முதுபெரும் எழுத்தாளரான செ.கணேசலிங்கன். (வரதர்-80, ஞானம் பதிப்பக வெளியீடு. பக் 11)

மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் தமது தீவிர எழுத்துக்களால் ஈழத்து இலக்கிய வரலாற்றில் மறுமலர்ச்சிக்காலம் (1943 -1956) எனும் புதிய காலப்பகுப்பையே உருவாக்கினர்.

இந்த மறுமலர்ச்சி சஞ்சிகை பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிடுகிறார் "இந்த முற்போக்கு இயக்கம் (பிற்பட்ட காலத்தில்) இவ்வளவு மிகச் செழிப்பாக தொடங்கி வளர்வதற்கு காரணமாக இருந்தது என்னவென்றால், ஏற்கனவே இருந்த சூழல். அந்தச் சூழல் மறுமலர்ச்சி இயக்கத்தினால் ஏற்பட்டது." (ஞானம் நேர்காணல்)

"மறுமலர்ச்சி இதழுடன் இலக்கியப்பணி தொடங்கிய வரதர், இதழ்கள் இலக்கிய வளர்ச்சிக்கு உதவுவன என்பதை உணர்ந்து பலவற்றை வெளியிட்டு வந்துள்ளார். அவை, வரதர் புத்தாண்டு மலர்(1949), ஆனந்தன்(1952), தேன்மொழி(1955), வெள்ளி (1957), புதினம்(1961), அறிவுக்களஞ்சியம்(1992) என்பனவாம்.

இவற்றுள் கவிதைக்காக வரதர் நடத்திய இதழ் தேன்மொழி என்பதாகும். 1955 இலிருந்து மாதம் ஒருமுறை வந்த இந்த இதழ் ஈழத்தின் முதலாவது தமிழ்க்கவிதை இதழ் என்ற பெருமைக்குரியது. இந்த இதழின் நிர்வாக ஆசிரியராக வரதரும் இணை ஆசிரியராக மஹாகவியும் விளங்கினர்.

1996இல் வரதர் எழுதி வீரகேசரியில் வெளிவந்த "யாழ்ப்பாணத்தார் கண்ணீர்" (குறுங்காவியம்) பின்னர் நூலாகவும் வெளிவந்தது. 1995 ஒக்ரோபர் 30ஆம் திகதி வலிகாமம் மக்கள் அனைவரும் தாம் வாழ்ந்த வீடுகளையும் தேடிய தேட்டங்களையும் கைவிட்டு எதிலிகளாக இடம்பெயர்ந்த சோகவரலாறு வரதரின் நீண்ட கவிதையாக

வெளிவந்தது. காலத்துக்குத் தேவையான ஓர் இலக்கியப் பணியை வரதர் இந்த நூல் மூலம் ஆற்றியுள்ளார்.

வரதர் எல்லாமாக 29 சிறுகதைகளை எழுதினார். அவற்றுள் அவருக்கு அதிக புகழைத் தந்தது கற்பு என்ற சிறுகதை. இக்கதை ஐம்பது வருடங்களுக்கு முன்னரே வெளிவந்த பெண்ணியச் சிந்தனைகொண்ட கதையாகும். வரதரின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் அடங்கிய தொகுதி கயமைமயக்கம் 1960இல் வெளிவந்தது.

வரதர் மூன்று குறுநாவல்களை எழுதியுள்ளார். அவை (1) வென்றுவிட்டாயடி இரத்தினா (2)உணர்ச்சி ஓட்டம் (3) தையலம்மா என்பனவாம்.

வரதர் ஒரு நாவலையும் எழுதியுள்ளார். காவோலையின் பசுமை என்ற அவர் எழுதிய நாவல் ஞாயிறு தினகரன் இதழில் 1998இல் தொடர்கதையாக வெளிவந்தது.

வரதரின் நூல்களாக பின்வரும் ஏழு நூல்கள் வெளிவந்துள்ளன. அவையாவன (1) நாவலர் (2) வாழ்கநீ சங்கிலி மன்னா (3) கயமை மயக்கம் (4) மலரும் நினைவுகள் (5) பாரதக்கதை (6) யாழ்பாணத்தார் கண்ணீர் (7) சிறுகதைப் பட்டறிவுக்குறிப்புகள் என்பனவாம்.

வரதரின் சுயசரிதை போன்று அமைந்த மலரும் நினைவுகள் நூல் பற்றி பேராசிரியர் சிவலிங்கராஜா குறிப்பிடுகையில், "40, 50களின் யாழ்ப்பாணச் சமூகத்தின் வரலாற்றுக் கோலங்களை மலரும் நினைவுகளாக ஆக்கித் தந்திருக்கிறார் வரதர். பண்பாட்டு விழுமியங்களைப் பகுத்தாய்வு செய்யும் சமூகவியல் ஆய்வாளர்களுக்கு ஒரு கையேடாக மலரும் நினைவுகள் அமைந்துள்ளது எனலாம்" என்கிறார்.

வரதர் தொழில் முறையில் அச்சக முகாமையாளராகவும், நூல் வெளியீட்டாளராகவும் பணிபுரிந்தவர். அவர் அச்சு இயந்திரப் பயன்பாட்டை அச்சுத் தொழிலாகக் கருதாது

அச்சுக் கலையாகப் பயன்படுத்தும் மனநிலையைக் கொண்டிருந்தார். அவரது வெளியீட்டகத்தின் மூலம் 33 நூல்கள் வெளிவந்தன. அவற்றுள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இலக்கியவழி, பேராசிரியர் கைலாசபதியின் இலக்கியமும் திறனாய்வும், செங்கை ஆழியானின் ஈழத்துச்சிறுகதை வரலாறு மற்றும் மஹாகவி, சாந்தன், முருகையன். சோமகாந்தன் ஆகியோரின் நூல்கள் உட்பட பல தரம்மிக்க எழுத்தாளர்களின் நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். பதினைந்து வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு வரதர் கதைமலர் தொடரில் தொடர்ந்து ஐந்து நூல்களை வெளியிட்டார். வரதரின் பலகுறிப்பு தமிழ் மக்களுக்குத் தேவையான பலவித விடயங்களைத் தொகுத்துத் தந்தது. இதனை ஆண்டுக்கு ஒன்றாக நான்கு பதிப்புகளை அவர் வெளியிட்டார்.

வரதரின் மறுமலர்ச்சி சஞ்சிகையில் வெளிவந்த 64 சிறுகதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 சிறுகதைகளை, செங்கை ஆழியான் மறுமலர்ச்சிச் சிறுகதைகள் என்ற மகுடத்தில் தொகுத்து நூலாக்கியுள்ளார் (1997). அதேபோன்று 51 கவிதைகள் அனைத்தையும் தொகுத்து செல்லத்துரை சுதர்சன் அவர்கள் மறுமலர்ச்சிக் கவிதைகள் என்ற மகுடத்தில் நூலாக்கியுள்ளார் (2006). மறுமலர்ச்சி சஞ்சிகையின் இணை ஆசிரியர் பஞ்சாட்சர சர்மா அவர்களது புத்திரர் கோப்பாய் சிவம் அவர்களும் திரு. செல்லத்துரை சுதர்சனும் இணைந்து மறுமலர்ச்சி இதழ்களின் தொகுப்பினை வெளிக்கொணர்துள்ளனர் (2016). இம்முயற்சிகள் யாவும் மறுமலர்ச்சி சஞ்சிகையின் முக்கியத்துவத்தை எடுத்தியம் புவனவாக உள்ளன.

ஈழத்தின் முதலாவது தமிழ் எழுத்தாளர் சங்கத்தை அமைத்து இலக்கியம் பற்றிய ஒரு குறிப்பிட்ட கருத்து நிலையோடு தொழிற்பட்ட முதலாவது இலக்கிய இயக்கமாக

மறுமலர்ச்சியை வழிநடத்தியமை, ஈழத்தின் நவீன இலக்கிய சஞ்சிகையாக மறுமலர்ச்சியை வெளிக்கொணர்ந்தமை, ஈழத்தின் புதுக்கவிதை மூலவராக விளங்கியமை, ஈழத்தின் முதலாவது கவிதை இதழை வெளிக்கொணர்ந்தமை போன்ற சாதனைகள் மூலமும் தனது படைப்புகள் மூலமும் ஈழத்து நவீன இலக்கியச் செல்நெறியை திசைவழிப்படுத்திய பெருமைக்குரியவர் வரதர். ஈழத்து இலக்கிய வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமையாகத் தடம்பதித்த சாஹித்யரத்னா வரதர் அவர்கள் *21-12-2006* அன்று அமரரானார். ஈழத்து இலக்கிய உலகில் அவரது நாமம் என்றும் நிலைத்திருக்கும்.

✱



# 2

# மரபும் நவீனமும் இணைந்த இலக்கிய ஆளுமை சொக்கன்

**2003**இல் அரச உயர் இலக்கிய விருதான சாஹித்யரத்னா விருதினைப் பெற்றவர் சொக்கன் என எழுத்துலகில் பிரபலம் பெற்ற க.சொக்கலிங்கம் ஆவார். அவருக்கான விருது 18-09-2003 அன்று கொழும்பில் இடம்பெற்ற கலைக்கழக விழாவில் வழங்கப்பெற்றது.

ஆவரங்காலில் 02.06.1930 அன்று பிறந்த சொக்கன் அவர்களின் தந்தை பெயர் கந்தசாமிச்செட்டி. தாயார் பெயர் மீனாட்சி. சொக்கனது மனைவிபெயர் தெய்வானை. சொக்கனுக்கு ஒரு வயதானபோது தந்தையை இழந்த நிலையில் கல்வி பயிலுவதற்காக தாயாரால் யாழ்ப்பாணம் நீராவியடிக்கு அழைத்து வரப்பட்டார்.

யாழ். இந்துக்கல்லூரி ஆரம்பப் பாடசாலை, நாவலர் பாடசாலை, ஸ்ரான்லிக் கல்லூரி, பலாலி ஆசிரிய கலாசாலை, பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவை சொக்கனைக் கல்வியாளராக

உருவாக்குவதில் பெரும் பங்குகொண்டன. பண்டிதர், வித்துவான், பட்டதாரி, முதுகலைமாணி, கலாநிதி என அவர் தனது கல்விப் புலமையை விரிவாக்கிக் கொண்டார்.

நவீன தமிழிலக்கியத்தில் சொக்கன் அவர்களின் பேனை தடம்பதிக்காத துறைகள் எதுவுமே இல்லை. சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை, விமர்சனம், சமயம், வானொலிச் சித்திரங்கள், பாடநூல்கள், பாடநூல் வழிகாட்டிகள், மொழி பெயர்ப்புகள் எனப் பல்துறைகளிலும் அவர் ஆழமாகவும் அகலமாகவும் தடம்பதித்தார்.

இவர் 14ஆவது வயதில் எழுதிய முதற் சிறுகதை "தியாகம்" 1944 இல் வீரகேசரியில் பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து இவர் எழுதிய "வேதாந்தி" என்ற விவரணச் சித்திரம் ஈழகேசரியில் பிரசுரமாகியது. அடுத்து மறுமலர்ச்சி சஞ்சிகையில் குப்பையிலே மாணிக்கம், பொன்பூச்சு ஆகிய சிறுகதைகள் வெளியாகின.

இக்காலகட்டத்தில் நாடகம் எழுதும் முயற்சியிலும் சொக்கன் ஈடுபட்டார். முதலில் ஷேக்ஸ்பியர் எழுதிய வெனிஸ் வர்த்தகன் (Merchant of Venis) என்ற கதையைத் தழுவி நாடகமாக்கினார். அந்த நாடகத்தின் மூலம் சொக்கன் நாடகாசிரியரானார்.

1946இல் அக்காலச் சஞ்சிகையான மின்னொளி ஒரு சிறுகதைப் போட்டியை நடத்தியது. சொக்கன் எழுதிய "கடைசி ஆசை" என்ற சிறுகதை முதற்பரிசைத் தட்டிக்கொண்டது.

1961இல் இவர் எழுதிய பிரயாணம் என்ற சிறுகதை தினகரன் நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றது. சொக்கனின் தபாற்காரச்சாமியார் என்ற சிறுகதை 1966இல் வீரகேசரிச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசினைப் பெற்றது.

சொக்கன் தனது வாழ்நாளில் 200 சிறுகதைகள்வரை எழுதியுள்ளார். அவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான கடல் 1972ஆம் ஆண்டிற்கான இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. 1998 - 2004 காலப்பகுதியில் ஆக்கப்பட்ட 10 சிறுகதைகள் அடங்கிய தொகுதி கிழவரும் கிழவியும் என்பதாகும்.

சொக்கன் அவர்கள் ஈழகேசரிக் காலத்தில் எழுதத் தொடங்கினார். மறுமலர்ச்சிக் காலத்திலும் தொடர்ந்தார். முற் போக்குக் காலகட்டத்தில் அவரது எழுத்துக்கள் முனைப்புப் பெற்றன. தமிழ்தேசிய எழுச்சிக் காலகட்டத்திலும் அவர் காலத்தின் கண்ணாடியாக எழுதினார்.

1987இல் நடைபெற்ற இந்திய அமைதிப்படையின் இராணுவத் தாக்குதல்களின் நிகழ்வுகளை பின்னணியாகக் கொண்டு முதன்முதலில் சிறுகதை புனைந்தவர் சொக்கனே. (ஆலயமணி ஆனி 1988 இதழில், அழைப்பு என்ற மகுடத்தில் இக்கதை பிரசுரமானது.)

சொக்கனது பல்துறை இலக்கியப் பங்களிப்பில் சிறுகதைத் துறைக்கு ஆற்றிய பணி ஆறு தசாப்தங்களைக் கடந்ததாகும்.

சொக்கனின் கவிதைகள் மரபுவழிக் கவித்துவ ஆற்றலும் ஓசைச்சிறப்பும் கற்பனையும் நிறைந்தவை. வீரத்தாய், நசிகேதன், முன்னீச்சர வடிவாம்பிகை அந்தாதி, நல்லூர் நான்மணிமாலை அப்பரின் அன்புள்ளம் நெடுப்பா-3, நல்லூர்க் கந்தன் திருப்புகழ், சைவப் பெரியாரின் சால்பை உரைத்திடு வோம் என்பன இவரது கவிதை நூல்களாகும். இவற்றுள் நல்லூர்க்கந்தன் திருப்புகழ் இந்தியாவில் வெளிவந்த பன்னிரண்டு தொகுதிகள் அடங்கிய சிறப்புத் தொகுதி ஒன்றில் இடம்பெற்றுள்ளது. நசிகேசன் என்ற நெடும்பா 1966இல் கல்கி தீபாவளிமலரில் வெளிவந்து பலரின் பாராட்டினைப்பெற்றது.

நெடுப்பா - 3 என்பது கதைப் பாடற்தொகுதியாகும். இத்தொகுதி 1986இல் இலங்கை இலக்கியப் பேரவையின் பாராட்டுச் சான்றிதழைப் பெற்றது. தமிழும் சைவமும் சொக்கனின் கவிதைகளின் உள்ளடங்கல்களாக அமைந்தன.

“சொக்கன் நூலறி புலவர் ஆகையால் செய்யுள் வடிவம்பற்றிய முழு விளக்கம் அவரிடம் உண்டு. யாப்பின் வழுக்களை சொக்கனின் ஆக்கங்களில் காண்பது அரிது. ஓசை வழுக்கள் மாத்திரமன்றி வாக்கிய வழுக்களையும் சொக்கனின் எழுத்துக்களில் காணமுடியாது” என்பது கவிஞர் முருகையனின் கணிப்பீடாகும். (ஞானம் பெப்ரவரி 2005 - செங்கை ஆழியான்)

சொக்கனின் நாடக நூல்களாக சிலப்பு பிறந்தது, சிங்க கிரிக்காவலன், தெய்வப்பாவை மாருதப்புரவிகவல்லி, மானத் தமிழ்மறவன் ஆகியவை வெளிவந்துள்ளன. இந்த நாடகங்கள் நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்றவை. 20க்கும் மேற்பட்ட நாடகங்களை சொக்கன் எழுதியுள்ளார். இவருடைய நாடகங்களில் பல இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பப் பட்டன.

1960இல் சிலம்பு பிறந்தது என்ற நாடகப் பிரதியும் 1961 இல் சிங்ககிரிக் காவலன் என்ற நாடகப் பிரதியும் இலங்கை கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுவின் பரிசினைப் பெற்றன.

ஆக்கத்துறையில் மாத்திரமன்றி ஆராய்ச்சிலும் ஈடுபாடு காட்டியவர் சொக்கன். ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி என்னும் தலைப்பில் பேராசிரியர் சு.வித்தியானந்தனுடைய மேற்பார்வையில் இவர் சமர்ப்பித்த ஆய்வேடு, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முதுமாணிப் பட்டத்தை இவருக்குப் பெற்றுக்கொடுத்தது. ஈழத்துத் தமிழர் கலைகளுள் ஒன்றாகிய நாடகக்கலைபற்றி விரிவாகவும் ஆராய்ச்சி நெறியுடனும் முதன்முதலில் எழுதிய இந்த நூல் 1978இல் சாகித்திய விருதினைப் பெற்றது.

ஈழத்து நவீன நாவல் இலக்கிய வரலாற்றில் சுதந்திரத்திற்குப் பின் சாதியத்தினைக் கருவாகக் கொண்டு முதன் முதலாக நாவல் படைத்த பெருமை சொக்கனுக்கு உரியது. அவர் எழுதிய சீதா அத்தகைய சிறப்பினைப் பெற்ற நாவலாகும். சாதிப்பிரச்சினையை உயர் சாதியினர் எனப்படுபவர்களின் அடக்கு முறைக்கெதிரான தாழ்த்தப்பட்டோரின் வர்க்க ரீதியான எழுச்சியாக அணுகிய செ. கணேசலிங்கன், டானியல் என்போரின் நாவல்கள், சொக்கனின் சீதா நாவலுக்குப் பின்பே எழுதப்பட்டன. இவர் எழுதிய முதலாவது நாவல் மலர்ப்பலி 1949இல் ஈழகேசரியில் தொடராக வெளிவந்தது. செல்லும்வழி இருட்டு, ஞானக்கவிஞன், சலதி என்பன சொக்கன் படைத்தளித்த ஏனைய நாவல்களாகும். "சலதி" இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசினை 1987இல் பெற்றுக்கொண்டது.

படிப்படியாக சொக்கனின் அறிவும் ஈடுபாடும் வளர்ந்தன. ஆங்கிலத்தில் இலக்கியம் பற்றி எழுந்த நூல்களை ஆங்கில மொழியின் மூலமாகவும் மொழிபெயர்ப்பாக வந்த நூல்களாகவும் கற்கும் அவா மிகுந்தது. அதன்விளைவாக பல மொழிபெயர்ப்புகளையும் நேரடியாகச் செய்தார். இது இவரின் ஆக்கங்களில் பாரிய தெளிவினை ஏற்படுத்தியது.

வங்க நாவலான சத்தியஜித்ரேயின் பத்திக்சந்த் சொக்கனால் தமிழாக்கப்பட்டது. "சொக்கனது மொழிபெயர்ப்பு முயற்சியாக அமையும் பத்திக்சந்த் ஈழத்துச் சிறுவர் இலக்கியத்துக்கு அவர் செய்த முக்கிய பங்களிப்பாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி நா. சுப்பிரமணியன்.

சொக்கன் எழுதிய கட்டுரைகள் ஏராளமானவை. அவரது கட்டுரைத் தொகுப்புக்களாகப் பத்துத் தொகுதிகள் வரையில் வெளிவந்துள்ளன. அவை, பொதுவிடயங்கள் ஆய்வுகள், பாடநூல் வழிகாட்டிகள், சமயக் கட்டுரைகள், வாழ்க்கை

வரலாற்றுச் சுருக்கம் எனப் பலவகைப்பட்டன. ஈழத்து எழுத்தாளர்களில் அதிக நூல்களை எழுதியவர்களுள் ஒருவராக சொக்கன் கணிக்கப் படுகிறார்.

இவர் எழுதிய இலக்கணத் தெளிவு மாணவர்கள் தமிழ் இலக்கண விதிகளை இலகுவான முறையிலே கற்பதற்கு உதவக் கூடிய நூல் எனப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

சொக்கன் தொழில் முறையில் ஆசிரியராக (1952 - 1972) அதிபராக (1973 - 1982) இலங்கை கல்வி நிர்வாக சேவையாளராக, கொத்தணி அதிபராக (1982 - 1990) விளங்கியுள்ளார்.

அரசினர் பாடநூல் வெளியீட்டு ஆலோசனைக்குழு உறுப்பினராகக் கடமையாற்றி தமிழ், சைவநெறி ஆகிய துறைகளுக்கு அளப்பரிய பங்காற்றியவர். சைவநெறி பத்தாம் பதினோராம் பாடநூல்களின் எழுத்தாளராகவும் இருந்துள்ளார்.

இடையாற்று விரிவுரையாளராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை (1976-1979) பலாலி ஆசிரிய கலாசாலை (1982-1983) என்பவற்றிலும் இடைவரவு விரிவுரையாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் (1992-1993) பணிபுரிந்துள்ளார்.

பொதுச் சேவைகளில் 1959ஆம் ஆண்டு காலகட்டத்தில் யாழ். தமிழ் எழுத்தாளர் சங்கம் என்னும் இலக்கிய நிறுவனத்துடனும், 1964ஆம் ஆண்டில் இலங்கை கம்பன் கழகத்துடனும், 1965-1974 காலப்பகுதியில் அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்துடனும், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்துடனும், அகில இலங்கைத் திருக்குறள் மன்றத்துடனும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையுடனும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடனும், நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்துடனும், முத்தமிழ் வெளியீட்டுக்

கழகத்துடனும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்துடனும் இதுபோன்ற பல நிறுவனங்களுடனும் தொடர்புகொண்டு சொக்கன் பணியாற்றியுள்ளார்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் செயற்குழு உறுப்பினருள் ஒருவராய் இருந்த காலகட்டத்தில் எழுந்த இலக்கியச் சமரில் “மரபு, தேங்கிய குட்டையல்ல” என்பதை மரபு நெறிநின்று ஆதார பூர்வமாக எடுத்துரைத்து அக்கருத்தை வலுப்பெறச் செய்த பெருமை சொக்கன் அவர்களுக்கே முதன்மையாக உரியது. இது தொடர்பாக இவர் எழுதிய கட்டுரைகள் பல தினகரனில் தொடர்ந்து வெளியாயின.

“சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்த சொக்கன் இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் இடம்பெறும் சமய இலக்கிய விழாக்களில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வெளியிடுவார். காலையில் முற்போக்கு இலக்கியக் கூட்டத்தில்பேசும் சொக்கன் மாலையில் சமயச் சொற்பொழிவாற்றுவார்” எனக்குறிப்பிட்டுள்ளார் முதுபெரும் எழுத்தாளரான முல்லைமணி.

சொக்கன் மாதம் ஒரு நூல் அல்லது வாரம் ஒரு நூல் எழுதும் ஆற்றலும் அமைதியும் வாய்க்கப்பெற்றவர். அவர் இரவிலே வானத்தைப்பார்த்து சமயக்கட்டுரைகள் எழுதிவிட்டு காலையில் பூமியைப்பார்த்து முற்போக்குக் கதைகள் எழுதுபவர்” எனக் குறிபிட்டுள்ளார் பேராசிரியர் நந்தி. (மல்லிகை மார்ச் 1980- அட்டைப்படக்கட்டுரை)

சொக்கனின் கருத்தியல் நோக்கில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியவர் திரு. த. இராஜகோபாலன் ஆவார். இவர் பொதுவுடமைக் கருத்துக்களைக் கொண்டவர். 1940, 1950 களிலே இவரைச் சூழ்ந்து ஓர் எழுத்துலகப் படையே காணப்பட்டது எஸ்.பொ., டானியல், டொமினிக் ஜீவா இ. நாகராஜன் மற்றும் பிற்காலத்தில் முற்போக்கு எழுத்தாளர்கள்

என்று பெயர்சூட்டிக் கொண்டவர்கள் பலருக்கு ஆதர்ஷ புருஷராக விளங்கியர் இவர். “இராஜகோபாலனின் தொடர்பின் பிரதிபலிப்பை ஈழகேசரியிலும் மறுமலர்ச்சியிலும் 1940இன் கடைக்கூற்றில் வந்த சொக்கனின் படைப்புகளில் காணலாம்” எனக் குறிப்பிட்டுள்ளார் எழுத்தாளர் செம்பியன் செல்வன்.

சொக்கன், ஆராவமுதன், அடியவன், வேனிலான், தேனீ, சுடலையூர்க் சுந்தான், பொய்யாம் மொழியார், சோனா, திரிபுராந்தகன், கன்றுக்குட்டி, ஈழத்துப் பேய்ச்சாத்தன், குறளன், ஞானம், ஜனனி, சாம்பவன், சட்டம்பியார், எதார்த்தன், பாலன் ஆகிய புனைபெயர்களில் எழுதியுள்ளார்.

சொக்கனது இலக்கியப் பணிகளை பல்வேறு நிறுவனங்கள் விருதுவழங்கிக் கௌரவித்துள்ளன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை தமிழ்மாமணி என்ற பட்டத்தையும் இந்து கலாசார அமைச்சு இலக்கியச் செம்மல் என்ற பட்டத்தினையும் நல்லூர் தமிழிசைச் சபை குகஸ்ரீ என்ற பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலக்கியக்கலாநிதி என்ற பட்டத்தையும் இலங்கை அரசு சாஹித்தியரத்னா விருதையும் வழங்கிக் கௌரவித்தன.

மரபும் நவீனமும் இணைந்த இலக்கிய ஆளுமைமிக்க சொக்கன் அவர்கள் 02-10-2004 அன்று அமரரானார்.

❋



# 3

# ஈழத்து இலக்கியத்துறையில் ஒரு பேராளுமை பேராசிரியர் கா. சிவத்தம்பி

**2004**ஆம் ஆண்டுக்கான அரச இலக்கிய உயர்விருதான சாஹித்யரத்னா விருதினைப் பெற்றவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி.

பண்டிதரும் சைவப்புலவருமான ஆசிரியர் பொ. கார்த்தி கேசுவுக்கும் வள்ளியம்மைக்கும் 10.05.1932இல் மகனாகப் பிறந்த சிவத்தம்பி அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் பெற்றவர். இடைநிலைக் கல்வியை கொழும்பு ஸாகிராக் கல்லூரியிலும் உயர்கல்வியை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பெற்றவர்.

பின்பு ஸாகிராக் கல்லூரியில் 1956 முதல் 1961 வரை ஆசிரியராகப் பணிபுரிந்தார். அதனைத்தொடர்ந்து பாராளுமன்ற சமகால மொழிபெயர்ப்பாளராக 1961 முதல் 1965வரை பணியாற்றினார். அதன்பின் வித்தியோதயப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளரானார். பெர்மிங்காம்

பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் தொம்சனின் கீழ் (Drama in Ancient Tamil Society) "பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்" என்ற ஆய்வினைச் செய்து பட்டம் பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

ஸாகிரா கல்லூரியில் எச்.எஸ்.ஸி. வகுப்பில் படித்துக் கொண்டு இருக்கும் போதே சிவத்தம்பி அவர்கள் வானொலி நாடகங்களில் நடித்தார். பின்னர் பல்கலைக்கழகத்தில் இருக்கும்போதும் வானொலி நாடகங்களில் பங்கேற்பதை அவர் கைவிடவில்லை. இலங்கையர்கோன் எழுதிய 'விதானையார் வீட்டில்' என்ற புகழ்பெற்ற தொடர் நாடகத்தில் விதானையாராக நடித்துப் புகழ் பெற்றார். அதேகாலப்பகுதியில் மேடை நாடகங்களிலும் நடித்து வந்தார். இந்த நாடக அறிவே பின்னர் வெளிநாட்டில் நாடகம் பற்றிய ஆய்வை அவர் மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமைந்தது. பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் கணபதிப் பிள்ளை ஆகியோரின் மாணவராக இருந்து இவர்களது வழிகாட்டலில் மரபுவழி நாடகங்களையும் நவீன நாடகங்களையும் ஒருசேர வளர்த்ததோடு பிற்பட்ட காலத்தில் நாடகத்தை ஒரு கல்வி நெறியாக்கவும் முயற்சிகள் மேற்கொண்டார். பல்கலைக் கழகத்தில் "நாடகமும் அரங்கியலும்" என்ற பட்டப்படிப்பு பாடநெறியினை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார்.

பேராசிரியர் 1963இல் ரூபவதியைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு கிருத்திகா பாலசேகர், தாரணி புவன், வர்த்தனி என மூன்று பெண்பிள்ளைகள்.

பழந்தமிழ் இலக்கிய இலக்கணம், நவீன இலக்கியம், மொழியியல், தமிழ் நாடகம், இலக்கியவரலாறு, தமிழர் பண்பாடு, அரசியல், பொருளாதாரம், தொடர்பாடல், இதழியல், நாட்டாரியல், வானொலி, இசைத்துறை, சமூகவியல் ஆகிய துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள், தமிழ் மொழி சார்ந்த இலக்கியங்களை

உலகளாவிய இலக்கியங்களுடனும் இலக்கியச் சிந்தனைகளுடனும் ஆராய்ந்தார். அவருக்கிருந்த ஆங்கில அறிவு இத்தகைய ஒப்பியல் ஆய்வுக்கு வழிசமைத்தது.

"பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கொம்யூனிஸ்ட் கட்சிச்சார்பு அவர் எழுத்துக்கு சித்தாந்தத்தை நல்கியது. அத்தோடு ஒரு பரந்துபட்ட நண்பர்கள் கூட்டத்தையும் பெற்றுக்கொடுத்தது. சிங்களமொழி அறிவு மேலும் இதற்கு உதவியது. ஆங்கிலமொழி அறிவு அவரை உலகறிய வைத்தது." என்கிறார் பேராசிரியர் அ. சண்முகதாஸ்

பொதுவாகப் பேராசிரியர்கள் என்றால் தமது துறைசார்ந்த ஒரு கூறினை ஆய்வு செய்து அத்துறையில் அறிஞர்களாக இருப்பர். ஆனால் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களோ தமது பல்துறைச் சங்கம ஆய்வு (Multi Disciplinary Approach) காரணமாக பல்வேறு துறைகளில் இயங்கிப் புகழ் பூத்த பன்முக ஆளுமையாளராகத் திகழ்ந்தார். பல்கலைக் கழகங்களில் உள்ளோரும் ஏனையோரும் தமக்கு ஏற்படும் புலமைசார் சந்தேகங்களுக்குத் தீர்வுகாணப் பேராசிரியரைச் சந்தித்தோ அல்லது அவருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோ ஆலோசனை பெறும் வழக்கம் இருந்தது. எவருக்கும் எவ்வேளையிலும் அறிவை வழங்கும் அட்சய பாத்திரமாக அவர் திகழ்ந்தார்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தஞ்சைப் பல்கலைக் கழகம், ஸ்கன்டினேவியா பல்கலைக் கழகம், உப்சலா பல்கலைக் கழகம், அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா, பெர்கிளி, விஸ்கான்ஸியன், ஹாவார்ட் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிலும் வருகைப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

1962 இறுதியில் ஆரம்பித்து 1963இல் ஈழத்தமிழ் இலக்கியத்தின் திருப்புமுனையாக அமைந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மரபுப் போராட்டத்தில் பேராசிரியர் கைலாசபதியுடன் இணைந்து இவர் ஆற்றிய பணி மகத்தானது. 1962 டிசம்பரில் சிவத்தம்பி எழுதிய "அசையாத

குட்டை நீரல்ல மரபு" என்ற கட்டுரையே மரபுப் போராட்ட விவாதத்துக்கான தொடக்கப்புள்ளியாக அமைந்தது. எதிரணியில் பேராசிரியர் ஆ.சதாசிவம் இவ்விவாதத்தைத் தொடக்கி வைத்தார். ஈழத்து இலக்கிய வரலாற்றில் மிக உச்சமான தர்க்கமாக இவ்விவாதம் அமைந்தது. மார்க்சிய ஒளியில் தமது விமர்சனப் பார்வையைச் செலுத்தும் பேராசிரியர் தமிழ் விமர்சனத் துறையிலும் பல புதிய கோணங்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டியவர்.

"மார்க்ஸிய இலக்கியநோக்கை விளக்கியுரைக்கும் தத்துவவாதியாகவும் முற்போக்கு இலக்கிய அணியின் தளகர்த்தாவாகவும் அவர்செயற்பட்டு நின்றார். அம்முயற்சி களை நாகரீகமான விவாத அணுகுமுறையுடன் அவர் மேற்கொண்டார்" என்று குறிப்பிடுகின்றார் கலாநிதி நா. சுப்பிரமணியன்.

ஏறத்தாழ நாற்பத்தாறு நூல்கள், பிரசுரங்கள், ஐம்பதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றை இவர் எழுதியுள்ளார். தமிழ் இலக்கியத்துறை சார்ந்து அவரது முக்கிய நூல்களாக தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், ஈழத்துத் தமிழ் இலக்கியம், நாவலும் வாழ்க்கையும், இலக்கியத்தில் முற்போக்குவாதம், தமிழில் இலக்கியவரலாறு ஆகிய நூல்களைத் தந்துள்ளார். பேராசிரியர் எழுதிய இலக்கணமும் சமூகமும், மலையகத்தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும் "யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு, கருத்துநிலை", இலங்கைத் தமிழர் - யார், எவர்? இலக்கியத்தில் மதமும் கவிதையும் ஆகிய நூல்களும் முக்கிய நூல்களாகக் கருதப்படுகின்றன. பேராசிரியர் ஏறத்தாழ 11 ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார்.

"எது காரணமாகவோ பேராசிரியர் சிவத்தம்பியவர்கள், சாமானிய தமிழ் வாசகர்களால் 'நவீன தமிழறிஞர்' அல்லது 'நவீன இலக்கிய விமர்சகர்' என்ற வகையிலான ஒரு மனப்பதிவோடே உணரப்படுகிறார். ஆனால் அவர் அதிகம்

ஈடுபட்டது பழைய, இடைக்காலத்தைய தமிழிலக்கிய, இலக்கணங்களிலேயே எனலாம். பட்டப் பின்படிப்புக்கான ஆய்வுகளுக்கும் அவர் பழந்தமிழிலக்கியங்களையே நாடிச் சென்றார். அவருடைய கலாநிதிப்பட்ட ஆய்வு 'புராதன தமிழ்ச் சமுதாயத்தில் நாடகம்' என்றவாறாகவே அமைந்தது. அந்த ஆய்வு சங்க இலக்கியங்களையும் சிலப்பதிகாரத்தையும் மிக நுணுக்கமாகப் பரிசீலித்து மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வாகும்." எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி க.இரகுபரன். (பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி பவளமலர், ஞானம் மே 2007)

தமிழாராய்ச்சி மாநாடுகள் உலகில் எப்பகுதியில் நடந்தாலும் அங்கு பேராசிரியர் சிவத்தம்பியின் பங்களிப்பும் இருக்கும். வெளிநாடுகளில் நடைபெற்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வு மாநாடுகளில் பங்குபற்றி அவர் எமது நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

"நவீன புனைகதை இலக்கியத்தினதும், கவிதை இலக்கியத்தினதும், நவீன நாடக அரங்கியலினதும் செல்நெறிகளைச் சுட்டிக்காட்டியவர்களில் முதன்மையானவர் பேராசிரியர் சிவத்தம்பிதான்" எனக் குறிப்பிடுகின்றார் செங்கையாழியான்.

மார்க்ஸிஸ்ட் ஆக இருந்த சிவத்தம்பி பிற்பட்ட காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகினார். அதற்கான விளக்கத்தையும் அவர் கூறியுள்ளார். "மார்க்ஸிஸ்டுகள் அரசாங்கத்தோடு சேர்ந்து மொழிக்கொள்கையை மாற்றியதால் ஏற்பட்ட விளைவு என்னவெனில், பாராளுமன்றம் சிங்களம் தமிழ் என்று பிரிந்தது. மார்க்ஸிய அரசியல் செயற்பாடுகளின் தோல்வி காரணமாக இந்த நாடு முற்றுமுழுதாக சிங்கள அரசாங்கம் - தமிழ் எதிர்ப்பு என்று வந்துவிட்டது. அதன் பிறகு நான் தொடர்ந்து கட்சியில் இருக்கவில்லை" (ஞானம் நேர்காணல்).

பிற்பட்ட காலத்தில் சிவத்தம்பியின் கருத்தியலில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அவர் தமிழ்த்தேசியக் கருத்தியலின் ஆதரவாளரானார். 80க்குப் பிற்பட்ட இலக்கியச் செல்நெறிகள் பற்றிக் கூடிய கவனம் செலுத்தினார்.

“எண்பதுகள் இந்த நாட்டின் வரலாற்றில் ஒரு பிரிகோடு. இந்தக் காலகட்டத்திற்கு முற்போக்கு இலக்கியம் தனக்கெனப் போட்ட பாதை யாது? 60களில் வகுத்ததுபோல ஈழத்து இலக்கியத்தில் யதார்த்தத்துக்கு வந்ததுபோல, நாங்கள் இந்த அரசியல் யதார்த்தத்தைப் பற்றியும் பேசவேண்டும். இந்த இனவிடுதலைப் போராட்டம் முக்கியமானது. இது மானிட விடுதலைக்கான போராட்டம். தமிழர் போராட்டம் முன்னர் சமூக ஒடுக்கு முறைக்குப் பழக்கப்பட்டது. இப்போது இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டியுள்ளது” என்று தனது கருத்துநிலை மாற்றத்துக்கான காரணத்தைக் கூறியுள்ளார் சிவத்தம்பி. (ஞானம் நேர்காணல்)

பேராசிரியர் அவர்கள் தமிழுக்கு மட்டும் தொண்டு செய்தவரல்லர். தமிழருக்கும் தொண்டு செய்தவர். 84-86 காலப்பகுதியில் வடக்கு கிழக்கு பிரதேசத்தின் பிரஜைகள் கண்காணிப்புக் குழு ஒன்றியத்தின் தலைவராகப் பணியாற்றியவர். போர் மிகவும் உக்கிரமடைந்த நிலையில் மிகவும் ஆபத்தான சூழலில் தமது உயிரைத் துச்சமாக மதித்து மக்கள் படுகின்ற கஷ்டங்களையும் படையினரால் இழைக்கப்படும் குற்றங்களையும் தளபதிகளுக்கு எடுத்துக் கூறியும் அரச மட்டத்திற்கு எடுத்துச் சென்றும் பணிபுரிந்தவர். 86-98 காலப் பகுதியில் தமிழ்மக்கள் அல்லலுற்று அகதிகளாக அலைக்கழிந்த வேளையில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவராக இருந்து பேராசிரியர் ஆற்றிய பணி அளப்பரியது.

பேராசிரியர் அவர்கள் பல சஞ்சிகைகளுக்கும் பத்திரிகைகளுக்கும் ஐம்பதுக்கும் மேற்பட்ட நேர்காணல்களை

வழங்கியுள்ளார். அவற்றுள் ஞானம் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணல் மிக விரிவானது; தனித்துவமானது. பேராசிரியரின் 50 வருட கால இலக்கிய ஈடுபாட்டைப் பதிவு செய்த முக்கிய ஆவணமாக இது திகழ்கிறது.

பேராசிரியரின் இலக்கியப் பணிகளுக்காக, 1998இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு டி.லிற். பட்டம் வழங்கிப் பெருமை பெற்றது. அதே ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண சபை ஆளுநர் விருதைப் பேராசிரியருக்கு வழங்கியது. அதேபோன்று, இலங்கை ஜப்பான் நட்புறவுக்கழகத்தின் பங்கா விருது **(BANKA)**ம் 1998இல் இவருக்கு வழங்கப்பட்டது. அனைத்துக்கும் மேலாக தமிழ்நாடு அரசு பேராசிரியருக்கு திரு.வி.க.விருதினை 2000ஆம் ஆண்டு வழங்கிப் பெருமை கொண்டது. இவ்விருதினைப் பெற்ற ஒரே இலங்கையர் பேராசிரியர் சிவத்தம்பி மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி பல்துறை அறிஞராகத் திகழ்ந்தார். ஈழத்து நவீன இலக்கியச் செல்நெறிக்கான கருத்தியலை திசைமுகப்படுத்தியதில் அவரது பங்கு அளப்பரியதாக இருந்தது. சிவத்தம்பி அவர்கள் 06-07-2011 இல் அமரரானார். அதன்பின் ஈழத்து இலக்கிய உலகில் அவரைப்போன்ற ஒரு பேராளுமையின் இடம், வெற்றிடமாகவே உள்ளது.

அரச சாஹித்திய விருதைப் பெற்றுக்கொள்ள பேராசிரியர் விருது வழங்கும் விழாவிற்குச் சமூகம் அளிக்காத காரணத்தால், அந்த விருதினை அன்றைய கலாசார அமைச்சர் விஜித ஹேரத் பேராசிரியரின் இல்லத்துக்கு நேரில் சென்று கையளித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

✱



# 4

# ஈழத்து இதழியல் சாதனையாளர் டொமினிக் ஜீவா

**2005**ஆம் ஆண்டுக்கான அரச சாஹித்தியரத்னா உயர்விருதைப் பெற்றவர் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா. யாழ்ப்பாணத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் 27-06-1927இல் பிறந்த டொமினிக் ஜீவாவின் தந்தை அவிராம்பிள்ளை ஜோசப் யாழ் நகரில் சலூன் நடத்தியவர். தாய் பெயர் ஜோசப் மரியம்மா.

டொமினிக் ஜீவா ஐந்தாம் வகுப்புவரை யாழ். சென்ற் மேரிஸ் பாடசாலையில் படித்தவர். இவரது இலக்கியப் பிரவேசத்திற்குக் காரணம் அவர் ஆரம்பப் பள்ளி மாணவனாக இருந்தபோது அந்தப் பிஞ்சுப் பருவத்திலே அவரது இதயத்திலே விழுந்த அடி. வகுப்பறையில் ஆசிரியர் கரும்பலகையில் போட்ட கணக்கு தவறானது என்பதைச் சுட்டிக் காட்டினார் மாணவனான ஜீவா. சகமாணவர்கள் வகுப்பறையே அதிரும்படி சிரித்துவிட்டார்கள். ஆத்திரம் கொண்ட ஆசிரியர் ஜீவாவின் கையிலிருந்த நோட்டுப்

புத்தகத்தைப் பிடுங்கி இரண்டாகக் கிழித்து அவரது முகத்தில் எறிந்து "நீங்கள் எல்லாம் ஏண்டா படிக்க வந்தீர்கள். சிரைக்கப் போவதுதானே!" என்று ஜீவாவின் பிறப்பை, தந்தை செய்த தொழிலைச் சுட்டிக்காட்டியபோது ஜீவாவின் இதயத்தில் விழுந்த காயந்தான் கனன்று கனிந்து அவரது எழுத்தில் எரிகிறது.

ஆரம்ப காலத்தில் பொதுவுடமைச் சித்தாந்த நூல் களை வாசிப்பதற்கு ஜீவாவுக்கு உதவியவர் திரு.ஆர். ஆர். பூபாலசிங்கம், திரு. பொன் கந்தையா, கார்த்திகேசன், லிங்கன் ஆகியோராவர். இவர்களின் வழிகாட்டலில் ஜீவா கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கொண்டார்.

1948இல் தமிழகத்திலிருந்து இலங்கை வந்து தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்ட தோழர் ப. ஜீவானந்தத்தை சந்திக்கும் வாய்ப்பு டொமினிக் ஜீவாவுக்கு ஏற்பட்டது. அச்சந்திப்பே ஜீவாவின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் ஜீவாவிடம் சாதியுணர்வு மேலோங்கியிருந்தபோதிலும் வெகு விரைவிலேயே தான்வாழும் சமூகத்தின் சமூக பொருளாதார ஒடுக்கு முறைகளையும் தெரிந்து கொண்டார். மார்க்சியக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு ஜீவாவின் எழுத்துப்பணி பரிணமிக்க வழிகாட்டியவர் ப. ஜீவானந்தம். அவர்மீது கொண்ட பக்தியினால், டொமினிக் என்ற தனது பெயருடன் ஜீவா என்ற பெயரையும் இணைத்துக் கொண்டு டொமினிக்ஜீவா என எழுத்துலகில் இவர் இயங்கத் தொடங்கினார்,

"சலூன் தொழிலாளியாகிய நான், அந்தச் சவரச் சாலையை சர்வகலாசாலையாக நினைத்தேன்., மதித்தேன், படித்தேன், இயங்கினேன்", எனக்குறிப்பிட்டுள்ளார் டொமினிக்ஜீவா. சிகை அலங்கரிப்பாளராக வாழ்க்கையை ஆரம்பித்த ஜீவா பிற்பட்ட காலத்தில் முற்போக்கு இலக்கியத்திற்கு உழைப்பதையே தனது முழுநேரப் பணியாகக் கொண்டார்.

1948ஆம் ஆண்டில் தனது இருபதாவது வயதில் ஜீவா எழுதிய முதற்கதை 'எழுத்தாளன்' சுதந்திரனில் பிரசுரமாகியது. 1956ஆம் ஆண்டில் சுதந்திரன் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியொன்றில் முதற்பரிசினை ஜீவா பெற்றுக்கொண்டார். ஆரம்பத்திலிருந்து அவரை வளர்த்து நிலைப்படுத்திய பெருமை சுதந்திரன் பத்திரிகைக்கே உரியது.

ப. ஜீவானந்தத்தின் சந்திப்புக்குப்பின்னர் ஜீவா தனது தமிழ்நாட்டு உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டார். விஜயபாஸ்கரனின் சரஸ்வதி என்னும் இலக்கிய சஞ்சிகை டொமினிக் ஜீவாவின் சிறுகதைகளுக்கு அதிகளவில் இடம் கொடுத்தது. சரஸ்வதி 10-11-58 இதழில் ஜீவாவின் நிழற்படத்தை அட்டையில் பதித்துப் பெருமைப்படுத்தியது. தமிழக இதழான தாமரையும் ஜீவாவின் கதைகளை ஏற்றுப் பிரசுரித்தது. 1968 ஜூலையில் வெளிவந்த தாமரை சிறுகதைச் சிறப்புமலர் ஜீவாவின் உருவத்தை அட்டையில் தாங்கி வெளிவந்து ஈழத்து எழுத்தாளர்களுக்குக் கௌரவத்தை ஏற்படுத்தியது. ஜீவாவின் தமிழக உறவு சரஸ்வதி, தாமரை ஆகியவற்றினூடாக மலர்ந்து, அவர் தமிழகத்துக்கு அடிக்கடி பயணித்துத் தனது நூல்களை தமிழகத்திலேயே பதிப்பிக்க வழிவகுத்தது.

இதே காலப்பகுதியில் இலங்கையில் 1956 ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து சமூக பொருளாதார நிலைகளால் இலங்கைத் தமிழரிடையே தேசிய உணர்ச்சி பிறந்தது. அதன்விளைவாக வர்க்க உணர்வுகள் தீவிர மடைந்தன. தேசிய விழிப்பும் வர்க்கப்போராட்டங்களும் மக்களிடையே பெரியதொரு சிந்தனை மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. அதன் தாக்கம் இலக்கியத்திலும் பிரதிபலித்தது. நாட்டின் பிரச்சினைகளை இலக்கியமாக்கவேண்டும் என்ற எண்ணக்கரு முனைப்புப் பெற்று தேசிய இலக்கியக்

கொள்கை தீவிரம் அடைந்தது. இந்தப்பின்னணியை நன்கு விளங்கிக்கொண்ட பேராசிரியர் க.கைலாசபதி 1957இல், தான் பணிபுரிந்த தினகரன் வழியாக இந்த எழுச்சியைத் தூண்டி வளர்த்தார். பேராசிரியர் சிவத்தம்பியும் மார்க்ஸியப் பின்னணியில் பெரும் பங்களிப்பு நல்கினார்.

1957 இல் தேசிய சாஹித்திய மண்டலம் உருவாக்கப்பட்டது. இக்காலகட்டத்திலேதான் டொமினிக் ஜீவாவின் 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற முதலாவது சிறுகதைத் தொகுதியை சரஸ்வதி ஆசிரியர் வெளியிட்டார். ஈழத்தின் தமிழ் இலக்கியம் தென்இந்தியத் தமிழ் இலக்கியத்தின் பிரதியாக அமையாது ஈழத்தின் மண்வாசனையைப் பிரதிபலிப்பதாக அமையவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஜீவாவின் சிறுகதைத் தொகுதி அமைந்தது.

1960இல் இச்சிறுகதைத் தொகுதி அவ்வாண்டின் சாஹித்திய மண்டலப்பரிசினைப் பெற்றது. அதுவே இலங்கையில் முதன்முதலில் நவீன புனைகதை இலக்கியத்திற்கான சாஹித்திய விருது பெற்ற நூலாகும். பரிசு பெற்றுவந்த ஜீவாவை யாழ். புகையிரத நிலையத்தில் 13-10-1961 அன்று மலர்மாலை அணிந்து வரவேற்றார் யாழ்நகரசபை முதல்வர் ரி. எஸ். துரைராசா அவர்கள்.

டொமினிக் ஜீவா பெற்ற இந்தப்பரிசு ஈழத்து மரபுவழி இலக்கியகர்த்தாக்களை சீற்றம் கொள்ள வைத்தது. பண்டித வர்க்கத்தினர் ஒன்றுசேர்ந்து பேராசிரியர் ஆ.சதாசிவம் தலைமையில் மரபுப்போராட்ட அணியொன்றை உருவாக்கினர். "சிறுகதையும் வசன கவிதையும் இலக்கியமாகா. இன்றைய சிறுகதைப்படைப்பில் இழிசினர் வழக்கு அதிகரித்துவிட்டது. பேச்சுத் தமிழுக்கு இடமளிக்கும் பொதுவுடமைவாதிகள் தமிழைக் கொலை செய்கிறார்கள்" என மரபுவாதிகள் வாதிட்டனர். ஈழத்து இலக்கிய வரலாற்றில் மிக உச்சமான

தர்க்கமாக இந்த மரபுப் போராட்டம் அமைந்தது. இந்தத் தர்க்கம் டொமினிக் ஜீவாவின் நூலுக்குப் பரிசு கிடைத்ததன் பின்னணியில் எழுந்தது.

இந்தப் போராட்டம், யாழ்ப்பாணத்தில் 1963இல் நடந்த சாஹித்திய விழாவில், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முட்டை எறிந்து கூட்டத்தைக் குழப்பிய நிகழ்வுடன் முடிவுற்றது. “எம்மை இழிசனர் என்று சாதியைக் குறித்துப் பேசினார்கள். அதனால் ஆத்திரமுற்று முட்டை அடித்தோம்” என்பது முற்போக்காளர் சிலரது வாதமாகும். “நாங்கள் இழிசினர் வழக்கு என்றுதான் கூறினோம். தொல்காப்பிய உரைகளில் இழிசினர் வழக்கு என்பது கீழ்நிலைக்குப் போனவர்களின் பேச்சுவழக்கைக் குறிப்பதாகும். இழிசனர் என்று நாங்கள் கூறவில்லை. அவர்கள் இதனைப் பிழையாக விளங்கிக்கொண்டார்கள்” என்று விளக்கினார் பேராசிரியர் ஆ.சதாசிவம்.

இத்தகையதொரு பின்புலம், டொமினிக் ஜீவாவுக்குக் கிடைத்த சாஹித்திய விருது, மக்களை இலகுவில் சென்ற டையும் நவீன உரைநடைப்புனைவு இலக்கியத்தை ஆக்க இலக்கியமாக ஈழத்தில் அங்கீகரிக்க வைத்தது.

1970இல் சாஹித்திய மண்டல உறுப்பினர் பதவியும் ஜீவாவுக்குக் கிட்டியது. இவரது ‘தண்ணீரும் கண்ணீரும்’ சிறுகதைத் தொகுதியை மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் எம்.ஏ. பாடத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டது. ருஷ்ய, செக்கோசிலவக்கிய, ஆங்கில, சிங்கள மொழிகளில் இவரது சிறுகதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

1966 ஆகஸ்ட்டில் மல்லிகை இதழைத் தோற்றுவித்தார் ஜீவா. மல்லிகை இதழ் நாற்பத்தாறு ஆண்டுகள் வெளிவந்தது. வேறு எந்த ஈழத்துச் தமிழ்ச்சிற்றேடும் நாற்பத்தாறு ஆண்டுகளை எட்டிப்பிடித்ததாகச் சரித்திரம் இல்லை. தமிழ்

இலக்கியத்துறையில் சிறுகதையாளர் டொமினிக் ஜீவாவைவிட மல்லிகை ஜீவா ஏற்படுத்திய தாக்கம் அதிகமானது.

மல்லிகை தோன்றிய காலத்திலிருந்து அச்சடித்த பிரதிகளை எடுத்துச்சென்று எவ்வித கூச்சமுமில்லாமல் தெருவில் இறங்கி, பலரிடம் நேராகவே கையளித்து மல்லிகையின் நேசசக்திகளை மாதாமாதம் நேரிலே சந்தித்து விநியோகிப்பது மல்லிகையின் தொடர் வருகைக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்திருக்கிறது.

மல்லிகை ஆரம்பித்து முப்பது ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணத்துப் போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து கொழும்புக்கு வந்த ஜீவா, மல்லிகைப் பந்தல் மூலம் பல தரமான நூல்களை வெளிக்கொணர்வதில் மும்முரமாக உழைத்தார். 50 நூல்கள்வரை வெளியிட்டார்.

05-02-1997 மல்லிகைக் காரியாலயம் கொழும்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின்னர் மீண்டும் மல்லிகை வெளிவரத் தொடங்கியது. டிசம்பர் 2012 வரை மல்லிகை வெளிவந்தது.

மல்லிகை இதழ் பல பிரதேசச் சிறப்பு மலர்களை வெளியிட்டுள்ளது. பல புதிய எழுத்தாளர்கள் மல்லிகை மூலம் இனங்கண்டு வளர்த்தெடுக்கப்பட்டார்கள். மல்லிகை பல இலக்கிய கர்த்தாக்களின் படங்களை அட்டையில் பொறித்து அவர்கள்பற்றிய விபரங்களையும் வெளியிட்டு அவர்களைக் கௌரவித்தது. சிங்கள எழுத்தாளர் சிலரையும் அட்டையில் பொறித்துக் கௌரவித்தார் ஜீவா. சிங்கள இலக்கிய வட்டாரத்தில் அதிகம் அறியப்பட்ட தமிழ் எழுத்தாளர் டொமினிக் ஜீவாதான்.

வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல் உடையுடன் காணப்படும் ஜீவா இதே உடையுடன் இந்தியப் பயணங்கள்,

சோவியத் யூனியன், ஐரோப்பிய நாடுகள் எனப் பல நாடுகளுக்கும் சென்று வந்ததோடு தனது பயண அனுபவங் களையும் மல்லிகையில் பதிவு செய்துள்ளார்.

'எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்' டொமினிக் ஜீவாவின் சுயசரிதை நூல். இதன் இரண்டாவதுபாகம் 'அச்சுத் தாளின் ஊடாக ஓர் அனுபவப் பயணம்' என்பதாகும். டொமினிக் ஜீவாவின் சுயசரிதை நூல் *UNDRAWN PORTRAIT FOR UNWRITTEN POETRY* என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப் பினராக இருந்த டொமினிக் ஜீவா பிற்பட்டகாலத்தில் அக் கட்சியில் சித்தாந்தப்பிளவு ஏற்பட்டபோது மொஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட்டாகச் செயற்பட்டார்.

டொமினிக் ஜீவாவின் நூல்களாக தண்ணீரும் கண்ணீரும் *(1960)*, பாதுகை *(1962)* சாலையின் திருப்பம் *(1967)* வாழ்வின் தரிசனங்கள், டொமினிக் ஜீவா சிறுகதைகள், அனுபவ முத்திரைகள், முப்பெரும் தலைநகரில் முப்பது நாட்கள் ஆகியவை வெளிவந்துள்ளன.

இலக்கியப் பணிக்காக டொமினிக் ஜீவா பல பரிசில்களைப் பெற்றுள்ளார். ஸ்ரீலங்கா நூல் அபிவிருத்திச் சபை, வடக்கு கிழக்கு மாகாணப் பண்பாட்டுத் திணைக்களம், சட்டக்கல்லூ ரித் தமிழ் மன்றம், அகில இலங்கைக் கம்பன் கழகம், நாவலர் சபை, தென்கிழக்கு இலக்கியப் பேரவை, ஸ்ரீலங்கா முஸ்லிம் ஊடகவியலாளர் சங்கம், எம்.எச்.எம்.எஸ் மன்றம் இப்படியாக பல மன்றங்களின் பரிசில்களைப் பெற்றுள்ளார். சில வருடங்களுக்கு முன் யாழ்பல்கலைக்கழகம் டொமினிக் ஜீவாவுக்கு எம்.லிட். என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவிக்க முன்வந்தது. அந்தப் பட்டம் கல்வித்தகைமைசார் பட்டம் என்பதனால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜீவா மறுதலித்துவிட்டார். பிரதமரால் வழங்கப்படும் "தேசநேத்துரு"

(தேசத்தின் கண்) என்ற விருதும் டொமினிக் ஜீவாவுக்கு வழங்கப்பட்டது. கனடியத் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது(2013) இவருக்கு 13-07-2014 இல் கொழும்புத்தமிழ்ச்சங்க மண்டபத்தில் வழங்கப்பட்டது.

ஈழத்து இலக்கியவரலற்றில் அழியாத்தடம் பதித்த ஜீவா ஈழத்து இதழியல் துறையில் மகத்தான சாதனை புரிந்தவர். ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவரது பெயர் என்றும் நிலைத்திருக்கும்.

❋



# 5

# பேரறிவும் பெரும்படைப்பாளுமையும் கொண்ட பண்டிதர் க.சச்சிதானந்தன்

**2006**ஆம் ஆண்டுக்கான அரச உயர் இலக்கிய விருதான சாஹித்யரத்னா விருதினைப் பெற்றவர் பண்டிதர் க. சச்சிதானந்தன். இவர் தும்பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை என்பவருக்கும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த தெய்வானைப்பிள்ளைக்கும் 19.10.1921இல் மகனாகப் பிறந்தார்.

காங்கேயன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியை பருத்தித் துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றிலும் பெற்ற பின்னர் தனது உயர்கல்வியை பரமேஸ்வராக் கல்லூரியில் பெற்றார். தனது தந்தையாரிடம் வானியல், சோதிடம் என்பவற்றைக் கற்ற இவர் சிவப்பிரகாசதேசிகர், சுப்பிரமணிய சாஸ்திரிகள், பாலசுந்தரக் குருக்கள் ஆகியோரிடம் சமஸ்கிருதக் கல்வியைக் கற்றார்.

1941ஆம் ஆண்டு இலங்கை இந்தியா இரு நாடுகளிலும் மதுரைப் பண்டிதர் பரீட்சையில் முதன்மைச் சித்தியடைந்தார்.

பண்டிதக் கற்கை நெறியில் வழிவந்தவராயினும் இலண்டன் பல்கலைக்கழக London Inter Science பரீட்சையில் சித்தியடைந்தார். 1978ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகம் சென்று ஆய்வு செய்து உளவியல் எம். பில். பட்டம் பெற்றார்.

நீர்கொழும்பு சென்ற்மேரிஸ் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றில் கணித ஆசிரியராகவும், யாழ் இந்துக்கல்லூரியில் தமிழ் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

26-10-1949இல் கந்தையா பரமேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்தார். இல்லறவாழ்வின் பயனாக ரவிந்திரநாதன், சாருகாசினி, மஞ்சுகாசினி, கணநாதன், பத்மாசனி, சிவநாதன், குகநாதன் ஆகியோர் பிள்ளைகளாயினர்.

1962-1965 காலப்பகுதியில் அரசின் பாடநூற்சபை எழுத்தாளராக விளங்கியதுடன், ஆசிரிய கலாசாலையின் உளவியற் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

1939ஆம் ஆண்டில் இலக்கியப் பிரவேசம் செய்த இவர், கவிதை, நாவல், காவியம், இலக்கணம், வானியல், இலக்கிய ஆய்வு, சமஸ்கிருதப் புலமை, சரித்திர ஆய்வு, நாடகங்கள், சித்திரங்கள், சிறுவர் இலக்கியம் என்பவற்றினூடாக இலங்கைத் தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றினார். ஆனந்தன், யாழ்ப்பாணன், பண்டிதர், சச்சி என்பன இவரது புனைபெயர்களில் சிலவாகும்.

“12.02.1939இல் ஆனந்தன் என்ற பெயரில் இவர் எழுதிய ‘தண்ணீர்த்தாகம்’ என்ற சிறுகதையே சாதியத்துக்கு எதிரான முதலாவது தமிழ்ச் சிறுகதை என்ற கணிப்பைப் பெற்றது. இக்கதை ஈழகேசரியில் வெளிவந்ததாகும். இவரது எட்டுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் ஈழகேசரியில் வெளிவந்துள்ளன. ஈழத்தின் உன்னதமான சிறுகதைகளில் தண்ணீர்த்தாகமும் ஒன்றாகும். அது எழுதப்பட்ட காலகட்டத்தையும் அது

கூறுகின்ற சமூகச் செய்தியையும் கவனத்திற்கு எடுக்கும்போது வியப்பும் பெருமிதமும் ஏற்படும். யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதியக் கொடுமையை முதன் முதலில் கருப்பொருளாக்கி மக்கள்முன் தூக்கி வைத்தவர் அவர். சமூகத்தின் எரியும் பிரச்சினையை அவர் கையாண்டிருக்கும் முறைமையும் அதனூடாக அவர்கூறும் செய்தியும் 1956களின் பின்னரும் ஈழத்தின் நவீன சிறுகதை ஆசிரியர்களால் கையாளப்பட்டு வருகின்றன. இச்சிறுகதை சாதிய அடக்கு முறை அவலத்தையும் மானிட நேயத்தையும் சித்திரிக்கின்றது. 1939 இல் இவ்வாறான சமூகப்பிரச்சினை கொண்ட சிறுகதையாக தண்ணீர்த்தாகம் எழுதப்பட்டுள்ளது என்பது மிக முக்கிய அம்சமாகும். சாதிய ரீதியான அடக்கியொடுக்கல் உச்சமாக விளங்கிய ஒரு காலகட்டத்தில் ஆனந்தன் துணிந்து இவ்வாறான சிறுகதையைப் படைத்துள்ளமை அவரின் சமூகப்பார்வையின் புரட்சிகரச் சிந்தனையை தெளிவாகக் காட்டுகின்றது" என செங்கை ஆழியான் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்தாம் வகுப்புப் படிக்கும்போதே இவருக்கு வெண்பா எழுதும் வல்லமை கைவரப்பெற்றிருந்தது. காதலியின் கையெழுத்து என்ற இவரது முதற்கவிதை இந்திய நவசக்தி சஞ்சிகையில் வெளிவந்தது. இலக்கண நெறிபிறழாமல் கவிதை எழுதுவதில் வல்லவராக இவர் திகழ்ந்தார். 1955இல் இவரது "ஆனந்தத்தேன்" என்ற கவிதை நூல் வெளியானது. சதா தேடலும் முயற்சியும் ஆய்வு மனோபாவமும் கொண்டவராக அவர் எப்போதும் கற்றுக்கொண்டே இருந்தார். மில்ரனையும், ஷெல்லியையும், கீற்ஸையும் ஷேக்ஸ்பியரையும் அவர் மீள மீளப்படித்துச் சுவைத்துக் கொண்டிருந்தார். மில்ரனின் ஒரு நாடகத்தை 70 தடவைக்கு மேல் படித்ததை அவர் நேர்காணல் ஒன்றிலே பதிவு செய்துள்ளார். ஆங்கில இலக்கியங்களைப் படித்துத் திளைத்தார், அந்தச் சுவையின் உந்தலினால் அவர் தமிழில் கவிதைகளை எழுதினார். அதனாலேதான் அவரது கவிதைகள் புதுப்பரிமாணம் பெற்றன.

இவர் எழுதிய முதலாவது காவியம் யாழ்ப்பாணக் காவியம் ஆகும் இது 2088 பாடல்களைக் கொண்டது. யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு காலகட்ட (கி.பி 1450-67) சித்திரிப்பாய் அமைந்த இக்காவியம் தமிழ்த் தேசியப்பற்றை எடுத்தியம்புவதாய் அமைகிறது. யாழ்ப்பாண அரசனாக இருந்த கனக சூரிய சிங்கையாரியனை கோட்டை அரசன் ஆறாம்பராக்கிரமபாகு ஆட்சியின்போது அவனுடைய வாரிசான சம்புமால் குமனரையன் வென்று யாழ்ப்பாண அரசைக்கைப்பற்றி ஆண்டதான வரலாற்றுச் செய்தியும் தமிழ்நாட்டிலிருந்து வந்த படை விஜயபாகுவை வென்று ஆட்சியைக்கைப்பற்றிய செய்தியும் இதன் கதையம்சமாக அமைந்துள்ளது. இக்காவியம் இலங்கை சாகித்திய மண்டலப்பரிசு, வடக்கு கிழக்கு மாகாண இலக்கியப் பரிசு, சம்பந்தர் விருது என்பவற்றைப் பெற்றுக் கொண்டது.

“பருவப் பாலியர் படும்பாடு” என்ற காவியம் 1983 இனக்கலவரம், தமிழ்த் தேசிய எழுச்சி, போர்க் கொடுமைகள், இளம் வயதினரின் பாலியல் நெருக்கடிகள் குறித்துப் பேசும் இக்காவியம் 1950 முதல் 42 வருட காலப்பகுதியை வரலாற்றுப் பதிவாக்கியுள்ளது. இக்காவியத்தில் 4400 பாடல்கள் அடங்கியுள்ளன. செல்வன் என்னும் தமிழ்ச் சிறுவனும் அவன் பள்ளி மாணவரும் பத்து வருடகாலத்தில் என்ன பாடுபடுகின்றார்கள் என்பதைக் கருவாகக் கொண்ட நெஞ்சையுருக்கும் ஒரு கண்ணீர்க்காவியம். இது. இலங்கைக் காடுகள், யாழ்ப்பாணக்கிராமங்கள், கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கிளாலித்துறைமுகம் என்பவற்றை நிலைக்களமாகக் கொண்டது

எடுத்த மலர்களும் தொடுத்த மாலையும் என்னும் நூலிலே மேற்குறிப்பிட்ட காவியத்தின் இரண்டாம் பகுதி இடம்பெற்றுள்ளது. இதுதான் ஆசிரியரின் தொடுத்த மாலையாக அமைகிறது. எடுத்த மலர்களாக பல கவிதைகளும் கவிதை நாடகங்களும் இந்நூலிலே இடம்பெற்றுள்ளன.

இவர் மஞ்சு மலர்க்கொத்து (2003) என்னும் பாலர் பாடத்தொகுதியை வெளிக்கொணர்ந்தார். அந்த நாளில் தமிழ் மலர் பாடநூலில் கவிஞர் பெயர் குறிப்பிடப்படாது இடம்பெற்ற பாடல்கள் சில பண்டிதர் சச்சிதானந்தனால் எழுதப்பட்டவை என்பது இந்நூல் வெளிவந்த பின்னரே தெரியவந்தது. இப்பாடல்கள் நான்கு வயதுக்கும் ஏழு வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் பாடி மகிழ்வதற்கு ஏற்றவை என நூலில் குறிப்பு உள்ளது. பாடல்களுக்குரிய இசைமெட்டுக்கள், பியானோ வாத்தியக் குறிப்புகள் இந்நூ லில் அச்சிடப்பட்டுள்ளன.

இவர் ஈழகேசரியில் 12-07-1942 முதல் 20-12-1942 வரை தொடராக எழுதிய அன்னபூரணி என்ற நாவல் பின்னர் நூலுருப் பெற்றது. இந்நாவல் பல புனைகதை ஆசிரியர்கள் உருவாக முன்னோடியாக அமைந்தது.

இவர் ஆங்கிலத்தில் 2002இல் எழுதிய Fundamental of Training Prosody (தமிழ் யாப்பிலக்கண அடிப்படைகள்) என்ற நூல் கவிதைக்கு ஓசை முக்கியம் என்பதை வலியுறுத்துவதாக அமைந்தது. இந்நூல் தமிழிலக்கணத்தை உலகுக்கு அறிவிக்கும் நூலாக அமைந்தது. Foot Printed of our Fathers தமிழினத்தின் வரலாற்றையும் அரசியலையும் உலகுக்கு விளங்க வைக்கும் நூலாகும்.

1945-1946 காலப்பகுதியில் யாழ்நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த சுவாமி விபுலானந்தருக்கு ஆராய்ச்சித் துணைவராக விளங்கியவர் இவர். அதனால் ஆய்வுத்துறையில் இயல்பாகவே இவருக்கு மிகுந்த ஆற்றலும் ஆர்வமும் இருந்தன. சமஸ்கிருதம் முதலான மொழிகளில் அவருக்கு இருந்த பாண்டித்தியம் காரணமாக ஆய்வுத்துறையின் நுணுக்கமானமுறைக்குப் பரிச்சய மானவராக இருந்தார். “தமிழர் யாழியல்” (1997) என்ற இவரது ஆய்வு நூல் இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த ஆய்வு நூலுக் கான பரிசைப்பெற்றது.

இவரது மற்றுமொரு ஆய்வு நூல் "மஞ்சுகாசினியம்: இயங்கு தமிழியல்" *(2001).* இந்நூல் தொல்காப்பியம் நன்னூல் ஆகிய இலக்கண நூல்களின் அடிப்படையில் தமிழ் இலக்கணத்தை புதியவகையிலும் எளிமையாகவும் எடுத்துச் சொல்லியது. இந்நூல் பழமையை நன்கு தெரிந்தவனாலேயே புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியும் என்பதை பல கோட்பாடுகளின் பிரயோகம் மூலம் எடுத்தியம்பியுள்ளது. கலைச்சொல் ஆக்கத்திற்கு இலக்கணம் இடையூறாக மாட்டாது என்பதனையும் இந்நூலில் கண்டு தெளியலாம்.

வானியலில் மிக்க பரிச்சயமுள்ள சச்சிதானந்தன் சோதிடக் கலையில் பாண்டித்தியம் பெற்றவராகவும் திகழ்ந்தார். முந்நூறு ஆண்டுகளாக பஞ்சாங்கம் கணித்து வெளியிடும் தொடர்ச்சியான பரம்பரையின் தொடர்ச்சிப் பொறுப்பும் இவருக்கு இருந்தது.

இலங்கைத் தமிழரின் அரசியலில் முக்கிய பங்காற்றிய தமிழரசுக் கட்சியின் தோற்றுவாயாக, மூலகர்த்தாவாக விளங்கியவர்களில் இவரும் ஒருவர். தமிழரசுக்கட்சியின் ஆரம்பகால அங்கத்தவர். தந்தை செல்வநாயகம் இருக்கும் வரை கட்சியின் மத்தியகுழு அங்கத்தவராக இருந்தவர். தந்தை செல்வாவின் நல்ல நண்பனாகவும் ஆலோசகராகவும் விளங்கிய இவர் தானும் நாகநாதனும் தந்தைசெல்வாவும் காலி வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபோதே தமிழரசுக் கட்சி என்ற பெயர் தோற்றம் பெற்றதாக நேர்காணல் ஒன்றிலே குறிப்பிட்டுள்ளார். தமிழரசுக் கட்சியின் அகிம்சை வழிப் போராட்டங்களில் இணைந்து தடுப்புக்காவலில் வைக்கப் பட்டவர். அக்காலத் தமிழரசுக் கட்சியின் மேடைகளில் இவரது "சாவிற்றமிழ் படித்துச் சாகவேண்டும் என்றன் சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்" என்ற பாடல் பிரபலம் பெற்றிருந்தது. இவ்வகையில் தமிழரசுக் கட்சியின் ஆஸ்தான கவிஞராகவே அவர் விளங்கினார்.

பண்டிதர் சச்சிதானந்தன் ஆரிய திராவிடபாஷா விருத்திச் சங்கத்தின் உப தலைவர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்து சங்கத்தின் வளர்ச்சிப்பாதையில் பங்கேற்றவர். பிற்பட்ட காலத்தில் இச்சங்கத்தின் காப்பாளராகவும் பரீட்சக ராகவும் விளங்கியவர்

இவர் ஆங்கிலத்தில் Ceylon Daily News பத்திரிகையில் எழுதிய உளவியற்கட்டுரை, யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவின்போது சமர்ப்பித்த வானியல் ஆராய்ச்சி பற்றிய கட்டுரை, ஆரிய திராவிடபாஷா விருத்திச் சங்கத்தில் படிக்கப் பட்ட தமிழ்ஒலி மூலகங்கள் (1989) தொடர்பான கட்டுரை, கலாநிதி கு.சிவப்பிரகாசம் நினைவாக வாசிக்கப்பட்ட உளவியல் அடிப்படையில் உவம இயல் (1990) கட்டுரை, யாழ். பல்கலைக் கழகத்தில் வாசிக்கப்பட்ட இடைச்சொல் பற்றிய மூன்று எடுகோள்கள் (1991) பற்றியகட்டுரை உள்ளிட்ட ஏராளமான முக்கிய கட்டுரைகள் தொகுக்கப்படவேண்டிய நிலையில் உள்ளன.

இவரது இலக்கியப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக, சம்பந்தன் விருது (2001) வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது (2004) தந்தை செல்வாக நினைவு விருது (2004) இலங்கை இலக்கியப் பேரவை விருது (2005) கலாகீர்த்தி தேசிய விருது (2005) ஆகியவை இவருக்கு வழங்கப்பட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

ஈழத்துத் தமிழ் அறிஞர் வரிசையில் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்படும் பண்டிதர் சச்சிதானந்தம் தனது 87ஆவது வயதில் 21-03-2008 அன்று அமரரானார்.

*



# 6

# முதன்மைபெறும் மூத்த படைப்பாளி முருகையன்

2007ஆம் ஆண்டுக்கான அரச உயர் விருதான சாஹித்யரத்னா விருதைப் பெற்றவர் கவிஞர் இ.முருகையன்.

தமிழ்ப்புலமையும் செழுமையும் அமைந்த கல்வயல் கிராமத்தில் 23.04.1935இல் முருகையன் பிறந்தார். இவரது தந்தையார் இராமுப்பிள்ளை ஒரு புகழ்பெற்ற தமிழாசிரியர். தாயார் பெயர் செல்லம்மா. முருகையன் குடும்பத்தில் இவர்தான் மூத்த புதல்வர். இவருடன் கூடப்பிறந்தவர் நாடக வல்லுனரும் கவிஞருமான சிவானந்தன்.

முருகையன் தனது ஆரம்பக் கல்வியை கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றவர். உயர்கல்வியை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பெற்று 1956இல் விஞ்ஞானப் பட்டதாரி ஆனார். 1961இல் லண்டன் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். 1985இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 1956முதல் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றிய முருகையன் பின்னர் அரச மொழித் திணைக்களத்தில் அறிவியல் பாடநூல் மொழிபெயர்ப்பாளராகவும், தமிழ்மொழிப் பாடநூல் திணைக்களத்தில் முதன்மைப் பணிப்பாள ராகவும், 1978-1983 காலப்பகுதியில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும் 1984 முதல் முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி இறுதியாக 1986இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதுணைப் பதிவாளராகப் பணியாற்றினார்; 1995இல் ஓய்வு பெற்றார். அதன்பின்னர் 2002வரை பல்கலைக்கழக தமிழ்த்துறையில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணி யாற்றினார்.

1965இல் திருமணம் செய்த முருகையனுக்கு இரண்டு பிள்ளைகள்.

கவிதையின் மூலம் இலக்கியப் பிரவேசம் செய்த முருகையன் மேடைப் பா நாடகங்கள், வானொலிப் பா நாடகங்கள், மொழி பெயர்ப்பு, காவியங்கள், விமர்சனம், கட்டுரை, பாடலாக்கம் எனப் பல்வேறு துறைகளில் தடம் பதித்தவர்.

முருகையன் ஆங்கிலக் கவிதைகள் சிலவற்றைத் தமிழிலும் தமிழ்க்கவிதைகள் சிலவற்றை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்.

1950முதல் எழுதத் தொடங்கிய முருகையன் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியவாதம், மொழிஉணர்வு சார்ந்த கவிதைகளை எழுதினார். அறுபதுகளில் இருந்து சோஷலிசக் கருத்து நிலையில் தனது படைப்புக்களை வெளிக்கொணர்ந்தார். இக்காலகட்டத்தில் இவர் படைத்த

அநேகமான படைப்புக்களில் முற்போக்குக் கருத்து நிலையின் செல்வாக்குப் பொதிந்திருந்தது. எண்பதுகளுக்குப் பின்னர் அவரது அநேகமான கவிதைகள் யுத்தகால இராணுவ ஒடுக்கு முறைகள் பற்றியதாக அமைந்தன. முருகையன் ஒரு மரபுவழிக் கவிஞர். பல கவியரங்குகளில் பங்குபற்றித் தனது திறமையை வெளிக்காட்டியவர். ஈழத்து நவீன தமிழ்க் கவிதைக்கு அவரது பங்களிப்பு விதந்தோம்பற்பாலது.

இவரது முதலாவது நூல் "ஒரு வரம்" (1964) பன்னிரண்டு ஆங்கிலக் கவிஞர்களின் மொழிபெயர்ப்புத் தொகுப்பாகும். நெடும் பகல் - காவியம் (1967), ஆதி பகவன் - காவியம் (1978), அது-அவர்கள் நீண்ட கவிதை (1986), மாடும் கயிறு அறுக்கும் (1990), நாங்கள் மனிதர் (1992), ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும் (2001) என்பன அவரது கவிதை நூல்களாகும். இவருடைய கவிதைகள் தனிக்கவிதை, நெடும்பாட்டு, பாநாடகம் என்ற மூன்று வகையாகக் காணப்படுகின்றன. புதுக்கவிதையை வெறுத்து மரபுக் கவிதையை விரும்பும் இக் கவிஞரின் ஒவ்வொரு கவிதையிலும் ஒலி நயமும், கலையம்சமும், சமுதாயப் பயன்பாடும் இருக்கும் பேராசிரியர் க. கைலாசபதி இவருடைய பாடசாலை நண்பன். இருவரும் சேர்ந்து "கவிதைநயம்" என்னும் நூலை எழுதி வெளியிட்டனர். நண்பர் மஹாகவியுடன் (உருத்திர மூர்த்தி) இணைந்து "தகனம்" என்ற காவிய நூலையும் எழுதினார். "தகனம்" நூலுருப் பெறவில்லை.

மேடைக் கவிஞருக்குத் களமமைத்து தலைமைக் கவிஞராகக் கவிதை படிப்பதுடன் இளங்கவிஞர்களுக்கும் களமமைத்துக் கொடுத்தார். இதனால் பல இளங்கவிஞர்கள் உருவாக்கப்பட்டனர்.

கவிஞர் முருகையனும் இ.இரத்தினமும் இணை ஆசிரியர் களாகத் தொழிற்பட்டு நோக்கு என்னும் காலாண்டிதழை வெளி யிட்டனர். 1964 -1965 காலப்பகுதியில் வெளிவந்த நோக்கு

காலாண்டுக் கவிதை இதழில் நிறைய மொழிபெயர்ப்புக் கவிதைகள் வெளியிடப்பட்டன.

இவரது கவிதைகள் பற்றி பேராசிரியர் க. கைலாசபதி குறிப்பிடுகையில் "உருவத்திற்கும் உள்ளடக்கத்துக்குமுள்ள நுட்பமான இயங்கியல் ரீதியான உறவைத் தெளிவுற உணர்ந்து கவிதை படைப்பவர் முருகையன். இக்காரணத்தினாலேயே முருகையனைக் 'கவிஞர்க்குக் கவிஞர்' என நான் குறிப்பிடுவது வழக்கம்." எனப் புகழ்ந்தேத்தியுள்ளார்.

முருகையன் எழுதிய முதல்நாடகம் சிந்தனைப்புயல் என்பதாகும். இந்நாடகம் இந்துக்கல்லூரில் இவர் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எழுதியது. அதிலே இவரே கதாநாயகியாக நடித்தார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பின்னர் இவர் ஒரு கவிதை நாடகத்தை வானொலிக்காக எழுதினார். முதன்முதலில் இவர் எழுதிய நித்திலக்கோபுரம் (1953) நாடகத்தை தயாரித்தவர்கள் வானொலிக்காரர்கள்தான். அந்த ஊக்கத்தில் இவர் தொடர்ந்து சில வானொலி நாடகங்களை எழுதினார். பின்பு காலப்போக்கில் மேடை நாடகங்களை எழுதும் நாட்டம் இவருக்கு ஏற்பட்டது.

இலங்கையில் அதிகமான பா நாடகங்களை எழுதியவர் முருகையனே. நவீன பா நாடக வளர்ச்சியிலும் முருகையன் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளார்.

இவரது கடூழியம், அப்பரும் சுப்பரும் (1971) ஆகிய மேடைநாடகங்கள் மிக முக்கியமான அரசியல் நாடகங்கள் எனக் கருதப்படுகின்றன. கடூழியம் மார்க்சிய கருத்து நிலையில் எழுதப்பட்ட நாடகமாகும். இந்த இரண்டு நாடகங்களும் முற்போக்கு எழுத்துக்கு உதாரணமாக விளங்கும் மேடை நாடகங்களாகும். இவைதவிர பொய்க்கால், குற்றம் குற்றமே ஆகிய மேடை நாடகங்களையும் இவர் படைத்துள்ளார்.

இவர் எழுதிய பா நாடக நூல்களாக, வந்து சேர்ந்தன,(1965) தரிசனம், உண்மை, (மொழிபெயர்ப்பு 2002)

கோபுர வாசல், (1969) மேற்பூச்சு, (1995) வெறியாட்டு, (1989) சங்கடங்கள்(2000) ஆகியன வெளிவந்துள்ன. மேடைநாடக நூல்களாக கடூழியம், அப்பரும் சுப்பரும் (1971) ஆகியன வெளிவந்துள்ளன.

கவிஞர் முருகையனின் கவிதை நாடகத்தை மேடை ஏற்றும் முயற்சி முதன்முதலில் குற்றம் குற்றமே என்னும் நாடகத்தினூடாகவே நிகழ்ந்தது. 1962 காலப்பகுதியில் குற்றம் குற்றமே என்னும் கவிதை நாடகத்தை மேடை ஏற்றிய பெருமை பேராசிரியர் சிவத்தம்பி அவர்களைச் சாரும்.

நீலாவணன் எழுதிய துணை நாடகத்தில் கொங்கண முனிவராக முருகையன் நடித்தார். இது வானொலி நாடகமாகவும் நடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் யாழ். நூலக எரிப்பைக் கருவாக்கி எழுதிய "வெறியாட்டு" நாடகநூல் இன்னும் பேசப்படுகிறது.

கடூழியம் என்னும் மேடை நாடகம் இ.முருகையனால் 1969 காலப்பகுதியில் எழுதப்பட்டது. உள்ளடக்கத்திலும் நெறிப்படுத்தப்பட்ட நடிப்பாலும் காட்சியமைப்பாலும் கடூழியம் நாடகமானது ஈழத் தமிழ்நாடக உலகில் பாரிய வெற்றித் தயாரிப்பாகவும் ஒரு பாய்ச்சலாகவும் அமைந்திருந்தது. அன்றைய காலகட்டத்தில் இலங்கையின் இரு மொழிகளிலும் வெளிவந்த சிறந்த நாடகம் என்ற பாராட்டை கடூழியம் பெற்றுக்கொண்டது.

முருகையன் எல்லாமாக 24 நாடகங்களை எழுதியுள்ளார். அவையாவன நித்திலக்கோபுரம், அந்தகனே ஆனாலும், வந்து சேர்ந்தன, தரிசனம், கோபுரவாசல், கடூழியம், செங்கோல், கலைக் கடல், கொண்டுவா தீயை கொளுத்து விறகை எல்லாம், சுமசும மகாதேவா, அப்பரும் சுப்பரும், கந்தப்ப மூர்த்தியர், வழமை, அந்தகனே ஆனாலும், இடைத்திரை, குனிந்ததலை, வெறியாட்டு, பொய்க்கால், குற்றம் குற்றமே,

தந்தையின் கூற்றுவன், இரு துயரங்கள், கலிலியோ, உயிர்த்த மனிதர் கூத்து, எல்லாம் சரிவரும், என்பனவாம்.

கவிஞர் முருகையனின் ஆங்கிலப்புலமை அசாத்திய மானது. ஷேக்ஸ்பியர் என்னும் சிறப்பிதழை இவர் வெளியிட் டுள்ளார். யாழ். பட்டதாரி மாணவர்களுக்கு “மொழிபெயர்ப்பு நுட்பம்” பற்றி விரிவுரைகள் ஆற்றியுள்ளார். அவ்விரிவுரைகள் அனைத்தும் அதே பெயரில் நூலுருப் பெற்றுள்ளன. ஒரு உற்சாகத்துடனேயே மொழிபெயர்ப்புத் துறையில் அவர் ஈடுபட்டார்.

ஈழத்தில் அறுபதுகளில் சாதிய எதிர்ப்புப்போராட்டம் தேசியத்தின் வடிவமாக இருந்தது போன்று எழுபதுகளில் தமிழ்த்தேசிய இனவிடுதலைப் போராட்டமும் முனைப்புப் பெற்றுக் காணப்பட்டது. இனவாதம். இனவெறி என்பன மோசமானதோர் நிலையை எட்டியபோது இன அடக்குமுறைக்கு எதிராக முருகையன் பரிணமிக்கத்தொடங்கினார். உழைக்கும் மக்களின் நலனிலிருந்து அந்நியமுறாமல் பேரினவாதத்தைப் பெரிதும் சாடுகின்ற பண்பு இவரது ஆன்மபலத்தைக் காட்டிநின்றது.

இலங்கை அரச மொழிகள் திணைக்களத்தில் பணியாற்றிய முருகையன் தமிழ் கலைச்சொல்லாக்கத்திற்குக் கணிசமான பங்ளிப்புச் செய்துள்ளார்.

தேசிய கலை இலக்கியப்பேரவையின் தலைவராக இருந்த இ. முருகையன் அப்பேரவையின் தொடக்க காலத்திலிருந்தே பங்கெடுத்து வந்ததுடன் தேசிய கலையிலக்கியப்பேரவையின் சஞ்சிகையான தாயகம் இதழ் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தார்.

ஒருசில விதி செய்வோம், இன்றைய உலகில் இலக்கியம் ஆகிய திறனாய்வு நூல்களையும் முருகையன் எழுதியுள்ளார். “திருவெம்பாவையர்” இவர் எழுதிய உரை

நடைச் சித்திர நூலாகவும், இளநலம் (வடமொழி குமார சம்பவத்தை ஒட்டியது), மொழிபெயர்ப்பு நுட்பம் ஆகிய கட்டுரை நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார்.

இவற்றைவிட முந்நூறுக்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார்ந்த கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது படைப்புகள் பல நூலுருப் பெறாமல் உள்ளன. முருகையன் தனது நூல்களுக்குப் பதிப்புரிமை கோருவதை வழக்கமாகக் கொண்டிருக்கவில்லை. பதிப்பகத்தாரிடம் தனது எழுத்துக் களை மக்களில் எவரும் எப்படியும் பயன்படுத்தலாம் என்று சொல்லிவரும் வழக்கமுடையவராக இருந்தார்.

யாழ். பல்கலைக்கழகம் இவரது இலக்கியப் பணியினைப் பாராட்டி கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கியது.

முருகையன் தனது இறுதிக்காலத்தில் நோயுற்று இருந்தமையால் அவரால் சாஹித்திய விழாவுக்குச் சமூகமளித்து அவருக்கான விருதை நேரில் பெறமுடியாத நிலைமை இருந்தது. அவர் தனது 74 ஆவது வயதில் 27--06-2009 அன்று அமரரானார். அவரது இடம் இற்றைவரைக்கும் நிரப்பப்படமுடியாத இடமாகவே உள்ளது.

❋



# 7
# ஆய்வு ஆளுமையும் கலை இலக்கிய ஆர்வமும் மிக்க பேராசிரியர் அ. சண்முகதாஸ்

**2008**ஆம் ஆண்டு இலங்கை அரசின் இலக்கியத்திற்கான சாஹித்தியரத்னா உயர்விருதினைப் பெற்றவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ்.

இவர், திருகோணமலையைச் சேர்ந்த அருணாசலம், முத்தம்மா தம்பதியினருக்கு 02-01-1940 அன்று மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை அர்ச்.பிரான்ஸிஸ் சவேரியர் றோமன் கத்தோலிக்கத் தமிழ்ப் பாடசாலையில் (1945-51) கற்று ஐந்தாம் வகுப்பு புலமைப்பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். அதிலே தேர்ச்சி பெற்றதால் வந்தாறுமூலை செங்கலடியில் உள்ள மத்திய மகாவித்தியாலயத்தில் படிப்பைத் தொடரவேண்டி ஏற்பட்டது. (1952-57) அங்கு தமிழ் தவிர்ந்த எல்லாப் பாடங்களிலும் ஆங்கிலத்தில் பயின்று சிரேஷ்ட தராதரத்தேர்வில் எல்லாப்பாடங்களிலும் Distinction சித்தி பெற்றார். பின்னர் சிவானந்தா வித்தியாலயத்தில் இராமகிருஷ்ண மிஷன்

புலமைப்பரிசில் பெற்று தனது கல்வியைத் தொடர்ந்தார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1959 மார்ச் மாதம் முதல் கல்விகற்க அனுமதி கிடைத்தது. கிழக்குப் பாடசாலைகளில் இருந்து 1959இல் இவர் ஒருவரே பல்கலைக்கழகக் கலைப்பிரிவுக்குத் தெரிவு செய்யப்பட்டவர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டார். ஆங்கில மொழிமூலம் கல்விகற்றுப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான இவர், பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சிறப்புத் தமிழை இளங்கலையில் பயின்றார். இந்திய வரலாறு சமஸ்கிருதம் உள்ளிட்ட பாடங்களையும் பயின்று முதல் பிரிவில் தேறினார். பேராசிரியர்கள் க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம், சு.வித்தியானந்தன், ஆ.சதாசிவம், பேராசிரியர் ச. தனஞ்செயராஜசிங்கம் ஆகியோரின் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய மாணவனாகத் திகழ்ந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த காலத்திலே கவிதை, சிறுகதை, நாடகம் முதலான துறைகளில் அதிக ஈடுபாடும் திறமையும் காட்டி எவ்லோரின் நன்மதிப்பை யும் பெற்றார். இவர் எழுதிய சிறுகதைகளும் கவிதைகளும் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க வெளியீடான இளங்கதிரில் இடம் பெற்றுள்ளன. பேராசிரியர் வித்தியானந்தன் நெறிப்படுத்த லில் உருவான கர்ணன்போர், வாலிவதை, இராவணேசன் முதலான நாடகங்களில் பிரதான பாகங்களேற்று நடித்து தனது திறமையை வெளிக்காட்டினார். பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படச் செயற்பட்டார். 1963இல் இவர் அங்கு தற்காலிக விரிவுரை யாளராக நியமிக்கப்பட்டார்.

1961இல் மனோன்மணி பல்கலைக்கழகத்துக்கு மாணவியாக வந்தார். தமிழைச் சிறப்புப்பாடமாகப் பயின்ற மனோன்மணியை காதலித்து கடிமணம் புரிந்தார் சண்முகதாஸ். 1965 ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி கண்டி

செல்வவிநாயகர் ஆலயத்தில் இவர்களது திருமணம் இடம்பெற்றது. யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு இவர்கள் இருவரையும் விரிவுரையாளர்களாக அழைத்தது. 1-9-1965 முதல் இவர்கள் இருவரும் அங்கு கடமையைப் பொறுப்பேற்றனர்.

1968 மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவருக்கு நிரந்தர விரிவுரையாளர் பதவி கிடைத்தது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரை யாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொள்ள இங்கிலாந்தில் உள்ள (1969-70) எடின்பறோ பல்கலைக்கழகம் சென்றார். அங்கு ஓராண்டு மொழியியல் படித்தார். தொடர்ந்து 1970-72ஆம் ஆண்டில் மொழியியல் துறையில் எடின்பறோ பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்றார். "இலங்கைப் பேச்சுத்தமிழின் வினை வடிவங்களின் ஒலியன்கள்" (The Phonology the verbal forms in colloquial Ceylon Tamil) என்பது இவரது கலாநிதிப்பட்டத்துக்கான ஆய்வுத் தலைப்பாகும்.

"எடின்பரோ பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொண்டி ருந்த வேளை வெளிநாட்டு மாணவர் மன்றத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இது இலங்கைத் தமிழர்களுக்குக் கிடைத்த பெரும் கௌரவமாகும். வெளிநாட்டு மாணவர் மன்றத் தலைவர் என்ற வகையில் எலிசபெத் மகாராணியை கைலாகு கொடுத்து வரவேற்கும் பேற்றினைப் பெற்றார்." எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி எஸ். சிவலிங்கராசா. (-பேராசிரியர் அ. சண்முகதாஸ் மணிவிழாச் சிறப்புமலர் 2001)

அகில உலகப் புகழ்பெற்ற மொழியியல் பேராசிரியரான ஆஷா (Dr.Rone Adher) அவர்களின் வழிகாட்டலில்

கலாநிதிப்பட்டம் பெற்று 1972இல் நாடு திரும்பி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமது பணியினைத் தொடர்ந்தார்.

பேராதனை வளாகத்தில் இருந்த இவரை 1975 இல் யாழ்ப்பாண வளாகத்துக்கு மானிய ஆணைக்குழு மாற்றியது. அங்கு 1976 முதல் தமிழ்த்துறையின் பொறுப்பு விரிவுரையாளராகக் கடமையாற்றினார். 1979இல் முதுநில விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

1982இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மொழித் துறைத்தலைவர் ஆனார். அடுத்த ஆண்டில் நைஜீரியாவில் உள்ள இபாதன் (Univercity of Ibadan) பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையிலும் வருகைதரு பேராசிரியராய்ப் பணிபுரிந்தார். 1983இல் ஜப்பான் ரோக்கியோவில் உள்ள காகூசன் (Gakushuin University) பல்கலைக்கழகத்தில் வருகைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

1984 ஜனவரிமாதம் இவருக்கு தமிழ்த்துறையில் இணைப் பேராசிரியர் பதவி வழங்கப்பட்டது. 1990இல் பேராசிரியர் பதவியும் 1995இல் முதுநிலைப்பேராசிரியர் பதவியும் வழங்கப்பட்டன. பேராசிரியராக இருந்த காலத்தில் இவர் 14 முதுகலைமாணிப் பட்டதாரிகளையும் 4 கலாநிதிகளையும் உருவாக்கினார்.

1997இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப் பீடத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1999இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உயர்பட்ட ஆய்வு பீடம் அமைப்பதற்கு மானிய ஆணைக்குழு தீர்மானித்து அப்பீடத்தின் முதலாவது தலைவராக இவரே நியமிக்கப்ட்டார். அவ்வகையில் பேராசிரியர் சண்முகதாஸ் 1997 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டு பீடங்களின் தலைவராகப் பணியாற்றினார். அக்காலப்பகுதியில் இவர் அங்கு பல நிர்வாகப் பொறுப்புகளையும் கவனித்தார். 2008 முதல் வருகைதரு பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

இலங்கையில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் கலவிக்குழு, பாடத்திட்டக்குழு, மதிப்பீட்டுக்குழு என பல நிலைகளில் பணி புரிந்த இவர், அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் அனுப்பும் முனைவர்பட்ட ஆய்வேடுகளை மதிப்பிடும் தேர்வாளராகப் பணிபுரிந்தார். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட மலேசியா, சிங்கப்பூர் முதலான நாட்டுப் பல்கலைக்கழகங்களின் கலாநிதிப்பட்ட ஆய்வின் புறநிலைத் தேர்வாளராகப் பணியாற்றினார். மலேசியப் பல்கலைக்கழகத்தின் இந்திய மொழியியல் துறையின் பிரதம பரீட்சகராகவும் நியமிக்கப்பட்டார். திருவனந்தபுரம் உலக திராவிட மொழியியல் கல்லூரியின் வரவு நிலைப்பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

பல்கலைக்கழக கலைப்பீட ஆய்வு வெளியீடான சிந்தனை என்னும் இதழின் தலைமைப் பதிப்பாசிரியாகவும் இவர் பணியாற்றினார். இலக்கியமும் அறிவியலும் என்னும் தமிழ்த்துறை வெளியிட்ட நூலின் பதிப்பாசிரியராகவும் பணிபுரிந்தார்.

தமிழ் ஆங்கிலம், வடமொழி, மலையாளம், யப்பானிய மொழி ஆகியவற்றிலே சிறப்புப் புலமையுடையவர் இவர். சங்க இலக்கியம், இலக்கணம், மொழியியல், நாட்டுப்புறவியல், இலக்கியத்திறனாய்வு, பக்தி இலக்கியம், வரலாறு, கல்வெட்டு, எனத் தமிழின் அனைத்துப் பரிமாணங்களையும் உள்ளடக்கிய ஆய்வுப்புலங்களில் தடம்பதித்து ஆய்வுலகில் தனக்கென ஓர் இடத்தைப்பெற்றுக்கொண்டார்.

பேராசிரியரின் மனைவி கலாநிதி மனோன்மணி ஜப்பான் நாட்டிலுள்ள கக்சுயின் பல்கலைக்கழகத்தில் ஆய்வாளராகப் பணிபுரிந்து பட்டம்பெற்றவர். பேராசிரியரின் உயர்வுகளுக் கெல்லாம் உந்துசக்தியாக விளங்குபவர் இவர். பேராசிரியர் தம்பதிக்கு கலைச்செல்வி, திருநங்கை, செந்தூரன் ஆகியோர் பிள்ளைகளாவர்.

பேராசிரியர் உலக அளவில் நடைபெற்ற பல உலகத்தமிழ் மாநாடுகளைக் கண்ட பெருமைக்குரியவர். அவ்வகையில் சென்னை, பாரீஸ், மலேசியா, சிங்கப்பூர். தமிழகம், மொரீசியஸ், பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று தமிழ் மாநாடுகளில் கட்டுரை படித்த பெருமைக்குரியவர். "நான் ஆய்வுக்கட்டுரைகள் படித்த மாநாடுகளை நான்கு வகையாகப் பாகுபாடு செய்யலாம். முதலாவது வகையில் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் அடங்குகின்றன. இரண்டாவது வகை மாநாடுகள் மொழியியல் தொடர்பானவை. மூன்றாவது வகை மாநாடுகள் உலகத்தமிழாசிரியர் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டுவரும் உலகத் தமிழாசிரியர்கள் மாநாடுகள். நான்காவது வகை சமய பண்பாட்டு வகை மாநாடுகள் ஆகும்" என ஞானம் 200ஆவது இதழுக்கு அளித்த பேட்டியிலே பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பலநாடுகள் சுற்றிவந்தாலும் தமிழ் அரங்குகளில் தமிழர் ஆடையான வேட்டி அணிந்து அமர்ந்து வீற்றிருப்பது இவர்தம் தமிழ் உணர்வு காட்டும் சான்றாகும். இலங்கை நாட்டுப்புறப் பாடல்களையும் பாடிக்காட்டி விளக்கும் ஆற்றல் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகைசார் வாழ்நாள் பேராசிரியராகவும் ஆலோசகராகவும் பணிபுரிந்தவர்.

மானிய ஆணைக்குழுவால் யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட முதல்பீடாதிபதியாக நியமிக்கப்பட்டவர். தென்னிந்திய பல்கலைக்கழகங்களிலும் கல்விசார் பதவிகளை வகித்தவர். யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய முதல் இயக்குநராகவும் சைவ விருத்திச் சங்கத் தலைவராகவும் (1993-2003) பணியாற்றியவர்.

சண்முகதாஸ் அவர்கள் தனித்தும் தனது மனைவியோடும் இணைந்தும் பதினைந்துக்கு மேற்பட்ட நூல்களை எழுதி யுள்ளார். ஐம்பதுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் நூற்றுக்கு மேற்பட்ட பிற கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தமிழ்மொழி இலக்கண இயல்புகள், துணை வேந்தர்

வித்தியானந்தன், கிறிஸ்தவ தமிழ் இலக்கிய வளர்ச்சி, ஈழத்துத் திறனாய்வு முன்னோடி பேராசிரியர் வி. செல்வநாயகம், இலங்கைப்பேராசிரியர்களின் தமிழ்ப்பணிகள், தமிழின் பா வடிவங்கள், மொழியும் பிற துறைகளும், வண. தனிநாயகம் அடிகள், ஆக்க இலக்கியமும் அறிவியலும்(பதிப்பித்த நூல்) என்பன அவற்றில் சிலவாகும். தனது மனைவி கலாநிதி மனோன்மணியுடன் இணைந்து இத்திமரத்தாள், World view and Rituals among the Japanese and Tamils ஆகிய நூல்களை எழுதியுள்ளார். பேராசிரியர் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட ஆங்கில மொழியிலான கட்டுரைகளையும் எழுதித் தமிழுக்கு அணி சேர்த்துள்ளார்.

சண்முகதாஸ் அவர்கள் படிக்கும் காலத்திலும் பணிபுரிந்த காலத்திலும், பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்றவர். 1963இல் ஆறுமுக நாவலர்விருது, இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதல்மாணவராகத் தேறிப் பெற்றவர். 1982இல் Japanese Foundation சிரேஷ்ட விருதினைப்பெற்றார். 1987இல் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் தமிழ்மொழி இலக்கண இயல்புகள் என்ற தமது நூலுக்காக ஏ.சபாநாதன் நினைவுப் பரிசு பெற்றார். 1988ஆம் ஆண்டு இத்திமரத்தாள் என்ற நூலின் சிறந்த இலக்கிய ஆராய்ச்சியைப் பாராட்டி இலங்கை இலக்கியப் பேரவை சான்றிதழ் வழங்கியது. தமிழின் பா வடிவங்கள் என்ற நூலுக்கு வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் 1999ஆம் ஆண்டின் சிறந்த இலக்கிய நூலுக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்தமைக்கு இரண்டு முறை பணப்பரிசு பெற்ற சிறப்புக்குரியவர்.

*



# 8

# படைப்பாளுமையும் செயற்திறனும் மிக்க செங்கை ஆழியான்

இலங்கை அரசின் இலக்கியத்துக்கான அதியுயர் விருதான சாஹித்தியரத்னா விருதினை 2009இல் பெற்றவர் பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான்

க.குணராசா என்ற இயற்பெயர் கொண்ட செங்கை ஆழியான் 25.01.1941இல் வண்ணார் பண்ணையில் கந்தையா - அன்னம்மா தம்பதியினருக்கு எட்டாவது மகனாகப் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும், உயர்கல்வியை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பெற்றார். புவியியல் சிறப்புப் பட்டதாரியான இவர், பின்னர் முதுகலைமாணிப் பட்டத்தையும் கலாநிதிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயிலுங்காலத்தில் செங்கை ஆழியான் சிறுகதைத் துறையிலேயே கவனஞ் செலுத்தி வந்தார். சமகாலச் சமுதாயப் பிரச்சனைகள்

பலவற்றிற்கு எழுத்தில் வடிவம் தந்தார். தாம் எழுதியதோடு பிறரையும் எழுதத் தூண்டி நின்றார். செம்பியன் செல்வனோடு இணைந்து பல இலக்கியச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தார். இதனால் இவரும் செம்பியன் செல்வனும் இலக்கிய இரட்டையர்கள் என அக்காலத்தில் போற்றப்பட்டனர். பல்கலைக்கழகச் சூழலில் நூல் வெளியீட்டுக்கென ஓர் அமைப்பை செம்பியன் செல்வனுடனும் நவஜோதியுடனும் இணைந்து இவர் உருவாக்கினார். பல்கலைக்கழக வெளியீடு என்ற பெயரில் அமைந்த இந்த அமைப்பின் மூலம் கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள் ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்தன. இத்தொகுதிகள் மூலம் பல புதிய எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழிலக்கிய உலகிற்கு அறிமுகமானார்கள். இவ்வாறு அன்றைய காலகட்டத்தில் பலர் தமது ஆற்றல்களை இனங்கண்டு வெளிக்கொணர செங்கை ஆழியான் ஓர் உந்து சக்தியாகச் செயற்பட்டார். இத்தகைய செயற்பாட்டினை அவர் தொடர்ந்தும் தனது எழுத்துலக வாழ்க்கை முழுவதிலும் ஆற்றி வந்துள்ளார்.

தனது பல்கலைக்கழக வாழ்க்கைக்குப் பின்னர் யாழ். இலக்கிய வட்டத்துடன் இணைந்து பல்வேறு இலக்கியச் செயற்பாடுகளை ஆற்றியதுடன் புதிய தலைமுறைகள் இலக்கிய உலகில் அடியெடுத்து வைப்பதற்குத் தூண்டு கோலாக அமைந்தார்.

சிறுகதைத் துறையில் செங்கை ஆழியான் சுமார் 160 கதைகள்வரை எழுதியுள்ளார். இவரது கதைகள் இலங்கையின் சகல பத்திரிகைகள் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. தமிழக சஞ்சிகைகளான உமா, தாமரை, கணையாழி, குமுதம், சுபமங்களா, கலைக்கதிர், கலைமகள், ஆனந்தவிகடன் முதலானவற்றிலும் கனடா, பிரான்ஸ், லண்டன் முதலான புலம்பெயர் நாட்டுச் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

சிங்களப் பத்திரிகைகளான ராவய, சிலுமின, லங்காதீப முதலிய பத்திரிகைகளில் இவரது சிறுகதைகள் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. இதுவரை இவரது ஐந்து சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் "இரவுநேரப்பயணிகள்" என்ற தொகுதி வடக்கு கிழக்கு மாகாணச் சிறுகதைப் பரிசினைப் பெற்றது. "யாழ்ப்பாண இராத்திரிகள்" என்ற தொகுதி இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசினையும் தமிழ்நாடு லில்லி தேவநாயகம் நினைவு சிறப்புப் பரிசினையும் பெற்றன. இரவுநேரப்பயணிகள் என்ற தொகுதி "ராத்திரி நொன சாய்" எனச் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவருடைய பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள் பல்வேறு சிறுகதைப் போட்டிகளில் பரிசில்களை வென்றுள்ளன. பதினைந்துக்கு மேற்பட்ட சிறுகதைகள் பல்வேறு சிறுகதைத் தொகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

ஈழத்து நாவல் வரலாற்றில் செங்கை ஆழியானுக்கு ஓர் உன்னத இடமுண்டு. இவரது நாவல்கள் பெரும்பாலும் களத்திலிருந்து நேரடியாகப் பெற்ற அனுபவத்தின் மூலம் எழுந்தவை. இதனால் இவை உயிர்த்துடிப்பு உள்ளவையாக அமைந்துவிடுகின்றன. இதுவரை இவர் நாற்பத்தாறு நாவல்களை எழுதியுள்ளார். இவற்றில் யானை என்ற நாவல் The Feast என்ற மகுடத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. காட்டாறு நாவல் "வன மத கங்க" எனச் சிங்களத்தில் மொழிபெயர்ப்பு நாவலாக வெளிவந்துள்ளது. பிரளயம் (1976) காட்டாறு (1977) மரணங்கள் மலிந்த பூமி (2000) என்பன தேசிய சாகித்திய மண்டலப் பரிசினைச் சுவீகரித்துக் கொண்டன. இவருடைய நாவல்களிற் சில பல்வேறு போட்டிகளில் முதற் பரிசினை வென்றுள்ளன. பல பல்வேறு நிறுவனங்களின் பரிசில்களைப் பெற்றுள்ளன. இவரது வாடைக்காற்று நாவல் திரைவடிவம்

பெற்றது. இவரது குறுநாவல்கள் சிலவும் பல்வேறு பரிசில்களை வென்றுள்ளன. பத்துக் குறுநாவல்கள் அடங்கிய தொகுதி "ஆயிரமாயிரம் ஆண்டுகள்" என்று மகுடத்தில் வெளியாகியுள்ளது. செங்கை ஆழியான் பல்வேறு பிரதேச சமூகங்களை ஈழத்து நாவல் இலக்கியத்துக்கு அறிமுகம் செய்துள்ளார். மீனவர்கள், சலவைத் தொழிலாளர்கள் சுருட்டுத் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரது சமூகப் பிரச்சினைகளை அணுகியுள்ள அவர் படைப்புகளில் சமூகப் பார்வை சிறப்புற அமைவதை அவதானிக்கலாம். ஈழத்து எழுத்தாளர்களுள் போர்க்கால நிகழ்வுகளை அதிகளவில் இலக்கியமாக்கியவர் செங்கை ஆழியான் என்பதும் குறிப்பிடக் கூடியதாகும்.

செங்கை ஆழியான் சிறுவர் புதினங்களாக பூதத்தீவுப் புதிர்கள், ஆறுகால்மடம் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன

செங்கை ஆழியான் ஐம்பதுக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். இவரது புனைகதை சாராப் படைப்புகளாக இருபத்து நான்கு மணிநேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, "களம் பல கண்ட கோட்டை", "சுனாமி" ஆகியவை வெளிவந்துள்ளன.

செங்கை ஆழியான் பல தொகுப்பு நூல்களை வெளிக் கொணர்ந்துள்ளார். சம்பந்தன் சிறுகதைகள், மறுமலர்ச்சிச் சிறுகதைகள், முன்னோடிச் சிறுகதைகள், சிரித்திரன் சுந்தரின் நானும் எனது கார்ட்டூன்களும், ஈழகேசரிச் சிறுகதைகள், முனியப்பதாசன் சிறுகதைகள், புதுமைலோலன் சிறுகதைகள், மல்லிகைச் சிறுகதைகள், சிங்களச் சிறுகதைகள் என்பன இவற்றுள் அடங்கும்.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் ஞானம் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"...செங்கை ஆழியான் தான் நாவல் எழுதுகின்ற அந்த வேகத்தோடு அல்லது அந்த வேகத்துக்கு சமமான ஓர் கடப்பாட்டு உணர்வோடு இந்த மறுமலர்ச்சிக் கதைகள் என்கிறவற்றை வெளியிலே கொணர்ந்தார். அவற்றை வாசித்தபொழுது நான் ஒரு புதிய உலகத்துக்குள் போகக்கூடியதாக இருந்தது.

"...இந்த முற்போக்கு இயக்கம் இவ்வளவு மிகச் செழிப்பாகத் தொடங்கி வளர்வதற்குக் காரணமாக இருந்தது என்னவென்றால், ஏற்கனவே இருந்த ஒரு சூழல். அந்தச் சூழல் மறுமலர்ச்சி இயக்கத்தினால் ஏற்படுத்தப்பட்டது... இதுதான் முக்கியம்"

"...இந்த மறுமலர்ச்சி சஞ்சிகையின் வருகையும் மறுமலர்ச்சியின் போக்கும் எனக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டமாய் படுகிறது. இதனை நாங்கள் முன்னர் அழுத்திச் சொல்லவில்லை. ஆனால் இப்போதுள்ள நிலையில் பல்கலைக்கழகத்தில் செய்யவேண்டிய ஒரு ஆராய்ச்சிக்கான முழுத்தளத்தையும் செங்கை ஆழியான் செய்திருக்கிறார்."

மேற்குறிப்பிட்ட பகுதிகள் செங்கை ஆழியானின் சில தொகுப்பு முயற்சிகள் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை எடுத்தியம்புகின்றன. எமது ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களித்த பத்திரிகைகள் சஞ்சிகைகள் செய்த பணிகளையும் படைப்பாளிகளின் படைப்பாக்க முயற்சிகளையும் இலக்கியச் செல்நெறியில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகளையும் அறிந்துகொள்ள இத்தொகுப்புகள் உதவுவதோடு வரலாற்றுத் தவறுகளைச் சரிசெய்வதற்கும் பெரும் பங்காற்றியுள்ளன.

செங்கை ஆழியான் ஆய்வு நூல்களாக ஈழத்தவர் வரலாறு, நல்லைநகர் நூல், யாழ்ப்பாண அரச பரம்பரை, Jaffna Dynasty, ஈழத்துச் சிறுகதை வரலாறு, சுருட்டுக் கைத்தொழில் என்பன

வெளிவந்துள்ளன. மகாவம்சத்தை தமிழில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். யாழ்ப்பாணதேசம், பூதத்தம்பி என்னும் சிறிய நூல்களும் இவரால் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் ஈழத்துச் சிறுகதை வரலாறு இவரது ஆய்வு முயற்சிகளின் மகுடமாகக் கருதப்படுகிறது.

செங்கை ஆழியான் பல பதவிகளை வகித்தவர் 1964 - 1971வரை ஆசிரியராகக் கடமையாற்றியவர். 1971இல் இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்திபெற்று 2001இல் ஓய்வு பெறும்வரை உயர் நிர்வாக சேவை அதிகாரியாகப் பல பதவிகள் வகித்தவர். காரியாதிகாரி, உதவி அரசாங்க அதிபர், பிரதிக் காணி ஆணையாளர், பிரதேசச் செயலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர், வட பிராந்திய ஆணையாளர், மாநகர ஆணையாளர் என அவர் வகித்த பதவிகள் அவரால் பெருமையுற்றன.

இலக்கியத்துறையில், யாழ். இலக்கிய வட்டத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும், பின்னர் அதன் தலைவராகவும் விளங்கியவர் இலங்கை இலக்கியப் பேரவையின் தலைவராகவும் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். இலக்கியக் கலாநிதி பண்டிதமணி க. கணபதிப்பிள்ளையின் நினைவாக வழங்கப்படும் சம்பந்தர் விருதுக்குழுவின் இணைப்பாளர், கனக செந்தி கதாவிருது அமைப்பின் பணிப்பாளர் இவ்வாறு கலை இலக்கிய இயக்க சக்தியாக இயங்கிய செங்கை ஆழியான் எழுத்தாளர் சகலரோடும் அன்பாகவும் பண்பாகவும் பழகுபவர்.

செங்கை ஆழியான் ஓர் புவியியற்பட்டதாரி என்ற வகையில் பேராதனைப் பல்கலைக்கழகப் பயிற்சியாளராகவும், கொழும்புப் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராகவும் பின்னர் ஆறு ஆண்டுகள் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். அக்காலத்தில் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக்கலாசாலை வருகை விரிவுரையாளராகவும் இருந்து நூற்றுக்கணக்கான

புவியியலாளர்களை உருவாக்கியுள்ளார். ஐம்பதுக்கும் மேற்பட்ட புவியியல் நூல்களை மாணவர்களுக்கென எழுதியுள்ளார்.

செங்கை ஆழியானின் பணிகளைப் பாராட்டி பல நிறுவனங்கள் அவருக்குப் பட்டங்கள் விருதுகள் வழங்கிக் கௌரவித்துள்ளன. "இலக்கியச் செம்மல்", "புனைகதைப் புரவலர்", "ஆளுநர் விருது", "கம்பன் கழக விருது" என்பன இவற்றுட் சிலவாகும்.

செங்கை ஆழியானின் படைப்புகளை ஆய்வு செய்து இதுவரை ஐந்து மாணவர்கள் தமது பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செங்கை ஆழியான் ஞானம் சஞ்சிகைக்கு ஒரு விரிவான தொடர் பேட்டியை அளித்துள்ளார். அப்பேட்டி அவரது 50 வருடகால இலக்கியச் செயற்பாடுகளைப் பதிவுசெய்வதோடு ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிப்போக்கின் ஒரு வெட்டுமுகத்தை வெளிக்காட்டுவதாகவும் அமைந்தது. அவரது இந்தத் தொடர்பேட்டி நூலாகவும் வெளிவந்துள்ளது.

செங்கை ஆழியானின் மனைவி கமலாம்பிகை ஓர் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர், இவர்களுக்கு ரேணுகா, பிரியா, ஹம்சா என மூன்று பெண்பிள்ளைகள்.

ஈழத்து எழுத்தாளர்களில் அதிக படைப்புகளைத் தந்தவர், அதிக இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர், அதிக உயர் பதவிகளை வகித்தவர், அதிக கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர் செங்கை ஆழியான்.

செங்கை ஆழியான் தனது 75 ஆவது வயதில் அமரரானார்.

❋



# 9

# முற்போக்கு இலக்கியவாதி முகம்மது சமீம்

**2010**ஆம் ஆண்டுக்கான அரச உயர்விருதான சாஹித்திய ரத்னா விருதைப்பெற்றவர் முகம்மது சமீம். இவரது தந்தை அகமது புள்ளை பதுளையைச் சேர்ந்தவர். தாய் நாச்சிய உம்மா மட்டக்களப்பு காத்தான் குடியைச் சேர்ந்தவர். குடும்பத்தில் இரண்டாவது மகனாகப் பிறந்த சமீம் அவர்களுக்கு ஐந்து ஆண்சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உளர்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை பதுளை சரஸ்வதி வித்தியாலயம், அல் அதான் முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் பெற்றார். பின்னர் பதுளை தர்மதூதா கல்லூரியில் சேர்ந்து ஆங்கில மொழிமூலம் கல்வியைத் தொடர்ந்தார். அங்கு 1946-1948 வரை மாணவர் மன்றத்தின் இணைச்செயலாளர்களில் ஒருவராக இருந்து பல தமிழ் விழாக்கள், அரசியல் ஊர்வலங்கள் ஆகியவற்றை நடத்தினார். அக்கல்லூரியின் தர்மதூதன் என்ற சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இருந்து தொழிற்பட்ட இவர் முகுந்தன்

என்ற புனைபெயரில் சில சிறுகதைகளை எழுதிப் பாராட்டுப் பெற்றார். எஸ். எஸ்.சி பரீட்சையில் விசேட சித்தி பெற்ற இவர் இலண்டன் மெட்ரிகுலேசன் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

கொழும்பு சாஹிராக் கல்லூரி அதிபர் டாக்டர் ஏ. எம். ஏ. அஸீஸ் அளித்த புலமைப்பரிசில் உதவியினால் 1951இல் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் சேர்ந்து 13 மாதங்களிடையே விசேட அனுமதியுடன் எச். எஸ். ஸி பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தார். சாஹிராக் கல்லூரியில் மாணவராக இருந்த காலத்தில் சிறந்த பேச்சாளராகவும், விவாதங்களில் பங்கேற்பவராகவும் இருந்ததோடு பலபரிசில்களையும் பெற்றுள்ளார்.

1953ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் சென்றார். அங்கு வரலாற்றில் பி.ஏ. விசேட சித்திபெற்றார். பேராதனைப் பல்கலைக்கழக மாணவராக இருக்கும்போது இலக்கியத்துறை மீதான ஈடுபாடு அதிகரித்தது. அங்கு கைலாசபதி, சிவத்தம்பி, செல்வநாயகம் போன்றோரின் நட்பும் தமிழ் இலக்கியத் தொடர்பும் இடதுசாரிக் கருத்துக்களின் மீதுள்ள ஈர்ப்பும் ஏற்பட்டன.

சமீம் பல்கலைக்கழகத்தில் இருக்கும்போது, ஹொக்கி விளையாட்டுக்குக் கப்டனாகவும், உதைப்பந்தாட்டத்துக்கு உதவி கப்டனாகவும் செயல்பட்டார். விளையாட்டுக்களை நிர்வகிக்கும் விளையாட்டுக்கழகம் (Sport Council) என்ற கழகத்திற்கு செயலாளராக இரண்டு வருடம் செயற்பட்டார்.

பல்கலைக்கழகப் படிப்பு முடிந்ததும் சாஹிராக்கல்லூரியில் 1958இல் ஆசிரியராகச் சேரந்தார். பின்னர் உப அதிபர்களில் ஒருவரானார்.

சாஹிராவில் இருக்கும்போது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் சேர்ந்தார். சாஹிராவில் உப அதிபர்களில் ஒருவராக நியமிக்கப்பட்ட காரணத்தினால் அரசாங்கத்தில் பல பதவிகளில் நியமிக்கப்பட்டார். கலாசார

அமைச்சின் ஆலோசகராக இருந்த காலத்தில் சாஹித்திய மண்டலம் என்ற ஒரு சபையை அரசாங்கம் அமைத்தது. இதில் முஸ்லிம் பிரதிநிதிகளாக இவரும் டாக்டர் உவைஸ் அவர்களும் நியமிக்கப்பட்டார்கள். சமீம் ஆலோசகராக இருந்த காலத்தில் இலங்கையில் பல பாகங்களில் இஸ்லாமிய மதரசாக்கள் உண்டாக்குவதற்கும் அவைகளுக்கு நிதி உதவி கொடுப்பதற்கும் பாடுபட்டார்.

முஸ்லிம்களின் விடுமுறை நாட்களை நிர்ணயிப்பதற்கு அவரிடம் ஆலோசனை கேட்கப்பட்டபோது, பெருமான் நபிகள் நாயகம் பிறந்த தினத்தை அரசாங்க விடுமுறையாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று இவர் சமர்ப்பித்த ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

கல்வி நிர்வாக சேவைக்கு இளம்வயதிலேயே தெரிவு செய்யப்பட்டு 1961இல் மூதூர் பகுதிக்கு நியமனம் பெற்றார். 1963இல் பெரும்பாக வித்தியாதரிசியாக பதவி உயர்வு பெற்றார். கம்பகா, வேர்விலை, பதுளை, கண்டி ஆகிய இடங்களில் பெரும்பாக வித்தியாதரிசியாகக் கடமையாற்றினார்.

1958 - 1965 காலப்பகுதியில் சாஹித்திய மண்டல உறுப்பி னராகத் தொழிற்பட்டார். தான் கடமையாற்றிய இடங்களில் பல முற்போக்கு எழுத்தாளர்களை அழைத்து விழாக்கள் பலவற்றை நடத்தினார்.

1968இல் பதுளையில் நடைபெற்ற மாபெரும் தமிழ் இலக்கிய விழாவில் பங்குபற்ற மகாகவி பாராதியாரின் பேர்த்தியுடன் எழுத்தாளர் கு. அழகிரிசாமியும் இவரால் அழைக்கப்பட்டிருந்தனர். 1967இல் கல்வி டிப்ளோமா பரீட்சையில் தகுதிபெற்று 1969இல் பிரதம கல்வி அதிகாரியாக மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டார். 1970 முதல் 1974வரை அங்கு கடமையாற்றினார். 1975இல் முதற்தர கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று

காலியில் நியமனம் பெற்றார். 1978இல் அகில இலங்கை கல்விப்பணிப்பாளராக நியமனம் பெற்றார். கல்வி அமைச்சில் முஸ்லிம்களுக்கெனத் தனிப்பிரிவு ஒன்றை முதன்முதலில் உருவாக்கி அதன் பணிப்பாளராக நியமனம் பெற்று அகில இலங்கையிலும் உள்ள முஸ்லிம்பாடசாலைகளுக்கு உதவினார். 539ஆக இருந்த முஸ்லிம்பாடசாலைகளின் தொகை 759ஆக அதிகரிக்க வைத்தார்.

1980இல் தற்காலிக கல்விப் பிரதிப்பணிப்பாளராக கடமைப்பொறுப்பேற்றார். கல்வி சீர்திருத்தக் கமிட்டிக்குத் தலைவராக இருந்தார். அதன்பின் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்று, 1989இல் றியாட்டில் அமைந்துள்ள இன்டநஷனல் இஸ்லாமிய அகடமியின் பணிப்பாளரானார். 1990இல் இலங்கைக்குத் திரும்பிவந்து இரண்டுவருட அதிபர் பதவியை வகித்தபின் "ஹறோ இன்டநஷணல்" ஆங்கிலக் கல்லூரியை அமைத்து அதன் பிரதம பணிப்பாளராகப் பதவிவகித்தார்.

கைலாசபதியின் தூண்டுதலுக்கு ஏற்ப வரலாறு, இலக்கியம் சம்பந்தமான பல கட்டுரைகளை எழுதினார்.

இவர் ஆங்கிலத்திலும் சிலநூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சிலோன் டெயிலி நியூஸ் பத்திரிகையில் அரசியல், கல்வி, சமூகம் சார்ந்த கட்டுரைகளை எழுதியுள்ளார்.

"ஏனைய முற்போக்கு எழுத்தாளர்கள் கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் போன்ற துறைகளைச் சார்ந்தவர்கள். சமீமைப் பொறுத்தவரை அவர் ஒரு வரலாற்று ஆய்வாளராக உள்ளார். அவர் இலக்கியக்கட்டுரை விமர்சனத் துறைகளில் ஈடுபட்டிருந்தாலும் வரலாற்று ஆய்வுத்துறையில் போற்றற் கரிய பங்களித்துள்ளார்" எனக் குறிப்பிடுகிறார் நீர்வை பொன்னையன்.

சமீம் ஒன்பது நூல்களை எழுதியுள்ளார். அவையாவன: 1. இஸ்லாமிய கலாசாரம் 2. இஸ்லாமிய தத்துவ ஞானம்

3. முஸ்லீம் திருமண சம்பிரதாயங்கள் 4. ஒரு சிறுபான்மை இனத்தின் பிரச்சினைகள் - 4 பாகங்கள் 5. படைப்பாளிகளும் ஆய்வுகளும் 6. இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் 7. எனது இலக்கியத் தேடல் 8. கைலாசபதி 9. சில்லையூர் செல்வராஜன் 10. ஒரு விமர்சனப் பார்வை என்பனவாம். இவரது நூல்களில் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது "ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்" என்ற நூல் நான்கு பாகங்களில் வெளிவந்த நூலாகும். இந்த நூல் இலங்கையில் பேரினவாதிகள் பேரினவாத அரசாங்கங்களின் இனவாதக் கொள்கைகளாலும் அட்டூழியங்களாலும் அடக்கு முறைகளாலும் அழிவுகளாலும் தமிழ் முஸ்லிம்மக்கள்பட்ட கஷ்டங்களையும் சம்பவங்களையும் திட்டமிட்ட சதிகளையும் பற்றி ஆதாரபூர்வமான வரலாற்றுச் சான்றுகளுடன் எழுதப்பட்டுள்ளது. சிங்களப் பேரினவாதிகள் வரலாற்றை மாற்றி எழுதியுள்ளனர். "மகாவம்சம்" ஒரு வரலாற்று ஆவணமல்ல இதைப் பிக்குமார்கள் தங்களுக்கு ஏற்றாற்போல் எழதியுள்ளனர்" எனத் துணிவுடன் எழுதியுள்ளார். இந்நூல் 1200 பக்கங்களைக் கொண்ட நூலாகும். இந்த நூலுக்கு அவ்வாண்டின் சாஹித்திய மண்டலப்பரிசு கிடைத்தது.

இவரது கல்வி இலக்கியப்பணிகளுக்காக உலக இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மாநாடு சென்னையில் நடைபெற்ற போதும், இலங்கையில் ஆறாவது அனைத்துலக இஸ்லாமிய மாநாடு 2002இல் இடம்பெற்ற போதும் இவர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். இலங்கை முஸ்லிம் கலாசார அமைச்சினால் கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரது பிறிதொரு நூலான படைப்பாளிகளும் ஆய்வாளர்களும் நூலுக்கு கிழக்கு மாகாண பிரதேசசபையின் சாகித்தியமண்டலப் பரிசு வழங்கப்பட்டது. இலங்கை முஸ்லிம்விவகார அமைச்சு இவருக்கு அறிஞர் என்ற பட்டத்தை வழங்கியது. இலங்கை எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக்குழு உறுப்பினராக இருந்து செயற்பட்டு வந்துள்ளார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர்

சங்கம் நடத்திய பாரதிவிழா, பாரதி நூற்றாண்டுவிழா, சோமசுந்தரப்புலவர்விழா, ஆறுமுகநாவலர் விழா போன்ற விழாக்களை ஏற்பாடு செய்வதிலும் அவற்றை வெற்றிகரமாக நடத்துவதிலும் பெரும் பங்களித்துள்ளார்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முன்னெடுத்த தமிழ் நாட்டிலிருந்து நூல் இறக்குமதித்தடை, பண்டிதர் குழாமிற்கு எதிரான போராட்டம், புதுமை இலக்கிய சஞ்சிகை வெளியீடு போன்றவற்றில் தன்னை இணைத்துக்கொண்டு செயற்பட்டார்.

இ.மு.எ.ச இயங்க முடியாத நிலை ஏற்பட்டபோது இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவையை உருவாக்குவதில் ஈடுபட்டதுடன் அதன் செயற்குழு உறுப்பினராகவும் செயற்பட்டார்.

"யாழ்ப்பாணத்தில் நடந்த விழாவில் அழைப்பில்லாமலேயே ஸாஹித்திய மண்டல உறுப்பினர் சமீம் கலந்துகொண்டு கேட்ட கேள்விகள் சபையைக் கலக்கின. இலங்கைத்தமிழ் இலக்கிய வரலாற்றின் மைல்கல்லான கூழ்முட்டை எறிந்து கூட்டத்தைக் குழப்பியடித்த நிகழ்ச்சி இச்சந்தர்ப்பத்தில்தான் நடந்தது. இழிசனர் வழக்கென ஒதுக்கிய மக்கள்இலக்கியம் மகுடமேற வைத்த சம்பவம் இச்சந்தர்ப்பத்தில்தான் நடந்தது. அதற்கும் கதாநாயகன் எம். சமீம் அவர்கள்தான் என்பதால் முற்போக்கிலக்கியத்தின் முடிசூடா மன்னராகின்றார்" எனப் பதிவுசெய்துள்ளார் கவிஞர் ஏ. இக்பால் (நூல்: முற்போக்கு இலக்கியவாதி முகம்மதுசமீம் பக்:130)

"முற்போக்கு இலக்கிய இயக்கம் யானை தன்னுடைய தலையிலே தானே மண்ணை அள்ளிப்போடுகிறமாதிரி தன்னைத்தானே மாசுபடுத்திக் கொண்டதற்கு முக்கிய காரணம் அந்த முட்டைஅடி. முட்டை அடித்தது என்பது நாங்கள் செய்த மிகப்பெரிய மோசமான தவறு. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை அது மோசமாகப் பாதித்தது. நிச்சயமாக அது ஒரு கறை, நான் ஒத்துக் கொள்கிறேன். அதன்பிறகு நாங்கள் எழும்பவே இல்லை" என்கிறார் சிவத்தம்பி.

ஆனால் சமீம் அதனை மறுக்கிறார். அவர் இது தொடர்பாக பின்வருமாறு பதிவு செய்துள்ளார். "விழாவன்று நான் மேடையில் ஏறி முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டார்கள் என்று கூறத்தொடங்கியதும் ஒலிபெருக்கி வயரை வித்துவான் வேலன் வெட்டி எறிந்தார். எனக்கு எதிராக வேந்தன் குரல் எழுப்பினார். அப்பொழுது முற்போக்கு எழுத்தாளர் சங்க பிரேம்ஜி சாகித்திய பரிசு கொடுப்பதில் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று கூற முற்போக்கு வாதிகளுக்கும் பிற்போக்கு வாதிகளுக்குமிடையில் சபையில் கைகலப்பு ஏற்பட்டது. நாற்காலிகள் வீசப்பட்டன. சிலர் மேடையை நோக்கி கூழ்முட்டை எறிந்தார்கள். தலைமை வகித்த நடேசன் அவர்களைத் தூக்கிக்கொண்டு சென்று வெளியே விட்டார்கள். அதுதான் நடந்தது. இதை முற்போக்கு எழுத்தாளர்கள்தான் செய்தார்கள் என்று ஒரு பொய்யான வதந்தியைக் கிளப்பிவிட்டார்கள். சிவத்தம்பி கூட்டத்திலிருந்து கிளம்பிவிட்டார். முற்போக்கு எழுத்தாளர்கள்தான் செய்தது என்று கூறுவதற்கு அவருக்கு எந்த அருகதையும் இல்லை." எனப்பதிவு செய்துள்ளார்.

முகம்மது சமீம் அவர்கள் கல்வித்துறையில் அரும்பணி ஆற்றியவர், புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளர், பன்னூல் ஆசிரியர், விமர்சகர், நாடறிந்த எழுத்தாளர், மும்மொழிகளிலும் சரளமாகப் பேசக்கூடிய சிறந்த பேச்சாளர், பல்துறைகளிலும் தடம் பதித்து அனைத்து மக்களாலும் மதிக்கப்பட்டவர். அத்துடன் "முற்போக்கு எண்ணக் கருவிலிருந்து கடைசிவரை மாறாது நிலைத்து நின்று தனது கருத்துக்களை துணிவுடன், ஆதாரத்துடன் அளித்தவர்" என்ற பெருமைக்குரியவர். அவர் நாமம் என்றும் வரலாற்றில் வாழும்.

✱



# 10

# கல்வித்துறையில் ஒரு கலைச்சுடர் பேராசிரியர் சபா ஜெயராசா

**இ**லங்கை அரசின் இலக்கியத்திற்கான அதியுயர் விருதான சாஹித்தியரத்னா விருதினை 2011இல் பெற்றவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள்.

யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற கிராமங்களில் ஒன்றான இணுவிலில் சண்முகம் சபாரத்தினம் அபிராமிஅம்மாள் தம்பதியினருக்கு 27.02.1940 அன்று மகனாகப் பிறந்த இவர், தனது ஆரம்பக்கல்வியை இணுவில் மத்திய கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றார்.

1963இல் இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே இணைந்த காலத்தில் கல்விமாணி சிறப்புப்பட்ட கற்கைநெறி அங்கே ஆரம்பிக்கப்பட்டது. புதுமைநாட்டத்தில் ஈடுபாடு கொண்ட சபா ஜெயராசாவும் அவரது நண்பர் சோ. சந்திரசேகரமும் அந்தப் புதிய கற்கைநெறியிலே சேர்ந்து கொண்டார்கள். இருவரும் புகழ்பெற்ற மார்ஸ் விடுதியில்

ஒரே அறையில் நான்கு வருடங்கள் ஒன்றாகவிருந்து தமது பட்டப்படிப்பை ஒரே காலகட்டத்தில் நிறைவுசெய்தார்கள். பின்னாளில் இருவரும் கல்வியியல் பேராசிரியர்களாக மிளிர்ந்தமை இலங்கையில் உயர்கல்வி வரலாற்றிலே நிகழ்ந்த அபூர்வ நிகழ்வாகும்.

பல்கலைக்கழகக் கல்வி மூலம் கல்விப்புல வாண்மை யாளராகவும் புத்தாக்கச் சிந்தனையாளராகவும் உருப்பெற்ற சபா.ஜெயராசா கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தனது முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் நெல்லியடி மகாவித்தியாலயம், கொழும்பு விவேகானந்தா ஆகிய பாடசாலைகளில் கற்பித்த இவர், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளராகவும் பணியாற்றினார். யாழ்ப்பாணம், கொழும்பு, திறந்த பல்கலைக்கழகங்களிலும் தேசிய கல்வி நிறுவகத்திலும் இவரது பணி தொடர்ந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விப்பீடம் உருவாக்கப்பட்டபோது 02.10.1982இல் அங்கு கல்விப்புல விரிவுரையாளரானார். 05.10.1985இல் நிரந்தர விரிவுரையாளராக உள்வாங்கப்பட்ட இவர், 05.10.1990இல் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 2இலும் 05.10.1996இல் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1இலும் பணியாற்றி 30.12.1998இல் பேராசிரியராகப் பதவி உயர்வுபெற்றார்.

கல்வி உளவியல், கலைத்திட்ட அபிவிருத்தி கலைத்திட்டமிடல் ஆகிய பாடநெறிகளில் இவரது விரிவுரைகள் அமைந்தன. தேவையேற்பட்டபோது ஏனைய பாடநெறிகளிலும் சிறப்பாகப் பங்கேற்று விரிவுரையாற்றினார். இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

ஞானம் சஞ்சிகைக்கு பேராசிரியர் சபா ஜெயராசா அளித்த நேர்காணலில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

தனது கல்வியியல் துறை அனுபவம் மற்றும் செயற்பாடுகள் குறித்து பின்வருமாறு விபரித்துள்ளார்:

"கல்வியியலில் கல்விக் கோட்பாடுகள், கல்வித் தத்துவங்கள், கல்வி உளவியல், குழந்தை உளவியல், பாடசாலை உளவியல், கல்விச் சீர்மியம், கல்வி வழிகாட்டல், கல்வித்திட்ட ஆக்கம், கல்வித்திட்டமிடல், கல்வி முகாமைத்துவம், ஒப்பியற்கல்வி, கற்பித்தலியல், கல்விப் புள்ளிவிபரவியல், கல்விக் கணிப்பீட்டியல், கல்வி வரலாறு, கல்வி நுட்பவியல், ஆசிரிய வாண்மையியல், கல்விச் சமூகவியல், கல்விச் சட்டவியல் என்றவாறு பல்வேறு உட்பிரிவுகளும் சிறப்புத்துறைகளும் உள்ளன. கல்விப் பேராசிரியராக இருப்பவர்களுக்கு இவ்வனைத்துத் துறைகள் பற்றிய மூலாதாரமான அறிவு அவசியம். கல்வியின் குறிப்பிட்ட ஒரு துறையிலே பொதுவான அல்லது ஜனரஞ்சகமான ஒரு வினா எழுப்பப்படும் பொழுது அது தனது துறைக்கு அப்பாற்பட்டது என ஒரு பேராசிரியர் கூறிவிடமுடியாது. பொது நிலையிலிருந்து குறிப்பிட்ட ஒரு துறையில் ஆழ்ந்து ஈடுபடும் ஒரு புலமையாளராகவும் ஒரு பேராசிரியர் தன்னை வளர்த்துக் கொள்ளல் வேண்டும். இவை ஒரு பேராசிரியரின் இருநிலைப் பரிமாணங்கள் ஆகும். யாழ்ப்பாணத்துப் போர்ச்சூழலும் பல்கலைக்கழக ஆளணியின் பற்றாக்குறையும் கல்வியியலின் பல்வேறு பாடங்களிலும் விரிவுரைகளை மேற்கொள்ளவேண்டிய நெருக்குவாரமும் அனைத்துத் துறைகளிலும் ஈடுபடவேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இரவு பகலாகக் கண்விழித்து அனைத்துத் துறைகளிலுமுள்ள நூல்களைப் படித்து புதுமைப்படுத்தலையும் இற்றைப் படுத்தலையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதேவேளை எனது சிறப்புத் துறையாகிய கல்வி உளவியலில் ஆழ்ந்து நிற்கவும் ஏற்பட்டது."

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளராக விளங்கிய காலத்தில் சமாந்தரமாகப் பல்வேறு துறைத்தலைவர் பதவிகளையும் ஏற்று நடத்தினார். 07-07-1992இல் இராமநாதன் நுண்கலைக்கழக பதில்தலைவராகவும் 26-10-1995இல் அதன் தலைவராகவும் 10-10-2002இலிருந்து கல்வியியல் துறைத் தலைவராகவும் அதேநேரம் பரத நாட்டியத்துறையின் பதில் தலைவராகவும் பணியாற்றினார். மேலும் இவர் 01-09-2003இல் உதவி இணைப்பாளராக ஊடகவள பயிற்சி நிலையத்திலும், கல்வியியல் முதுமாணி கற்கைநெறிக்கு இணைப்பாளராக 01-10-2004இலும் 01-10-2005இலும் தொடர்ந்து பணியாற்றினார்.

சபா.ஜெயராசா அவர்கள் கல்வியியல் துறையில் ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். தமிழில் கல்வியியல் துறை பெரும் வளர்ச்சியும் பாய்ச்சலும் ஏற்பட்டபோது அதற்கேற்றவாறு நூலாக்கப் பணியிலும் இவர் ஈடுபடத் தொடங்கினார். இலங்கையில் பெருந்தொகையான நூல் களை வெளியிட்ட புலமையாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக சபா.ஜெயராசா விளங்குகிறார். கல்வியியல் சார்ந்து 19க்கும் மேற்பட்ட நூல்களையும் உளவியல் சார்ந்து 11 நூல்களையும் குழந்தைகளுக்கான 6 நூல்களையும் கலை இலக்கியம்சார்ந்த 14 நூல்களையும் ஏனைய துறைசார்ந்து 4 நூல்களையும் 2 மொழிபெயர்ப்பு நூல்களையும் எல்லாமாக 56 நூல்கள்வரை இவர் எழுதியுள்ளார். தொடர்ந்தும் இவர் எழுதிக் கொண்டிருக்கிறார்.

இவரது ஐந்து நூல்களுக்கு அரச விருது கிடைத்துள்ளது. யுனிசெப் நிறுவனத்தினர் இவர் எழுதிய சிறுவர் நூல் களை சிறந்தவையாக ஏற்று அவற்றை அச்சிட்டு யாழ் நகரசபையூடாக சிறுவர் வாசிப்புக்கு இலவசமாக விநியோ கித்தது. பல்துறைசார்ந்த நூல்களை அதிகமாக வெளிக்

கொணர்ந்தமைக்காக உலகப் புகழ்பெற்ற அமெரிக்க நூற் பட்டியல் நிறுவனம் இவருக்கு 2004ஆம் ஆண்டுக்கான Man of the year விருதினை வழங்கிக் கௌரவித்தது. இவரது நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் உலகப் புகழ்பெற்ற ஆய்வுச் சஞ்சிகையான New Frontiers in Education, The Mythical Journal முதலியவற்றிலும் தேசிய சர்வதேச ஊடகங்களிலும் வெளியாகியுள்ளன. இவர் Educational Research என்ற காலாண்டுச் சஞ்சிகையின் ஆசிரியராகவும் கல்வியியல் ஆய்வுச் சஞ்சிகையான The Council for Educational Journal Research என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் விளங்கியுள்ளார்.

இவரது எழுத்து நடையை விளங்கிக் கொள்வது கடினம் என்று ஒரு சாரார் கூறுகின்ற போதும் தனது ஆணித் தரமான கருத்துக்களை முன்வைப்பதில் சபா ஜெயராசா முதன்மையாளராக விளங்குகிறார். ஆங்கில மொழியில் காலத்துக்குக்காலம் புதிய சொற்கள் தோன்றிக் கொண்டி ருக்கும்போது தமிழிலும் புதிய சொற்கள் உருவாக வேண்டும் என்பதில் அக்கறைகொண்டு செயற்பட்டு வருகிறார். புதிய சொற்கள் பலவற்றைத் தமிழுக்குத் தந்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து இராமநாதன் நுண்கலைத் துறையின் தலைமைப்பொறுப்பு இவரை வந்தடைந்தபோது அத்துறையின் பட்டப்படிப்புக்குரிய பாடத்திட்டத்தையும் கலைத் திட்டத்தையும் உருவாக்கினார். அதற்காக இசை, நடனம், அழகியல் துறைசார்ந்த பல நூல்களை வாசித்தார். அதைத் தொடர்ந்து பல நூல்களை எழுதினார். ஈழத்தமிழர் கிராமிய நடனங்கள், ஆடல் அழகியல், பரதநாட்டிய அழகியல், தமிழர் அறிகையும் பரத நடனமும், அழகியற் கல்வி, ஆடற்கலை, இசையும் நடனமும், கலையும் ஓவியமும் போன்ற நூல்கள் இவற்றுள் அடங்கும். நிர்வாகப் பொறுப்புடன் பொருத்த மான கலைத்திட்டத்தையும் சிறப்பாக ஒருங்கமைத்து

நுண்கலைத்துறையினரும் கல்வியியலாளராக மிளிர இவர் வழிசமைத்தார்.

இலங்கையில் முதல் முதல் இசைப்பட்டதாரிகளை உருவாக்கிய பெருமை சபா.ஜெயராசா அவர்களையே சாரும். அவரால் உருவாக்கப்பட்ட இசைப்பட்டதாரிகள் பலர் நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளில் இசைத்துறை ஆசிரியர்களாகக் கடமை புரிகின்றனர். மேலும் இவர் தலைமைப் பொறுப்பு ஏற்றிருந்த காலத்திலே "சித்திரமும் வடிவமைப்பும்" என்ற புதிய பாட நெறியும் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்க் கல்வி மரபிலே அது ஒரு முக்கியமான பாடநெறியாகும். அதனைத் தொடர்ந்து ஆற்றல்மிக்க பல இளம் ஓவியர்கள் உருவானார்கள்.

கல்வியியல் துறையில் இவரது புதிய கண்டுபிடிப்புக்களாக கற்பித்தலில் இருதள அணுகுமுறை (Dual Plane Approach). உளவியலில் மனவெளுச்சி இயங்கியல் கோட்பாடு (Emodalities Theory), அறிகைச்சிக்கல் அமைப்பாக்கல் கோட்பாடு (Cogon Complex Formation) ஆகியவை விளங்குகின்றன

பேராசிரியரின் கற்பித்தல் பணியின் மகுடமாக கல்விப் புலத்தில் பட்டப் பின்படிப்பையும் முதுமாணிப் பட்டங்களையும் பயிற்றுவிப்பதற்கான தேர்வுநிலை வழிகாட்டி, விரிவுரையாளர், பேராசிரியர் என்னும் தளத்தில் பிரவேசித்தார். அதன் உச்சமாக கல்வியியல் கலாநிதிப்பட்ட ஆய்வுகளை நிகழ்த்துவோரின் மேற்பார்வையாளராகவும் கலாநிதிப்பட்ட ஆய்வேடுகளை மதிப்பீடு செய்யும் தேர்வாளராகவும் மிளிர்ந்தார். சென்னைப் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், அன்னை திரேசா பல்கலைக்கழகம், காமராசர் பல்கலைக்கழகம் என்பனவற்றில் இவர் கலாநிதிப்பட்ட பரீட்சகராகப் பணி யாற்றினார். இவரது பல்கலைக்கழகக் கற்பித்தலினூடாக

ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் உருவாகினர். 34 மாணவர்கள் கலாநிதிப்பட்டம், முதுமெய்யியல்மாணிப் பட்டம் பெற்றனர்.

பேராசிரியர் அவர்கள் கலை இலக்கியத்துறைகளில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவராக விளங்கினார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் ஆரம்பத்தில் தொடர்பு கொண்டவராக இருந்தார். எழுத்தாளர் சங்கச் செயற்பாடுகளுடனும் பங்கு கொண்டிருந்தார். இதைவிட யாழ்ப்பாணம் இளம் எழுத்தாளர் சங்கத்தை கலாபரமேஸ்வரனுடனும் டாக்டர் மகாலிங்கத்துடனும் இணைந்து ஆரம்பித்து இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து வந்தார். தன்னளவில் கலை இலக்கியம் சார்ந்த படைப்புகளை வாசித்து அவைசார்ந்த விமர்சனங்களையும் ஆய்வுகளையும் எழுதிவந்தார்.

பேராசிரியர் தனது இளமைப்பருவத்தில் இணுவில் சபா ஜெயராசா என்ற பெயரில் கலைச்செல்வி, சுதந்திரன், ஈழகேசரி, வீரகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகளில் சிறுகதைகளை எழுதியுள்ளார். இவர் ஒரு கவிஞர். மல்லிகை சஞ்சிகையில் பல கவிதைகளை எழுதியுள்ளார். இவரது கவிதைத் தொகுதி ஊர்வீதி என்ற மகுடத்தில் வெளியாகியது.

மார்க்ஸிய சித்தாந்தத்தில் கொண்ட ஈடுபாட்டால் தனது கருத்துக்களை அதன்வழிநின்று இயம்பும் ஆற்றல்படைத்த இவர், மேற்கத்திய இலக்கிய இஸங்கள் சார்ந்த அமைப்பியல்வாதம், பின்நவீனத்துவம், பெண்ணியம் போன்ற கருத்துக்களங்களிலும் ஈடுபாடுகொண்டு இவை தொடர்பான நூல்களையும் எழுதியுள்ளார்.

சபாஜெயரா அவர்களின் மனைவி திருமதி பானுமதி ஜெயராசா. இவர்களது புதல்வன் கோகுலன். மருமகள் அர்ச்சனா கோகுலன். பேரர்கள் கோகுலன் யதுகுலன், உ.துவாரகன் ஆவர்.

பேராசிரியர் அவர்கள் 23 வருட சேவையின்பின்னர் 19-12-2005 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அதன்பின்பு கொழும்புப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அவ்வப்போது விரிவுரைகள் நிகழ்த்தி வருகிறார்.

இணுவில் அறிவாலயத்தை உருவாக்குவதற்குத் தலைமை தாங்கிய பேராசிரியர், இணுவில் திருவூர் ஒன்றியத்தின் தலைவராகவும் விளங்குகின்றார். இவர் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராகவும் சிலகாலம் விளங்கியவர். தொடர்ந்தும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து அதனை வழிநடத்தும் ஆலோசகராக விளங்குகிறார். யாழ்.பல்கலைக்கழகம் இவரது பணிகளுக்காக 2010இல் கௌரவ கலாநிதி பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. கொழும்புத் தமிழ்ச்சங்கம் இவருக்குச் 2004ஆம் ஆண்டின் சங்கச் சான்றோன் விருதினை அளித்துக் கௌரவித்தது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி “கல்விப்புலரி” என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

பேராசிரியர் சிறந்த பேச்சாளர். மற்றவர்களது சுயமரியாதை, தனித்துவம் ஆகியவற்றை அங்கீகரித்து மதித்து உறவாடும் பண்பினர். மிகநெருக்கடியான போர்ச்சூழலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உறுதிதளராது கல்வி மேம்பாட்டுக்காக உழைத்த பெருமைக்குரியவர்.

✱



# 11

# அறிவுலகம் போற்றும் பேராசிரியர் அருணாசலம்

**இ**லங்கை அரசின் இலக்கியத்திற்கான அதியுயர் விருதான சாஹித்தியரத்னா விருதினை 2012இல் பெற்றவர் பேராசிரியர் க. அருணாசலம் அவர்கள்.

யாழ். தீபகற்பத்தின் தென்மராட்சிப் பகுதியிலுள்ள சாவகச்சேரியில் அல்லாரை என்பது மிகவும் பின்தங்கிய கிராமம். வாகனங்களில் செல்லமுடியாது கால்நடையாகவே சென்றடைய வேண்டிய இக் குக்கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அருணாசலம், 14.01.1946இல் கனகசபை காசிப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். ஏழு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்த இவருக்கு மூன்று ஆண்சகோதரர்களும் மூன்று பெண்சகோதரர்களும் கூடப்பிறந்தவர்களாவர். ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் தனது கடின உழைப்பினால் படிப்படியாக முன்னேறிப் பேராசிரியராக உயர்ந்தவர்.

திரு. அருணாசலம் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை அல்லாரை அரசினர் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றவர். விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கிணங்க பாடசாலை மட்டத்தில் மொழிசார்ந்த போட்டிகளிலும் சமயப்பரீட்சை, திருக்குறள் போட்டிப்பரீட்சை ஆகியவற்றிலும் முதன்மை நிலைபெற்று பல பதக்கங்களையும் சான்றிதழ்களையும் சுவீகரித்துக் கொண்டவர். க.பொ.த உயர்தரம் படித்துக்கொண்டிருந்தபோது எழுத்துப் போட்டியிலும் பேச்சுப்போட்டியிலும் நான்குமுறை பங்குபற்றி நான்குமுறையும் முதலிடம் பெற்றவர்.

க.பொ.த சாதாரணம்வரை விஞ்ஞானத்துறையில் கல்விபயின்ற போதிலும் கலைத்துறையில் உள்ள ஈடுபாட்டால் க.பொ.த. உயர்தரத்தில் கலைத்துறையைத் தேர்ந்தெடுத்து பல்கலைக்கழகம் சென்றார்.

1967இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பிரவேசித்த அருணாசலம் அவர்கள் 1968வரை அங்கு கல்விபயின்று பின்னர் 1968-1971 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றுத் தனது பல்கலைக் கழகக் கல்வியை நிறைவுசெய்தார்.

இறுதியாண்டு பரீட்சையைத் தொடர்ந்து இரண்டுமாத காலத்துக்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதற்கு முன்னரே 1972 பெப்ரவரியில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றுப் பணியாற்றிய வேளையில் தனது உயர்கல்வியை மேலும் தொடர்ந்தார். பேராசிரியர்கள் வி.செல்வநாயகம், சு.வித்தியானந்தன், சதாசிவம், கைலாசபதி, வேலுப்பிள்ளை, தில்லைநாதன், தனஞ்செயராஜசிங்கம், சண்முகதாஸ், பூலோகசிங்கம், பத்மநாதன், இந்திரபாலா, கலாநிதி கணபதிப்பிள்ளை ஆகியோரிடம் கல்விகற்கும் பேற்றினைப் பெற்றவர் அருணாசலம் அவர்கள்.

1974ல் “ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள்” என்ற தலைப்பில் ஆய்வு நிகழ்த்தி முதுகலைமாணிப் பட்டத்தைப்பெற்ற அருணாசலம் அவர்களுக்கு 1976இல் உதவி விரிவுரையாளராக நிரந்தர நியமனம் கிடைத்தது. பின்னர் “தமிழில் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்” என்ற தலைப்பில் ஆய்வு நிகழ்த்தி 1979இல் கலாநிதிப் பட்டம் பெற்றார். இவ் ஆய்வின் சிறப்பினைக்கொண்டு பரீட்சையாளர்சபை ஏகமனதாக முதன்முதல் பொன்னம்பல முதலியார் ஞாபகார்த்தப் பரிசுக்கு இதனைச் சிபாரிசு செய்தது. முதல் முதல் அப்பரிசினைப் பெற்றவர் அருணாசலம். இப்பரிசு இதுவரை வேறு எவருக்கும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1981இல் இரண்டாந்தர முதுநிலை விரிவுரையாளராகி 1986இல் முதலாந்தர விரிவுரையாளரானார். 1996இல் பேராசிரி யராக உயர்வு பெற்றார்.

பேராசிரியர் அருணாசலம், மாணவர் மத்தியில் நேசிப்புக்குரிய ஒருவராக விளங்கியவர். மாணவர் நலனில் அக்கறை கொண்டவர். மாணவர்களை நெறிப்படுத்தி நன்மாணக்கர்களாக உருவாக்கும் பணியில் அக்கறையுடன் செயற்பட்டவர். சிறந்த ஆசான் என்ற நிலைக்கு அப்பால் இவர் தேசியக் கல்வித் திட்டங்களிலும் ஈடுபட்டு உழைத்தவர். மஹரகம தேசியக்கல்வி நிறுவகத்தின் தொலைக்கல்விப் பிரிவின் தமிழ்ப்பாடப் பதிப்பாசிரியர் குழுவின் அங்கத்தவர், தமிழ் மொழித்துறையின் ஆலோசகர், க.பொ.த. சாதாரண உயர்தர தமிழ்மொழிப் பாடத்திட்ட மீளாய்வுக் குழுவின் அங்கத்தவர், பேராதனைப் பல்கலைக்கழக நூலகக் குழுவின் அங்கத்தவர் போன்ற புறநிலை நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டவர். அத்தோடு பட்டமேற்படிப்பு மாணவர்களை ஆற்றுப்படுத்தும் பரீட்சகராகப் பணிபுரிந்தவர்.

*1995-1998* காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கிய இவர், தமிழ்ச் சங்கத்தினதும் சங்கீத நாட்டியச் சங்கத்தினதும் பெருந்தலைவராகவும் விளங்கியவர், இலங்கை சாகித்தியமண்டல தமிழ் இலக்கியக் குழுவின் தலைவராகப் பணியாற்றியவர். இவை அவர் வகித்த பதவிகளில், ஆற்றிய பணிகளில் சிலவாகும்.

பேராசிரியர் அவர்கள் தமிழ்மொழி மூலமாக உள்ள கலைஞர்களை எழுத்தாளர்களை மக்களுக்கு இனங்காட்ட வேண்டும் என்ற பெருவிருப்பு உடையவர். “ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள்” என்னும் ஆய்வுடன் நவீன தமிழ் இலக்கியத்துக்குள் காலடி எடுத்துவைத்த பேராசிரியர் நூற்றுக் கணக்கான இலக்கியக்கட்டுரைகளை பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார். இக்கட்டுரைகளில் பல ஆய்வு நோக்கும் அறிவியல் விசாலமும் கொண்டவை. “இலக்கிய விமர்சனம் மகப்பேற்று மருத்துவிச்சியாக இருக்க வேண்டுமே தவிர மரணவிசாரணை அதிகாரியாக இருத்தல் கூடாது என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளவன் நான்” எனக் குறிப்பிடும் பேராசிரியர் பல விமர்சனக் கட்டுரைகளை எழுதியிருப்பதுடன் பல எழுத்தாளர்களின் நூல்களுக்கு முன்னுரையும் எழுதியுள்ளார்.

ஏறத்தாழ நான்கு தசாப்தங்களாக தான் வாழ்ந்த மலையக மண்ணின் மீதும் தோட்டத்தொழிலாளர் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கிய பேராசிரியர் தோட்டத் தொழிலாளர் குறித்த வரலாறும், அவர்கள் தொடர்பான இலக்கிய வரலாறும் எழுதப்படல்வேண்டும், ஆவணப்படுத்தப்படல் வேண்டும் என்பதில் முனைப்புடன் இயங்கியவர். இவரது மலையகத் தமிழ் இலக்கியம் என்ற நூலினை காணிக்கையாக “தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நிற்கின்ற தோட்டத்

தொழிலாளர்களின் விமோசனத்துக்காகத் தீரத்துடன் பேராடித் தமதின்னுயிர்களைத் தியாகஞ் செய்த கோவிந்தன், வெள்ளையன், செல்வநாயகம், சிவனுலெட்சுமணன் முதல் ஏபிரகாம் சிங்கோ வரையிலான தொழிலாளச் செம்மல்களுக்கு” சமர்ப்பித்திருப்பதிலிருந்து மலையகத்தின் மீதும் மலையக மக்கள் மீதும் அவர் கொண்டிருந்த பற்றினை நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

நூலாசிரியர் என்ற வகையில் பேராசிரியரின் நூல்களாக பாரதியார் சிந்தனைகள் (1984), சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள் (1992), காலக்கண்ணாடி - இளங்கதிர் (1994) மலையகத் தமிழ் இலக்கியம் (1994) தமிழில் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், மலையகத் தமிழ் நாவல்கள், இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் (1997) இவரது கலாநிதிப்பட்ட ஆய்வேடு (2000)ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றைவிட சிறு நூல்களாக இளந்தலைமுறையினரும் கல்வியும், சாதனையாளன் சாரல்நாடன், தமிழகத்தில் சமணம் ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இவற்றுள் சுவாமி விபுலாநந்தரின் சமயச்சிந்தனைகள் என்ற நூல் தேசிய சாகித்திய விருதினைப்பெற்றது. மலையகக் தமிழ் நாவல்கள் என்ற நூல் தேசிய சாகித்தியப் பரிசினையும் மத்திய மாகாண சாகித்தியப் பரிசினையும் பெற்றுக்கொண்டது. இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் என்ற நூல் தேசிய சாகித்திய விருதினையும் வடக்கு கிழக்கு மாகாண சாகித்தியப்பரிசினையும் பெற்றுக்கொண்டது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலைக்குழு அங்கத்தவராகவும் தமிழ்க் குழுவின் தலைவராகவும் 2002ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் இவர் கடமையாற்றியுள்ளார். இக்கால கட்டத்தின்போது கலைக்குழுவின் உதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூன்று நாட்கள் ஈழத்து

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் என்னும் விடயம்பற்றி முழுநேரக் கருத்தரங்குகள் நடைபெற ஏற்பாடு செய்தார். அவ்வேளையில் முதுபெரும் எழுத்தாளர்கள் எட்டுப்பேர் கௌரவிக்கப்பட்டனர். அதேபோன்று வன்னிப் பிரதேச தமிழ் இலக்கிய வளர்ச்சி என்னும் விடயம் தொடர்பாக வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் மூன்று நாட்கள் கருத்தரங்குகள் நடத்தினார்.

கொழும்பு தேசிய நூலகச் சேவையின் அங்கத்தவராகவும் கண்டி நூலக ஆலோசக சபையின் அங்கத்தவராகவும் பலவருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

1972ஆம் ஆண்டிலிருந்து க. பொ. த உயர்தரப்பரீட்சை விடைத்தாள் திருத்தும் பரீட்சகராகவும் 1983இலிருந்து நீண்டகாலம் பிரதம பரீட்சகராகவும் கடமையாற்றிவந்துள்ளார்.

வெளிவாரி மாணவர்களுக்கான தமிழ், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களின் முக்கிய பரீட்சகராகவும் கடமையாற்றி யுள்ளார். வெளிவாரி மாணவர்களுக்கான கருத்தரங்குகளில் பங்குபற்றியதுடன் கையேடுகளும் தயாரித்து வழங்கினார்.

அத்தோடு பலவருடங்களாக பேராதனைப் பல்கலைக் கழகத்தில் டிப்ளோமா, முதுகலைமாணி, முதுதத்துவமாணி கற்கைநெறி மாணவர்களுக்கு சனி ஞாயிறு நாட்களில் விரிவுரைகள் நடத்திவந்துள்ளார்.

1985ஆம் ஆண்டிலிருந்து முதுகலைமாணி, கலாநிதி ஆகிய பட்டங்களுக்கான ஆய்வினை மேற்கொள்வோருக்கு மேற்பார்வையாளராகவும், கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற் கொள்வோருக்கு மேற்பார்வையாளராகவும் அதேசமயம் பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சப்ரகமுவ பல்கலைக் கழகம், ஆகியவற்றின் இளம் விரிவுரையாளர்களின் பட்டப் படிப்புக்கான ஆய்வுகளை மதிப்பிடும் பரீட்சகராகவும்

கடமையாற்றியுள்ளார். அதேபோன்று நீண்டகாலமாக தமிழ் நாட்டின் மதுரைப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களின் பட்டப் பின் படிப்புக்கான மாணவர் களின் ஆய்வேடுகளை மதிப்பீடு செய்யும் பரீட்சகராகவும் கடமையாற்றியுள்ளார்.

பேராசிரியரின் குறிப்பிடத்தக்க இன்னுமொரு சிறப்பான அம்சம் அவர் ஒரு முற்போக்குச் சிந்தனையாளர். யாழ்ப் பாணத்தில் தலைவிரித்தாடும் சாதி, சீதனம் ஆகிய இரு பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராக முகங்கொடுத்து வெற்றி கண்டவர். தன்னிடம் பயின்ற மாணவியை விரும்பி, தமது வசதி வாய்ப்புகளை உதறித்தள்ளி 1982ஆம் ஆண்டு துணிகரமாக அவரைத் திருமணம் செய்தவர். இவரது மனைவி பெயர் சரஸ்வதிப்பிள்ளை. இவர் ஓர் ஆசிரியை. பேராசிரியர் தம்பதிக்கு பாலமயூரன், கீதா என இரண்டு பிள்ளைகள்.

பேராசிரியரின் சிறந்த பணிகளைப்பாராட்டி மலையக கலாசார நிறுவனம் ரத்தினதீபம் விருதினை வழங்கிக் கௌரவித்தது.

பேராசிரியர் அருணாசலம் அவர்கள் 27-04-2015 அன்று அமரரானபோது, அவரது பணிகள் பற்றி பேராசிரியர் வ. மகேஸ்வரன் தனது அஞ்சலிக்குறிப்பில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

“பேராசிரியர் தமிழியலின் ஆய்வுப்பரப்பில் தனது ஆழ்ந்த புலமையால் பங்காற்றியவர்களுள் ஒருவர். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகளில் தாய்த் தமிழ்த்துறையான பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் புலமைப் பாரம்பரிய முன்னெடுப்புக்களில் முக்கியபங்காற்றியவர். பழந்தமிழ் இலக்கியத்திலும் நவீன இலக்கியத்திலும் பல நூல் களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதிய பேராசிரியர்,

தமக்கெனத் தகைசான்ற ஒரு மாணவ பரம்பரையையும் உருவாக்கியவர். இலங்கைத் தமிழியல் ஆய்வுமுயற்சிகள் தொடர்பாகவும், மலையக இலக்கியப்பாரம்பரியம் தொடர்பாகவும் பாரதி ஆய்வியல் தொடர்பாகவும் அவர் நிகழ்த்திய புலமைசார் உரையாடல்கள் தமிழ் உலகில் என்றும் மறக்கமுடியாதவை. தமிழகத்துத் தமிழ்ப் புலமை மரபிலும் தமது தமிழ்ப் புலமையால் செல்வாக்குச் செலுத்தி ஈழத்தமிழ் அறிவுலகை உயர்த்தியவர்களில் ஒருவர். தமிழ்கூறும் நல்லுலகின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு ஆய்வுகளில் தமக்கெனத் தனிமுத்திரை பதித்தவர்"

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் அருணாசலத்தின் முதலாவது மாணவர் தொகுதியில் பயின்ற கலாநிதி துரை மனோகரன், அவரைப் போன்றே அதே பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் தமிழ்த் துறைத் தலைவராக விளங்கியமையும் அடுத்துவந்த தொகுதி மாணவர் களுள் ஒருவரான கலாநிதி வ. மகேஸவரன் அவர்களும் அதே பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத்தலை வராகவும் விளங்கியமையும் தற்போது அவரது மாணவிகளில் ஒருவரான திருமதி சோதிமலர் இரவீந்திரன் தமிழ்த்துறைத் தலைவராக விளங்குவதும் இப்பல்கலைக்கழக வரலாற்றில் அபூர்வ நிகழ்வாகும். இது பேராசிரியர் அருணாசலம் அவர் களுக்கும் அவரது மாணவர் பரம்பரைக்கும் பெருமை தரும் விடயமாகும்.

✱



## 12

# தமக்கென ஓர் இலக்கியப் பாதையைத் தேர்ந்தெடுத்த தெணியான்

**இ**லங்கை அரசின் இலக்கியத்திற்கான அதியுயர் விருதான சாஹித்தியரத்னா விருதினை 2013இல் பெற்றவர் தெணியான்.

யாழ்ப்பாணம் கொற்றாவத்தை பொலிகண்டியில் 06.08.1942 அன்று நா.கந்தையா சின்னம்மா தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்த தெணியானுக்கு தாய்தந்தையர் இட்ட பெயர் நடேசு. இவருடன் இரண்டு ஆண் சகோதரர்களும் மூன்று பெண் சகோதரிகளும் கூடப் பிறந்தவர்கள்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியிலும் பெற்றுப் பின்னர் கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றவர்.

தொழில் ரீதியாக ஆசிரியராகப் பணி புரியத் தொடங்கிய இவர் பண்டாரவளை அம்பிட்டிய மகாவித்தியாலயத்தில்

ஆறு வருடம் கடமையாற்றியபின் யாழ்.வந்து ஸ்ரீ நாரத வித்தியாலயம், அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றி, அதன்பின் தான் கல்விகற்ற தேவரையாளி கல்லூரியில் கடமைபுரிந்து ஓய்வு பெற்றார். இவர் தனது பதவிக்காலத்தில் ஆசிரியராக பகுதித்தலைவராக, உதவி அதிபராக தொலைக்கல்விப் போதானாசிரியராக பணியாற்றியவர்.

தெணியான் என்பது இவரது குடும்பப் பெயர். இரண்டு நூற்றாண்டுகால பாரம்பரியம் கொண்ட தனது குடும்பப் பெயரையே இவர் இலக்கியப் பெயராக வைத்துக் கொண்டார்.

மாணவப் பருவத்திலேயே வாசிப்பதில் இவருக்கு ஆர்வம் இருந்தது. இவரது தகப்பனார் இவர் ஏழாம் வகுப்பு படிக்கிற காலத்திலேயே தினகரன் பத்திரிகையை தினமும் வாங்கி வாசிக்கக் கொடுத்தார். இவர் படித்த தேவரையாளி இந்துக் கல்லூரியில் வகுப்புகள் தோறும் சுற்றுவாசிப்புத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்தச் சுற்று வாசிப்புத்திட்டத்தின் மூலம் இவருக்கு மாணவப் பருவத்திலேயே வருடத்தில் 40 நூல்களை வாசிக்க சந்தர்ப்பம் ஏற்பட்டது.

தெணியான் தனது ஆசிரிய கலாசாலைப் பயிற்சி நெறியை நிறைவு செய்து 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பண்டாரவளை அட்டம்பிட்டிய சிங்கள மகாவித்தியாலயத்தின் தமிழ்ப் பகுதியில் தனது கடமையை ஏற்றுக்கொண்டார். அங்கிருந்துதான் எழுதுவதற்கு ஆரம்பித்தார். இவரை எழுதும்படி தூண்டியவர் இவருக்கு ஒரு வருடம் மூத்த ஆசிரிய கலாசாலை மாணவனாக இருந்த கிழக்கிலங்கை எழுத்தாளரான தா. பி. சுப்பிரமணியம் ஆவார். தெணியானது முதற் சிறுகதை, பிணைப்பு 1964 ஆகஸ்ட் மாதம் விவேகி என்ற மாத சஞ்சிகையில் பிரசுரமானது. 1967இல்

யாழ். இலக்கிய நண்பர்கள் கழகம் நடத்திய சிறுகதைப் போட்டியில் இவரது 'பெண்பாவை' என்ற சிறுகதை முதற் பரிசினைப் பெற்றது. தகவம் அவரது பல சிறுகதைகளுக்குப் பரிசில்கள் வழங்கியுள்ளது. தகவத்தின் முதல் பரிசுத் தேர்வு, தெணியானின் குருகுலம் என்ற சிறுகதையாகும்.

இவர் சிறுகதை ஆசிரியர், நாவலாசிரியர், கட்டுரை ஆசிரியர், மேடைப்பேச்சாளர், விமர்சகர், சமூகவிடுதலைப்போராளி எனப் பல்துறை சார்ந்த திறமையாளர்.

ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர்களுள் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த தெணியான் சாதியம் தொடர்பான படைப்புகளை அதிகளவில் தந்த எழுத்தாளர். ஈழத்து இலக்கிய உலகில் டானியலின் வாரிசு எனப் பலராலும் கணிக்கப்பெற்றவர்.

தான் மார்க்சியக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கிய வரலாற்றை தெணியான் பின்வருமாறு தெரிவித்துள்ளார். "பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் பொன். கந்தையா அவர்களின் வருகையுடன் கருத்து நிலையில் எனக்குள்ளே மாற்றங்கள் நிகழத் தொடங்கின. அத்துடன் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தொடர்பு இடதுசாரிகளின் நெருக்கமான உறவு என்பனவும் என்னைச் சரியான வழியில் திசை திருப்பிவிட்டன. நான் மார்க்சியக் கொள்கையைப் பின்பற்ற ஆரம்பித்தேன். எனது வாசிப்பு இரசனையிலும் சிறிது சிறிதாக மாற்றம் ஏற்படத் தொடங்கியது. இடதுசாரிக் கருத்துள்ள நூல்களையும் இலக்கியங்களையும் வாசிக்கத் தொடங்கினேன். அகில இலங்கைச் சிறுபான்மை தமிழர் மகாசபைக்குச் சென்றபோது அதன் தலைவராக இருந்த எம்.சி.சுப்பிரமணியத்துடன் தொடர்பு ஏற்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்த அவர் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைவராக இருந்தார். இந்த மகாசபை தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திலும் போராட்டங்களிலும் அக்கறையுடையதாக

இருந்தது. அக்காலகட்டத்தில் நீர்வேலியில் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகள் உயர் சாதியினரால் தீவைத்துக் கொழுத்தப்பட்டபோது, அவர்களுக்கு நிதியுதவி செய்ய நான் வீடு வீடாகச் சென்று உண்டியல் குலுக்கிப் பணம் சேர்த்தேன். எனது ஊரான பொலிகண்டி கந்தவனக் கடவை ஆலயப்பிரவேசப் போராட்டத்திலும் நான் பங்குபற்றினேன். இப்போராட்டத்துக்கு எம்.சி.சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். இடதுசாரித் தலைவரான எம்.சி.சுப்பிரமணியம் போன்றவர்களின் தொடர்பும் இயல்பாக எனக்கு இருந்த மானிட நேயமும் விடுதலையுணர்வும் காரணமாக நான் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இணைந்து (மாஸ்கோ சார்பு) கொண்டேன்."

1983காலப் பகுதியில் தெணியான் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் செயலாளராகப் பணியாற்றியவர். அக்காலத்தில் சங்கம் எடுத்த பாரதி நூற் றாண்டு விழா யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெற முன்னின்று உழைத்தவர் தெணியான்.

தெணியான் இதுவரை 152 சிறுகதைகள் வரை எழுதி யுள்ளார்.இவரது சிறுகதைத் தொகுதிகளாக 'சொத்து' (1981) மாத்துவேட்டி (1996) ஒடுக்கப்பட்டவர்கள் (2007) தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள் என்பன வெளி வந்துள்ளன. ஒடுக்கப்பட்டவர்கள் சிறுகதைத் தொகுதி கொடகே தேசிய விருது மற்றும் தமிழ்நாடு சின்னப்பபாரதி விருது என்பவற்றைப் பெற்றுக் கொண்டது. இன்னொரு புதியகோணம் தொகுதிக்கு நாவேந்தன் விருது வழங்கப் பெற்றது. தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள் இலங்கை இலக்கியப் பேரவையின் விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டது. இத்தொகுப்பில் உள்ள பாதுகாப்பு என்னும் சிறுகதை பதினோராம் ஆண்டுக்குரிய தமிழ்மொழிப் பாடநூலில் இடம்பெற்றுள்ளது. இச்சிறுகதையை சிங்களமொழியில் வெளி

வந்த தொகுதி ஒன்றிலும் வெளியிட்டுள்ளார்கள். உவப்பு என்ற மல்லிகைச் சிறுகதை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப் பெற்று சிங்கள மொழிபெயர்ப்புச் சிறுகதைத் தொகுதி ஒன்றில் உள்வாங்கப்பட்டுள்ளது. 'நான் ஆளப்படவேண்டும்' என்ற சிறுகதையை ஏ.ஜே. கனகரத்னா ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்துள்ளார். இவரது சிறுகதைகளில் உவப்பு, நான் ஆளப்பட வேண்டும், இன்னுமா என்பவை போரின் அவலங்களைப் பேசும் சிறந்த கதைகளாகப் பலரது கணிப்பையும் பெற்றவை.

இவர் படைத்த நாவல்களில் விடிவை நோக்கி என்ற இவரது முதல் நாவல் 1973இல் வீரகேசரி வெளியீடாக வந்தது. இதன்மூலம் வடமராச்சி மண்ணின் முதலாவது நாவலாசிரியர் என்ற பெருமை தெணியானுக்கு உரியதாயிற்று. கழுகுகள்(1981) நாவல் தகவம் பரிசைப்பெற்றது. மரக்கொக்கு நாவல் 1994இல் இலங்கை சாஹித்தியவிருது, வடக்கு கிழக்கு மாகாண அமைச்சு விருது, இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசு ஆகியவற்றை ஒருங்கே சுவீகரித்துக் கொண்டது. காத்திருப்பு நாவல் 1999 ஆம் ஆண்டின் வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய பரிசினைப் பெற்றுக்கொண்டது. குடிமைகள் நாவல் இலங்கை அரசின் சாஹித்திய விருதுடன் கொடகே விருதினையும் பெற்றுக் கொண்டது. கானலில்மான் நாவல் இலங்கை அரசின் சாகித்திய விருதையும் தேசிய கலை இலக்கியப்பேரவையின் விருதினையும் பெற்றுக் கொண்டது. குடிமைகள் என்ற நாவல் இலங்கை அரசின் சாகித்திய விருதினையும் கொடகே விருதினையும் பெற்றுக்கொண்டது.

தெணியான் எழுதிய ஏதனம் என்ற நாவல் 'பெயர்வே' 2018 விருது விழாவில் அதிசிறந்த நாவலுக்கான ஐந்து இலட்சம் ரூபா பரிசினைப் பெற்றது.

"தெணியானின் நாவல்கள் யாழ்ப்பாணத்துச் சமூக வரலாற்றை அறிய முனைபவர்களுக்கான சமூக வரலாற்று ஆவணங்களாகவும் யாழ்ப்பாணத்துச் சமூக வரலாற்று

ஆவணங்களாகவும் யாழ்ப்பாணத்துச் சமூக பண்பாட்டு வாழ்வியல் கூறுகளைப்பதிவாக்கிய இனவரைவியல் ஆவணங் களாகவும் விளங்குகின்றன. அத்துடன் மார்க்ஸியம் என்னும் சித்தாந்த ஒளியில் யாழ்ப்பாண சமூகத்தையும் அதன் வாழ்வியல் மற்றும் அசைவியக்கத்தையும் நுண்மையாக ஆராய்ந்து அந்தச் சித்தாந்தத்தை தன்படைப்பாக்க நிலைப்பாடாகவும் நியாயமாகவும் கொண்டு நாவலிலக்கியம் படைத்துவருபவர்" எனக் குறிப்பிட்டுள்ளார் இளம் ஆய்வா ளரான இ. இராஜேஸ்கண்ணன்.

முதன் முதலில் ஈழத்துப் பிராமண சமூகம் பற்றிய நாவல் ஒன்றினை எழுதிய பெருமை தெணியானைச் சாரும். "பொற்சிறையில் வாடும் புனிதர்கள்" (1989) என்ற இந்த நாவல் ஈழத்தில் வாழ்ந்துவரும் பிராமணர்களில் ஒரு பகுதியினர் அனுபவிக்கும் ஏழ்மையை விபரிக்கிறது. ஆலயங்களில் பூசகர்கள் உள்ளே குமைந்து புழுங்கி வெளிவிடும் வேதனைப் பெருமூச்சுக்களை அன்பு, கரிசனையுடன் இவர் சித்தரித்துள்ளார்.

இவரது மரக்கொக்கு, குடிமைகள் ஆகிய நாவல்கள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன.

தெணியான் சிதைவுகள், பனையின் நிழல், பிஞ்சுப்பழம், பரம்பரை அகதிகள் ஆகிய குறுநாவல்களை எழுதியுள்ளார். இவற்றுள் சிதைவுகள் சுபமங்களா, தேசிய கலைஇலக்கியப் பேரவை இணைந்து நடத்திய குறுநாவல் போட்டியில் பரிசு பெற்றதாகும். இது சின்னப்பபாரதி அறக்கட்டளை விருதினையும் பெற்றுக்கொண்டது.

இவர் நிருத்தன் என்ற பெயரில் பல கவிதைகளை எழுதியுள்ளார். அம்பலத்தான், கந்தையா நடேசன், ஐயனார், க.ந.கூத்தன் போன்ற புனைபெயர்களைத் தேவைகளுக்குப் பயன்படுத்தியுள்ளார். 5 வானொலி நாடகங்களையும் எழுதி யுள்ளார்.

தெணியான் 65 கட்டுரைகள் நூல் மதிப்பீடுகள் வரை எழுதியுள்ளார். 1977 சித்திரை மல்லிகை இதழில் இவர் எழுதிய ஈழத்து இலக்கியமும் அதன் தலைமையும் அதன் தவறுகளும் என்ற கட்டுரை மூலம் இலக்கியம் சார்ந்த ஆரோக்கியமான சில விவாதங்களை இவர் தொடக்கி வைத்தார். இவர் மரபுப்போராட்டம் தொடர்பாக மல்லிகையில் எழுதிய கட்டுரைகள் முக்கியமாவை.

"டொமினிக் ஜீவாவின் ஈழத்திலிருந்து ஒரு இலக்கியக் குரல்" நூலினைத் தொகுத்ததுடன் ஜீவாவின் மணிவிழாவின் போது வெளியிடப்பட்ட "மல்லிகை ஜீவா" என்னும் நூலின் தொகுப்பாசிரியர்களில் ஒருவராகவும் செயற்பட்டுள்ளார். "தேவரையாளி இந்து'வின் ஆசிரியராக இரு தடவை இருந்து அதனை வெளியிட்டுள்ளார். "நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் சிவத்தம்பி" என்ற நூலினையும் எழுதியுள்ளார்.

இவர் தனது எழுத்துலக வாழ்வுடன் சம்பந்தப்பட்டவர்களாக டானியல், டொமினிக் ஜீவா, பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோ ரைக் குறிப்பிடுகிறார். இவர்கள் தன்னை நேசித்தவர்கள் எனக் குறிப்பிட்டு, போட்டிக்கு எழுதாதே என்று பேராசிரியர் சிவத்தம்பி தனக்கு அறிவுரை கூறியதாகவும் பட்டிமன்றங்களில் பேசாதே என டானியலும் சிவத்தம்பியும் கூறியதாகவும் பதிவு செய்துள்ளார். தான் மல்லிகை எழுத்தாளன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படும் தெணியானின் சிறுகதைகள் அனேகமானவை மல்லிகையிலேதான் பிரசுரமாகின.

யாழ்ப்பாணம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழியைச் சிறப்புப் பாடமாகத் தேர்வு செய்த மாணவர்களில் சிலர் தெணியானின் படைப்புகள் பற்றி ஆய்வுசெய்து கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்கள்.

தெணியான் 22-05-68 இல் மரகதம் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு உமா ஞானசீலன்,

ஜானகி, ஆதவன், துஷ்யந்தன் ஆகியோர் பிள்ளைகளாவர். தெணியானின் சகோதரர் க.நவம் அவர்களும் ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர். கனடாவில் வாழும் இவர் நான்காவது பரிமாணம் என்ற சஞ்சிகையை இரண்டாண்டு காலம் அங்கிருந்து வெளியிட்டவர்.

தெணியானின் இலக்கிய வாழ்வைப் பிரதிபலிக்கும் கட்டுரைத்தொடர் பூச்சியம் பூச்சியமல்ல என்ற மகுடத்தில் மல்லிகையில் வந்து பின்னர் நூலுருவம் பெற்றது. இவர் தனது சிறுபராய அனுபவங்களை இன்னும் சொல்லாதவை என்ற மகுடத்தில் ஞானம் சஞ்சிகையில் எழுதினார். அத்தொடரும் பின்னர் நூலுருப் பெற்றது.

இவரது இலக்கியப் பணிகளைப் பாராட்டி இந்துகலாசார பண்பாட்டு அமைச்சின் கலாபூஷணம் விருது(2003), வடமாகாண ஆளுநர் விருது(2008) என்பவை வழங்கப்பெற்றன. மல்லிகை 1989 மார்ச் மாத இதழ் இவரது படத்தை முன் அட்டையில்போட்டு பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கட்டுரையுடன் பிரசுரித்தது. ஞானம் சஞ்சிகை தனது 61ஆவது இதழில் அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்தது. ஜீவநதி சஞ்சிகை தெணியானின் 50 வருடகால இலக்கிய வாழ்வைக் கௌரவிக்கும் முகமாக "தெணியானின் படைப்புகள் மீதான பார்வைகள்", தெணியானின் ஜீவநதிக்கதைகள் என இரு நூல்களை வெளியிட்டு கௌரவித்தது. அத்தோடு ஜீவநதி தனது 106ஆவது இதழை தெணியான் பவளவிழாச் சிறப்பிதழாகவும் வெளியிட்டுச் சிறப்பித்தது.

✱



# 13
# மலையகம் என்னும் உணர்வுக்கு தனது எழுத்தாற்றலால் உருவம்கொடுத்த தெளிவத்தை ஜோசப்

**இ**லங்கை அரசின் அதியுயர் விருதான 'சாஹித்திய ரத்னா' விருதினை 2014இல் பெற்றவர் தெளிவத்தை ஜோசப்.

சந்தனசாமி ஜோசப் என்ற இயற்பெயர் கொண்ட இவர், ஹாலிஎல்லைக்கு அருகேயுள்ள ஊவாக்கட்டவளை என்கிற தேயிலைத் தோட்டத்தில், ஆசிரியராகப் பணிபுரிந்த தங்கசாமி சந்தனசாமிப் பிள்ளைக்கும் பரிபூரணத்திற்கும் 16.02.1934இல் மகனாகப் பிறந்தார். மூன்று சகோதரர்களுடனும் ஒரு சகோதரியுடனும் கூடப்பிறந்த இவர், இறைநம்பிக்கை கொண்ட கத்தோலிக்க குடும்பச்சூழலில் வளர்ந்தவர். ஜோசப் தனது ஆரம்பக்கல்வியை தோட்டப் பாடசாலையில் தனது தந்தையிடம் கற்றபின், தந்தை பிறந்த ஊரான தமிழ்நாடு கும்பகோணம் 'லிட்டில் பிளவர்' உயர்நிலைப்பள்ளியில் இரண்டுவருடகாலம் ஐந்தாம் வகுப்புவரை கற்று, இலங்கை திரும்பி பதுளையில் உள்ள புனித பீட்ஸ் கல்லூரியில் சாதாரணதரம் வரை கற்றவர்.

பிந்திய ஐம்பதுகளில் தமிழக சஞ்சிகையான உமாவில் "வாழைப்பழத்தோல்' என்ற இவரது முதற்கதை வெளியாகியது. அக்கதை வெளிவந்த சஞ்சிகையை இவர் பார்த்ததில்லை. பார்த்தவர்கள் சொல்லித்தான் அறிந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து பேசும்படம் இதழிலும் இவரது படைப்பு வெளியாகியது. தொடர்ந்து கே.வி.எஸ். மோகன் வெளியிட்ட கதம்பம் சஞ்சிகையிலும் வீரகேசரியின் தோட்டமஞ்சரி பக்கத்திலும் இவரது ஆக்கங்கள் வெளியாகின.

பாடசாலைக்கல்வி முடித்து வீட்டிலிருந்த ஜோசப்பை, தமையன் ஞானப்பிரகாசத்துக்கு உதவுவதற்காக பெற்றோர் தெளிவத்தை தோட்டத்திற்கு அனுப்பிவைத்தனர். அங்கு இலிகிதர் பணியிலிருந்த தமையனுக்கு நளபாகத்தோடு உதவிய ஜோசப் அதேகாலப்பகுதியில் பரந்த வாசிப்பையும் மேற்கொண்டார். தொடர்ச்சியான வாசிப்புக்கள் ஜோசப்புக்கு எழுதவேண்டும் என்ற சிந்தனையை மனதில் விதைத்தன.

1956இல் தெளிவத்தைத் தோட்டத்தில் இவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. அதேசமயம் பகுதிநேர எழுதுவினைஞராகவும் தொழில்புரிய ஆரம்பித்தார். அக்காலகட்டத்தில் தனது இருப்பிடத்தின் பெயரைத் தனது பெயருடன் இணைத்து தெளிவத்தை ஜோசப் என்ற பெயரில் எழுதத் தொடங்கினார். இவரது வருகையால் தெளிவத்தைத் தோட்டம் இலக்கியப் பரப்பில் கவனத்தைப் பெறும் பெரும்பேற்றினைப் பெற்றது.

தோட்டத்து மக்கள் பற்றிய இவரது அக்காலப் படைப்புகள் தெளிவத்தை மக்களைச் சீண்டிச் சீற்றம் கொள்ளச் செய்தன. உத்தியோகத்தர்கள் பற்றிய கதைகள் அவர்களை முகம் திருப்பிக்கொள்ள வைத்தன. தெளிவத்தையில் இருக்கமுடியாத நிலைமை தோன்றியது. அதனால் 1964இல் ரெயில் ஏறி கொழும்பு வந்துசேர்ந்தார் ஜோசப்.

கொழும்பில் ஸ்டார் டொபி நிறுவனத்தில் பிரதம கணக்காளராக இணைந்து பணியாற்றினார்.

மலைமுரசு, மலைப்பொறி, தேனருவி, கலைச்செல்வி, அல்லி, ஈழமணி, கதம்பம் போன்ற சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் எழுதிக்கொண்டிருந்த தெளிவத்தை ஜோசப், வீரகேசரி பத்திரிகையூடாக 1963இல் மலையக எழுத்தாளர் மன்றம் நடத்திய முதலாவது சிறுகதைப் போட்டியில் 'பாட்டி சொன்ன கதை' என்னும் சிறுகதைக்கும் 1964இல் நடத்திய இரண்டாவது போட்டியில் 'பழம் விழுந்தது' என்னும் சிறுகதைக்கும் பரிசில்கள் பெற்றுக்கொண்டார். இரண்டு முறை தொடர்ந்து முதற்பரிசுகளைப் பெற்றதன் மூலம் இவரது சிறுகதை ஆளுமை தேசிய ரீதியில் இனங்காணப்பட்டது.

கண்டியில் இருந்து வெளிவந்த 'மலைமுரசு' என்ற பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியிலும் இவரது 'நாமிருக்கும் நாடே' என்ற சிறுகதை முதற்பரிசைத் தட்டிக் கொண்டது. 1979இல் இக்கதையின் தலைப்பைக் கொண்ட இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி 'வைகறை' வெளியீடாக வெளிவந்தது.

இச்சிறுகதைத் தொகுதி 1979இல் அரச சாஹித்திய விருதினைப் பெற்றுக்கொண்டது.

இனவிவகார அமைச்சு மும்மொழிகளில் நடத்திய சிறுகதைப் போட்டியில் தமிழ்மூலம் படைப்புக்கான சிறுகதைப் போட்டியில் இவர் 1998இல் முதற்பரிசு பெற்றார். எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள இவரது இரண்டாவது தொகுப்பான 'தெளிவத்தைஜோசப் சிறுகதைகள்' பாக்யா வெளியீடாக வெளிவந்து 2013இன் தேசிய சாகித்திய விருதினைப் பெற்றுக்கொண்டது. 'மீன்கள்' என்று மகுடத்தில் இவரது மூன்றாவது சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் கலைமகள் சஞ்சிகை இவரது சிறுகதைகளுக்கு முன்னுரிமை கொடுத்துப்பிரசுரித்தது. தமிழ் நாட்டின் குமுதம், உமா, சரஸ்வதி, சுபமங்களா போன்ற சஞ்சிகைகளிலும் இவரது படைப்புகள் இடம்பெற்றன.

கருத்தியலில் இணைந்து ஒரு சில குறிப்பிட்ட கொள்கைகளின் அடிப்படையில் குழுக்களாக இயங்கும் எந்தவொரு இலக்கியக் குழுக்களுடனோ அல்லது மாற்றுக் கருத்துடைய கூட்டத்தினருடனோ தன்னை இனங்காட்டிக் கொள்ளாது இளமைக் காலத்திலிருந்தே தனக்கென வரித்துக்கொண்ட ஓர் இலக்கியக் கொள்கையையே கவசமாகக் கொண்டு இயங்கி வருபவர் ஜோசப்.

1980க்குப் பிற்பட்ட காலப்பகுதியில் புதிதாக எழுத வருபவர்களை உற்சாகப்படுத்தும் பணியிலும் இவர் ஈடுபடத் தொடங்கி 'வாரம் ஒரு சிறுகதை விருந்து' என்னும் பகுதியை தினகரன் வாரமஞ்சரியில் எழுதினார். ஒவ்வொரு வாரமும் ஒரு எழுத்தாளரை அவருடைய சிறுகதையுடன் அறிமுகப்படுத்தினார். ஒரு இலங்கை எழுத்தாளர், ஒரு தமிழக எழுத்தாளர் என மாறிமாறி இடம்பெற்ற இப்பகுதியில் இரு நூறுக்கும் அதிகமான சிறுகதை எழுத்தாளர்களை அறிமுகஞ் செய்தார். இத்தகைய ஒரு பாரிய தொடரை எழுதுவதற்கு எத்தகைய பரந்த வாசிப்புத்திறன் இவருக்கு இருந்திருக்க வேண்டும் என்பதை சிந்தித்துப்பார்த்தால் புரியும்.

இவரது முதலாவது நாவல் 'காதலினால் அல்ல' என்னும் தலைப்பில் மித்திரனில் 1967இல் தொடராக வெளிவந்தது.

'காலங்கள் சாவதில்லை' என்ற நாவல் வீரகேசரியில் தொடராக வந்து பின்னர் வீரகேசரிப் பிரசுரமாக 1974இல் வெளிவந்தது. 'மாறுதல்கள்' என்ற நாவலையும் இவர் எழுதியுள்ளார்.

'நாங்கள் பாவிகளாக இருக்கிறோம்' என்ற மற்றுமொரு தொடர்கதை தினகரன் வாரமஞ்சரியில் 1996இல் வெளியாகி இரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது.

இவரது 'பாலாயி' என்ற குறுநாவல் கதம்பம் திபாவளி மலரில் 1967ஆம் ஆண்டு வெளிவந்தது. 'ஞாயிறு வந்தது' என்னும் குறுநாவல் 1966 கலைமகளில் வெளிவந்தது. 'மனம் வெளுக்க' என்ற குறுநாவல் தினகரனில் வெளிவந்தது. இந்த மூன்று குறுநாவல்களும் தெகுக்கப்பட்டு ஒரே தொகுப்பாக 1997இல் வெளிவந்தது.

தேசிய இலக்கியப் பேரவையும் தமிழ்நாட்டின் சுபமங்களா சஞ்சிகையும் இணைந்து 1995இல் நடத்திய குறுநாவல் போட்டியில் இவரது 'குடைநிழல்' என்ற படைப்பு இரண்டாவது பரிசு பெற்றது. இக்குறுநாவல் பின்னர் நூலுரு வம் பெற்றது.

இவரது 'மலையகச் சிறுகதை வரலாறு' 2000ஆம் ஆண்டில் வெளிவந்து இவரை ஒரு சிறந்த ஆய்வாளராக இனங்காட்டியது. மலையக சிறுகதை வரலாற்றை 1920 முதல் 1960 வரை முதற்கட்டமாகவும் 1960 முதல் 2009 வரை இரண்டாம் கட்டமாகவும் வகுத்து இவர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுநூல் அவ்வாண்டின் தேசிய சாகித்திய விருதினையும் யாழ். இலக்கிய வட்டத்தின் 'சம்பந்தன் விருதி'னையும் பெற்றுக்கொண்டது.

'இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கியமும் சிற்றிதழ்களும்' என்ற ஆய்வு இவரது மற்றுமொரு ஆய்வு முயற்சியாகும். இலங்கையிலிருந்து முதன்முதல் வெளிவந்த உதயதாரகை என்ற கிறிஸ்தவமத சிற்றிதழ் தொடக்கம் சுமார் 150 சிற்றிதழ்கள்வரை இவர் அறிமுகப்படுத்தினார்.

துரைவி பதிப்பகத்தின் பதிப்பாசிரியராகப் பணிபுரிந்து இவர் வெளிக்கொணர்ந்த 33 சிறுகதைகள் அடங்கிய 'மலையகச் சிறுகதைகள்', 55சிறுகதைகள் அடங்கிய 'உழைக்கப் பிறந்த வர்கள்' ஆகிய இரண்டு தொகுப்புகளும் மலையக இலக்கி யத்திற்கு இவர் அளித்த அரிய செல்வங்களாகும். எழுபது

வருடகாலத்துக்குரிய கதைகளைத் தேடிச் சேகரித்து தொகுத்து இரண்டு வருடகால எல்லையுள் இப்பணியைச் செய்து சாதனை படைத்தார். துரைவி தினகரன் சிறுகதைகள், சுதந்திர இலங்கையின் ஐம்பது சிறுகதைகள் என்னும் நூல் களை தொகுத்து பதிப்பிக்க வழிசமைத்தார்.

தெளிவத்தை ஜோசப் அவர்கள் சிறந்த நூல்கள் பற்றிய அறிமுகத் தொடர் ஒன்றை 'பாலம்' என்ற தலைப்பில் மேற்கொண்டார் எழுத்தாளர்கள், வாசகர்கள், நூல் ஆகியவற்றின் இடையிலான தொடர்பினைக் குறிக்கும் அர்த்தத்தில் பாலம் என்ற பெயர் அமைந்தது.

இவர் சிறுகதைகள், நாவல், விமர்சனம், இலக்கியக் கட்டுரைகள், திரைக்கதை வசனம் (புதிய காற்று) தொலைக் காட்சி நாடகம், வானொலி நாடகம் என இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்துச் செயற்பட்டார். இலங்கை யில் உருவான 'புதிய காற்று' திரைப்படக் கதை வசனம் இவரது கைவண்ணமாகும்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலும், பேராதனை, யாழ்ப்பாணம், சப்ரகமுவ பல்கலைக் கழகங்களிலும் இவரது படைப்புகளைக் குறித்து உயர் பட்டப்படிப்பு மாணவர்கள் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்கள்.

தெளிவத்தை ஜோசப் 2003இல் கனடாவில் இருந்து வரும் 'காலம்' சஞ்சிகையின் நினைவரங்கொன்றில் சொற் பொழிவாற்ற அழைப்புக் கிடைத்துச் சென்றுவந்தார். அவ்வேளை இலண்டன் பத்மநாப ஐயருடன் தங்கியிருந்து சில இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். 2009இல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டுக்கு திரு. முருகபூபதியின் அழைப்பின்பேரில் கலந்துகொண்டார். திரும்பிவரும்போது சிங்கப்பூரிலும் தங்கி சில இலக்கியக்

கூட்டங்களில் பங்குபற்றினார். 2003இல் காலச்சுவடு நடத்திய 'தமிழ் இனி' மாநாட்டிலும் கலந்துகொண்டார்.

தலைநகர் கொழும்பில் மலையக எழுத்தாளர் மன்றம் உருவாக முன்னின்று உழைத்தவர் ஜோசப். அம்மன்றத்தின் தலைவராக வெகுகாலம் பணிபுரிந்து வருகிறார். தமிழ் சிங்கள எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவர்களில் ஒருவராகவும் பணிபுரிந்து வருகிறார்.

ஜோசப் அவர்கள், பிலோமினா, திரேசா, சியாமளா ரமேஷ், ரவீந்திரன், ஜேயார் ஆகிய புனைபெயர்களில் இலக்கியத் தகவல்கள், கட்டுரைகள் ஆகியவற்றை எழுதிவருகிறார்.

இவரது மனைவியின்பெயர் பிலோமினா ரூபௌா. ஜோசப் தம்பதியினருக்கு திரேசா, தோமஸ் ரமேஷ், திமதி ரவீந்திரன், தெக்ளா சியாமளா ஆகியோர் பிள்ளைகளாவர்.

இவரது படைப்புகள் சிங்களம், ஆங்கிலம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன.

மூன்று தடவை சாகித்திய விருது பெற்ற இவர், சம்பந்தன் விருது, கம்பன் கழக விருது, தேசிய ஒற்றுமைக்கான விருது, கொடகே தேசிய சாஹித்திய விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது, கலாசார அமைச்சின் 'தேசநேத்ரு' விருது, மத்திய மாகாண, மேல்மாகாண இலக்கிய சாதனையாளர் விருது, 'தமிழியல் வித்தகர்' விருது, பேராதனைப் பல்கலைக்கழக இலக்கிய விருது(2007), இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு வழங்கிய 'தமிழ் மணி' (1992) 'இலக்கியச் செம்மல்' (1993)விருதுகள், எழுத்தாளர் ஊக்குவிப்புமையத்தின் தமிழியல் விருது (2008) 'கலாபூஷணம்' விருது(1996),

தமிழ்நாடு விஷ்ணுபுர விருது(2003) உட்படப் பல விருதுகள் பெற்றுள்ளார்.

மல்லிகை சஞ்சிகை இவரைக் கௌரவிக்கும் முகமாக இவரது படத்தை அட்டையில் பொறித்து கட்டுரையும் வெளியிட்டது. ஞானம் சஞ்சிகை இவரது பணிகளைப் பாராட்டுமுகமாக இவரது பவளவிழாவை கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 16-05-2010இல் கொண்டாடியது. பவள விழாச் சிறப்பிதழையும் வெளியிட்டது. தொடர்ந்து ஹட்டன் குயில்வத்தை கிராமத்திலும் இவரது பவளவிழாவைக் கொண்டாடியது. அத்தோடு இவரது தொடர் நேர்காணலை ஞானம் சஞ்சிகையின் 23 இதழ்களில் தொடராக வெளியிட்டுக் கௌரவித்தது.

இவரது, 'நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983' என்ற நாவல் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகம், சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளையுடன் இணைந்து வழங்கும் 2016ஆம் ஆண்டுக்கான 'கரிகாற் சோழன் விருதி' னைப் பெற்றுக்கொண்டது.

மலையகம் என்னும் உணர்வுக்கு தனது எழுத்தாற்றலால் உருவம்கொடுத்தவர் தெளிவத்தை ஜோசப். மயைக இலக்கியத்தின் அடையாளத்திற்கும் தனித்துவத்திற்கும் இவரது எழுத்துக்களும் தொகுப்புகளும் ஆய்வுப் பணிகளும் பெரும்பங்காற்றியுள்ளன.

❋



# 14

# முயற்சியில் அயராத முதுபெரும் இலக்கியவாதி முல்லைமணி

**இ**லங்கை அரசின் இலக்கியத்திற்கான அதியுயர் விருதான சாஹித்தியரத்னா விருதினை 2015இல் பெற்றவர் முல்லைமணி.

சுப்பிரமணியம் என்ற இயற்பெயர் கொண்ட முல்லைமணி, முல்லைத்தீவில் உள்ள முள்ளியவளைக் கிராமத்தில் சபாபதி வேலுப்பிள்ளை, பொன்னம்மா தம்பதிக்கு இரண்டாவது மகனாக 03.05.1933இல் பிறந்தார். முல்லைமணியுடன் நான்கு சகோதரர்களும் ஒரு சகோதரியும் கூடப்பிறந்தவர்கள்.

நான்கு ஐந்து தலைமுறையாக முல்லைத்தீவைப் பூர்வீக மாகக் கொண்ட முல்லைமணியின் தந்தை ஒரு விவசாயி. முள்ளியவளையில் கமவிதானையாராகவும் பின்னர் பிரதி கிராம விதானையாகவும் பணியாற்றியவர்.

முல்லைமணி தனது பதினைந்தாவது வயதுவரை செய்தித்தாள்களையோ சஞ்சிகைகளையோ வாசிக்கவில்லை. அவர் பிறந்த மண்ணில் அந்த வாய்ப்பு இருக்கவில்லை. பாடப்

புத்தகத்தைத் தவிர பெரிய எழுத்து மதனகாமராசன் கதை, அல்லி அரசாணிமாலை, இராசாதேசிங்குகதை, சுயம்புநாதனும் சந்நியாசியும் போன்ற சில நூல்களை வாசித்தார். 1948இல்தான் முதன்முதலில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரியை தபாலில் பெற்று வாசித்தார்.

தனது ஆரம்பக்கல்வியை முள்ளியவளை சைவப் பாடசாலையில் பெற்ற இவர், பின்னர் திருநெல்வேலி பண்டித கலாசாலையில் சேர்ந்து தனது கல்வியைத் தொடர்ந்தார். இங்கு இவர் இலக்கண இலக்கியக் கல்வியைப்பெற்றார். தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலைக்காரிகை, அணியிலக்கணம், என்பவற்றையும் பழந்தமிழர் இலக்கிய நூல்களையும் இங்கு கற்க இவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. 1949 முதல் 1952 வரை சாவகச்சேரி இந்துக்கல்லூ ரியில் பயின்று ஆங்கிலத்தில் எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சித்தியடைந்தார். 1954இல் இலங்கை மருத்துவக்கல்லூரியில் உதவி வைத்தியர் கல்வியைப் பயின்ற காலத்தில் மகரகம ஆங்கில ஆசிரிய கலாசாலைப் பயிற்சிக்குத் தேர்வுபெற்று 1955 முதல் 1956 வரை அங்கு பயிற்சிபெற்றார். 1969 இல் தமிழ், சமஸ்கிருதம், வரலாறு, ஆகிய பாடங்களில் கலைமாணி சிறப்பு (B.A. Special) பட்டம் பெற்றார்.

03-10-1957 இல் இவருக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. வவுனியா மகாவித்தியாலயத்தில் ஒரு மாதகாலம் தொழில் புரிந்தவேளையில் அங்கிருந்து முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கு மாற்றம்பெற்றார். அக்கல்லூரியில் 16 வருடங்கள் கடமையாற்றிய பின்னர் விரிவுரையாளர் நியமனம் பெற்று மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில் நான்கு வருடங்களும் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் பதினொரு வருடங்களும் கடமையாற்றினார். அதன் பின்னர் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபராக நான்கு வருடம் கடமையாற்றியபோது ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக

சேவையில் (S.L.E.A.S) உள்வாங்கப்பட்டார். அதன்பேறாக பதவி உயர்வுபெற்று பிரதேச கல்விப் பணிப்பாளராக 01-10-1991 முதல் 03.05.1993 வரை பணியாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

முல்லைமணி 23-05-1964இல் பரமேஸ்வரி என்பவரைத் திருமணம்செய்து, இரண்டு ஆண்பிள்ளைகளுக்கும் மூன்று பெண் பிள்ளைகளுக்கும் தந்தையானார்.

இவரது முதற்படைப்பு 1951இல் ஈழகேசரியில் வெளிவந்த 'எனது கிராமம்' என்ற 15 வரிக்கட்டுரையாகும். அதே ஆண்டில் Mulliyawalai என்னும் ஆங்கிலக் கட்டுரை இவர் பயின்றுகொண்டிருந்த சாவகச்சேரி இந்துக்கல்லூரி வெளியிட்ட சஞ்சிகையில் வெளியானது. 1956இல் அல்லி என்னும் சஞ்சிகையில் 'கருவண்டும் கலைமானும்' என்ற கட்டுரை வெளியாகியது.

1949 தொடக்கம் 1952 வரை யாழ்ப்பாணத்தில் இவர் கல்வி கற்ற காலத்தில் அகன்ற வாசிப்புக்கான வாய்ப்புகள் கிடைத்தன. ஆங்கிலத்திலும் தமிழிலும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வாசித்தார். இவரது இயற்கையான நாட்டம் இவரை எழுத்துலகில் பிரவேசிக்கச் செய்தது.

முல்லைமணிக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது, 'பண்டார வன்னியன்' என்ற வரலாற்று நாடகமாகும். இதனை எழுதுவதற்குப் பின்னணியாக இருந்த ஒரு நிகழ்வை அவர் ஞானம் சஞ்சிகையில் எழுதிய 'எனது எழுத்துலகம்' என்ற கட்டுரையில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

"கற்சிலை மடுவில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. அதில் வன்னி நாட்டின் இறுதி மன்னன் பண்டாரவன்னியன் பற்றிய குறிப்பொன்று பொறிக்கப்பட்டுள்ளது. இதனை வைத்து அம்மன்னன் வரலாற்றை நாடகமாக எழுதலாம் தானே" எனத் திரு. பொன்னம்பலம் அவர்கள் கூறினார்கள்.

கல்வெட்டு வாசகம் ஒரு சிறுபொறி, அதனை ஊதிப் பெரு நெருப்பாக்க வேண்டும் அந்த அக்கினிச் சுவாலையில் தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நிற்கும் நாம் குளிர்காய வேண்டும். பண்டாரவன்னியனின் வரலாறு விடுதலை வேட்கையின் குறியீடு. இது வெறும் பொழுதுபோக்கல்ல, ஒரு சமுதாயத்தேவை. எப்படியும் இந்த நாடகத்தை எழுதியே ஆகவேண்டும். என உறுதி பூண்டேன். நினைத்ததுபோல் அது சுலபமாக அமையவில்லை. நிறைய உழைக்க வேண்டியிருந்தது." (ஞானம் மார்ச் - 2002).

முல்லைமணி எழுதிய இந்த வரலாற்று நாடகம் இலங்கை கலைக்கழக நாடகப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது. (1970) இந்த நூலின் இரண்டாவது பதிப்பு 1972இல் வீரகேசரி வெளியீடாக வந்து 5000 பிரதிகளுக்கு மேல் விற்பனையாகி அகில இலங்கைக்கும் அறிமுகமாகியது. அதன்பின் இந் நூல் நான்கு பதிப்புகளைக் கண்டது. இந்நாடகம் இலங்கையில் மாத்திரமன்றி அமெரிக்க, ஐரோப்பிய, அவுஸ்திரேலிய நாடுகளிலும் மேடையேற்றப்பட்டது. இந்த நாடகத்தை அடியொற்றி தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி 'பாயும் புலி பண்டாரவன்னியன்' என்னும் நாவலையும் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் 'பண்டாரவன்னியன்' காவியத்தையும் யாத்துள்ளார்கள். முல்லைமணி பண்டாரவன்னியன் நாடகத்தை மேடை நாடகமாக மட்டுமன்றி நாட்டுக்கூத்தாகவும் இயற்றி யுள்ளார்.

இந்த நாடகத்தைத் தவிர முல்லைமணி இருபது நாடகங்கள் வரை எழுதியுள்ளார். அவற்றுள், 'சிதையாத செல்வம்', 'சேற்றில் மலர்ந்த செந்தாமரை' 'யாதும் ஊரே' 'கர்ணனின் கடைநாள்', 'வரப்பிரசாதம்' 'இருள் நீங்கியது', 'மலர்ந்த வாழ்வு' 'கலையரசி' 'நன்னித்தம்பி கீரன்', 'லோச் செல்லப்பர்', 'எது வாழ்வு' 'சிதையாத செல்வம்', 'வெற்றித் திருநகர்', 'பெட்டிசம் போடுவேன்', 'இரவில் முல்லைத்தீவு'

(அப்பச்சி மகாலிங்கத்துடன் இணைந்து தயாரித்தது) என்பன முக்கியமான நாடகங்களாகும்.. இவற்றைவிட முருகையன், அப்பச்சி மகாலிங்கம், எஸ்.பொ. ஆகியோர் எழுதிய நாடகங்கள் சிலவற்றையும் இவர் தயாரித்து மேடையேற்றியுள்ளார்.

1959இல் வீரகேசரி நிருபராக இவர் நியமிக்கப்பட்டார். பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் இவர் எழுதிய செய்திகள் அக்காலத்தில் வெளியாகின.

முல்மைணி எழுதிய முதல் சிறுகதை 'துணை' 1970ஆம் ஆண்டு வீரகேசரியில் வெளியாகியது. ஏறத்தாழ ஐம்பது சிறுகதைகள் வரை இவர் எழுதியுள்ளார். அவற்றில் பன்னிரண்டு சிறுகதைகள் 'அரசிகள் அழுவதில்லை' என்னும் தொகுப்பாக 1977இல் மலர் வெளியீடாக வந்தது. இத்தொகுதி இலங்கை அரசின் சாகித்திய விருதினைப் பெற்றது. 2005இல் 'கொண்டுவந்த சீதனம்' என்ற சிறுகதைத் தொகுதி எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் வெளியீடாக வெளிவந்தது.

ஞானம் நடத்திய புலோலியூர் க.சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய 'கொக்கிளாய் மாமி' என்ற சிறுகதை முதற் பரிசினைத் தட்டிக் கொண்டது.

இவரது சிறுகதைகள் பற்றி பேராசிரியர் கைலாசபதி, அரசியல் அழுவதில்லை சிறுகதைத் தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "ஏறத்தாழ எல்லாக்கதைகளுமே கிராமப்புறஞ்சார்ந்த அல்லது நாட்டுப் புறத்து மாந்தரை அதிலும் நலிவுற்ற மாந்தரைக் கதாபாத்திரங்களாகக் கொண்டுள்ளன. மனிதருக்கும் மனிதருக்கும், இயற்கைக்கும் மனிதருக்கும் ஏற்படும் உறவுகளின் அடிப்படையில் உண்டாகும் மனச்சஞ்சலங்களை இயற்பண்பு திரியாமல் சித்திரித்துள்ளார் ஆசிரியர். நூலாசிரியருடைய எழுத்தாற்றல் இதிலேயே முனைப்பாகத் தெரிகிறது என்பேன்"

“முல்லைமணி திரு.வே.சுப்பிரமணியம் இயற்கையாகவே கவிபுனையும் ஆற்றல் அமைந்தவர்” என பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள், இவர் பாடிய தான்தோன்றி ஈஸ்வரர் பாமாலை நூலின் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். ‘ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் பாமாலை (1977)’ ‘நெடுங்கேணி வில்வையடிப் பிள்ளையார் பாமாலை (1978)’, ‘காவத்தை நீலகாமம் முத்துமாரியம்மன் திருவூஞ்சல்(1978) என்பன இவரது நூலுருவம் பெற்ற பக்திப் பனுவல்கள். வீரகேசரி வெண்பாப் போட்டியிலும் துறைநீலாவணை இலக்கியப் பேரவையின் கவிதைப் போட்டியிலும் இவர் பரிசு பெற்றுள்ளார்.

இலங்கை வானொலியிலும், மட்டக்களப்பு சாவகச்சேரி, சுன்னாகம், காரைநகர், கோப்பாய், நல்லூர், நெடுந்தீவு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இடம்பெற்ற கவியரங்குகளிலும் தலைமைக் கவிஞனாக இவர் பங்கு கொண்டுள்ளார்.

முல்லைமணி எழுதிய ‘மல்லிகை வனம்’ சமூக நாவல் வீரகேசரி நடத்திய பிரதேச நாவல் போட்டியில் வன்னிப் பிராந்தியத்திற்கான பரிசினைப் பெற்றது. 1985இல் தென்னிந்திய சோமு புத்தக நிலையம் இந்நாவலை வெளியிட்டது.

இவரது “வன்னியர் திலகம்” என்ற நாவல் (1998) தேசிய சாகித்திய விருதினையும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பரிசையும் கலை இலக்கியப் பேரவையின் பரிசையும் பெற்றது. இவற்றைவிட ‘பிறந்த மண்’ ‘கமுகஞ்சோலை’ (2000) ‘மழைக்கோலம்” (2003) ஆகிய நாவல்களையும் முல்லைமணி எழுதியுள்ளார். கமுகஞ் சோலை நாவல் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் உலவும் நாட்டார்பாடல்- கதைப்பாடல் ஒன்றை அடியொற்றியது. ஆங்கில நிர்வாகத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய தண்ணீரூற்று மக்களையும் அவர்களது இயற்கையோடொட்டிய

எளிமையான வாழ்க்கை முறைகளையும் தொழில் முறைகளையும் உணவுப்பழக்கத்தையும் ஆளும் வர்க்கத்தினது அடக்கு முறைகளையும் சுரண்டல்களையும் இந்த நாவல் சித்திரிக்கின்றது. இந்நாவல் வடக்கு கிழக்கு மாகாண இலக்கியப் பரிசினைப் பெற்றது.

படித்தல், படிப்பித்தல் எழுதுதல், சமூக வேலை செய்தல் எனத் தன்கடன் பணி செய்த முல்லைமணி தொடர்ந்து பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வன்னி வளநாடு மீது கொண்ட பற்றினால் எழுதியுள்ளார். 1999இல் 'இலக்கியப் பார்வை', 'வன்னியியற் சிந்தனை' (2001) ஆகியவை கட்டுரை நூல் களாக வெளிவந்துள்ளன. பல சமயக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். 'மதியும் பிறையும்' என்பது இவர் ஈழமுரசில் எழுதிய ஐம்பது கட்டுரைகளின் பொதுத்தலைப்பாகும். 'மதி' என்பது ஈழத்துத் தமிழ்ப்பேரறிஞர்களையும் 'பிறை' நவீனஇலக்கிய கர்த்தாக்களையும் குறியீட்டு ரீதியில் குறிப்பதாக இக்கட்டுரைகள் அமைந்தன. 'தமிழ்மொழிப் பயிற்சி' என்ற இவரது நூல் 1975இல் வெளியானது.

முல்லைமணியவர்கள் நாட்டார் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். அது தொடர்பாக 'மக்கள் கலைகள்' என்னும் தலைப்பில் வானொலியில் பன்னிரண்டு சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். 1972இல் நிகழ்த்தப்பட்ட இச்சொற்பொழிவுகள் பின்னர் வானொலி மஞ்சரியில் வெளியாகின.


முல்லைமணி தனது இலக்கியக் கொள்கை பற்றி பின்வருமாறு பதிவு செய்துள்ளார் "குறிப்பிட்ட எந்த இலக்கிய அணியையும் சார்ந்து நிற்காத நடுநிலையில் நின்றே இலக்கியம் படைக்கின்றேன். தம்முள் முரண்பட்டுக் கொள்ளும் இலக்கியக் கொள்கைகளில் நல்ல அம்சங்களை உள்வாங்குவேன். ஒரு இலக்கிய ஆக்கம் மனிதனை மேம்படுத்த ஏதுவாக அமையுமானால் அதுவே 'முற்போக்கு இலக்கியம்' என்பது எனது கருத்து".

இவர், தான் பிறந்த மண்ணோடு சேர்ந்த பல பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி சமூகத்தின் உயர்வுக்கும் பாடுபட்டார். முள்ளியவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகப் பத்து ஆண்டுகளும் முள்ளியவளை விவேகானந்தாக்கல்லூரி பெற்றோர் ஆசிரிய சங்கச் செயலாளராக நான்கு ஆண்டுகளும் பழையமாணவர் சங்க கௌரவ தலைவராக மூன்று ஆண்டுகளும் முள்ளியவளை சனசமூக நிலையத் தலைவராக ஐந்து ஆண்டுகளும் முல்லை இலக்கியவட்டத் தலைவராகவும் அத்தேடு இயல் இசை நாடக மன்றத் தலைவராகவும், வவுனியா மாவட்டப் பண்டார வன்னியன் கழகத் தலைவராக ஐந்து ஆண்டுகளும் பணியாற்றியமை அவரது புன்முகப்பட்ட பரந்த சேவையைச் சுட்டி நிற்கிறது.

கலை இலக்கிய சமயத் துறைகளில் ஈடுபட்ட இவரது சுயசரிதை 2007இல் 'நினைவுச் சரங்கள்' என்ற மகுடத்தில் எழுத்தாளர் ஊக்கு விப்புமையத்தினால் வெளியிடப்பட்டது.

முல்லைமணியின் இலக்கியப் பணிகளுக்காக பல்வேறு நிறுவனங்கள், கௌரவப் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளன. கலாபூஷணம், தமிழ்மணி, இலக்கியச் செல்வர், 'இலக்கிய ஜோதி' என்பன அவற்றுள் சிலவாகும். வடக்கு கிழக்கு கல்வி கலாசார விளையாட்டுத்துறை 1995 இல் இவரைக்கௌரவித்தது. 1999இல் இவருக்கு வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் விருது வழங்கப்பட்டது. இவர் ஓர் அகில இலங்கை சமாதான நீதவானும் ஆவார். இவரது கலை இலக்கிய ஆய்வுப் பணிகளை அங்கீகரித்து 2005இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இவர் 13-12-2016 அன்று அமரரானார்.

*



# 15

# பெருமைமிகு கல்விமான்
# பேராயர் எஸ். ஜெபநேசன்

**2016**ஆம் ஆண்டு இலங்கை அரசின் இலக்கியத்திற்கான சாஹித்தியரத்னா உயர்விருதினைப் பெற்றவர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள். இவர் சாவகச்சேரியைச் சேர்ந்த நாராயணபிள்ளை சாமுவேல் சுப்பிரமணியம் - அலிஸ் கனகம்மா தம்பதியின் மகனாக 1940ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி பிறந்தார். இவரின் தந்தையார் தமிழ்ப்புலமை பெற்ற ஆசிரியர், அருட்தந்தையாகத் திகழ்ந்தவர். அதிபராகவும் பணியாற்றியவர். தாயார் புலமை மிக்க ஆங்கில ஆசிரியர்.

ஜெபநேசன் அவர்கள் சாவகச்சேரி அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தனது கல்வியை ஆரம்பித்து டிறிபேக் கல்லூரியில் தொடர்ந்தார். தனது பதினைந்தாவது வயதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்தரம் பயிலச் சென்றார். அங்கு பெற்ற அனுபவங்கள் அவரை வாழ்வின் உன்னத நிலைகளுக்கு இட்டுச் சென்றன.

குடும்பப் பின்புலம் காரணமாக இருமொழி ஆளுமை கைகூடப் பெற்ற இவர் பேராதனைப் பல்கலைக்கழகம் சென்று தமிழ், வரலாறு, பொருளியல் ஆகிய பாடங்களைப் புகழ்பூத்த பேராசான்களிடம் பயின்றும், புகழ்பூத்த சகபாடிகளுடன் கற்றும் இளமாணிப்பட்டம் பெற்றார் (1962). பின்னர் அதே பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார். அதன் பின்னர் தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் தத்துவம் ஆங்கிலம் ஆகிய துறைகளிலும் முதுமாணிப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டார். எல்லாமாக இவர் மூன்று முதுமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தனது கலாநிதி பட்டத்தைப் பெற்றார்.

கலாநிதி ஜெபநேசன் தமிழ்ப்புலமை மிக்கவர். தமிழ் முதுமாணி மற்றும் தமிழில் கலாநிதி பட்டங்களுக்கு அமெரிக்க மிசனறிமார் தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்திய செல்வாக்கைக் கருவாகக் கொண்டு ஆய்வு செய்தார்.

கண்டியில் உள்ள புனித அந்தோனியார் கல்லூரி(1962), வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி என்பவற்றில் ஆசிரியப் பணிபுரிந்து(1969) பின் யாழ்ப்பாணக் கல்லூ ரியின் துணை அதிபராக, அதிபராக(1988) சிறப்புறப் பணியாற்றினார். 19ஆம் நூற்றாண்டுக் கல்வி வளர்ச்சியில் யாழ்ப்பாணக் கல்லூரி கொண்டிருந்த ஆளுமை சிறப்பானது. அமெரிக்க மிசனறிமாரின் ஆளுமைக் களமாக அக்கல்லூரி திகழ்ந்தமையால் இன்றும் அப்பெருமை நிலைநாட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மருதனாமடத்தில் அமைந்துள்ள இறையியற் கல்லூரியிலும் அதிபராகப் பணியாற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவநாகரிகம் (Christisn Civilization) கற்பிக்கும் வருகைதரு விரிவுரை யாளராக 1978முதல் 1988வரை கடமையாற்றியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பின

ராகவும் (1992), பல்கலைக்கழக முதுகலைமாணி மற்றும் கலாநிதிப்பட்ட ஆய்வாளர்களுக்கான மேற்பார்வை யாளராகவும் பல தளங்களில் பணிபுரியும் வாய்ப்புப்பெற இவரது தமிழ் மற்றும் ஆங்கிலம் சார்ந்த சமதையான புலமையே அடிப்படையாகும். இவரது வழிகாட்டலில் முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களைத் தொடர்ந்தவர்கள் தங்கள் துறைசார்ந்து பிரகாசிப்பவர்களாக உள்ளனர்.

கலாநிதி ஜெபநேசன் அவர்கள் சிறந்த ஆசிரியர், சிறந்தஅதிபர், சிறந்த எழுத்தாளர், சிறந்த இருமொழிப் பேச்சாளர், சிறந்த கல்வியாளர் எனப் பல்துறை ஆளுமை யாளராக விளங்குகிறார்.

இவர் ஒரு சிறந்த நடிகர். பல நாடகங்களில் நடித்துள்ளார். கல்லூரியின் தமிழ்யூனியன் போஷகராக இருந்த காலகட்டத்தில் அங்கு தயாரிக்கப்பட்ட 'கல்லூரி வசந்தத்தில்' என்ற திரைப் படத்திலும் நடித்துள்ளார். கல்லூரி வெளியீடான சஞ்சிகையில் 1974 முதல் 1993 வரை அதன் ஆசியராக விளங்கிய இவர், யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர் சஞ்சிகையான 'Young Idea' விற்கு ஆலோசகராகவும் விளங்கியுள்ளார். இலங்கையின் முதற் தமிழ்ப் பத்திரிகையாகிய உதயதாரகையின் ஆசிரியராக 1992 தொடக்கம் 2005 வரை செயற்பட்டுள்ளார்.

வேம்படி மகளிர் கல்லூரியின் மேலைத்தேய இசை ஆசிரியையாகப் பணியாற்றிய சீதா விமல லக்ஷ்மியை 1969இல் தன் வாழ்க்கைத் துணையாகக் கரம்பற்றினார். இவரது துணைவியார் நாவலப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. இராஜேந்திரன் அவர்களின் மகளாவார். நிர்மலீன், கீதாஞ்சலி என இரண்டு பெண் பிள்ளைகள் இவர்களுக்குச் செல்வங்களாக உள்ளனர்.

1989இல் தென்னிந்தியத் திருச்சபையின் உதவிக் குருவாக அபிஷேகிக்கப்பெற்ற கலாநிதி ஜெபநேசன்

1993இல் அத்திருச்சபையின் பேராயராகச் சென்னையில் வைத்துத் திருநிலைப்படுத்தப்பட்டார். தொடர்ந்து 2005ஆம் ஆண்டுவரை அத்திருச்சபையின் பேராயராகப் பணியாற்றினார். பேராயராகப் பணியாற்றிய காலம் ஆயுதப் போராட்டம் கூர்மை பெற்றிருந்த காலமாகும். தமிழ் உணர்வாளரான பேராயர் தமிழ் மண்ணின் குரலாகவும் விளங்கினார்.

பேராயரின் குடும்பம் தமிழரசுக் கட்சி சார்ந்தது. இவரது தந்தை தமிழரசுக் கட்சியின் தீவிர பற்றாளர். பேராயருக்குத் தந்தை செல்வா, தாய்வழி உறவினராக அமைந்தமையும் தலைவர் அ.அமிர்தலிங்கம் அயலவராக வாய்த்தமையும் கட்சி மீதான நம்பிக்கை ஈர்ப்புக்கு அடித்தளங்களாக அமைந்தன. 2000ஆம் ஆண்டு தொடக்கம் தந்தை செல்வா அறக்கட்டளையின் தலைவராகப் பேராயர் செயற்பட்டு வருகின்றார்.

தமிழ் மீது கொண்ட காதலால் 1982ஆம் ஆண்டு தொடக்கம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பாரதி விழாவைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்தார். இவ்விழா வட இலங்கையில் புகழ் பெற்ற தமிழ்விழாவாகத் திகழ்ந்தது. இந்தியாவில் இருந்து அறிஞர்கள் வந்து பங்கேற்றுச் செல்லுமளவிற்கு இதன் வியாபகம் இருந்தது. இவ்விழாவைத் தொடர்ந்து முன்னெடுத்தமைக்காக பாரதியார் அறக்கட்டளைக் குழுவினரால் இவர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கலாநிதி ஜெபநேசன் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் இரு நூல்கள் ஆங்கிலத்தில் அமைந்தவை.

அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும் (1983), வண. டானியல் பூவர் வாழ்க்கை வரலாறு (1989), பேராயர் சபாபதி குலேந்திரன் வாழ்க்கை வரலாறு (1990),

யாழ்ப்பாணத்து கிறிஸ்தவ கலைஞர்களும் கீர்த்தனங்களும் (1994), American Mission Seminary and Modern Education in Jaffna (2002), புதியதும் பழையதும் (2002), நினைத்துப் பார்க்கின்றேன் (2002), வட்டுக்கோட்டை செமினறியும் தமிழர் சிந்தனைப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களும் (2008), கண்டதும் கேட்டதும் (2015), தமிழ் மாணவர்களுக்கு ஆங்கில இலக்கிய வரலாறு, இவை தவிரத் தனது வாழ்க்கை வரலாற்றை "தொடரும் ஆன்மீகக் கல்விசார் பயணம்" என்ற பெயரில் (2010) வெளியிட்டுள்ளார். எழுத்தாளர் டானியலின் "கானல்" நாவலை ஆங்கிலத்தில் Mirage என்ற மகுடத்தில் மொழிபெயர்த்துள்ளார் (2016). இந்த மொழிபெயர்ப்பு சிறந்த மொழிபெயர்ப்பு நாவலுக்கான சாகித்திய விருதினை 2017இல் பெற்றது.

இவரது கல்விச் செயற்பாடுகளையும் முதிர்ந்த ஞானத்தையும் கருத்தில்கொண்ட அமெரிக்க நிறுவனம் (Cambridge Internatinal Biographical Centre) இவரை உலகின் 21ஆம் நூற்றாண்டின் உயர் அறிவாளிகள் - கல்விமான்கள் 2000பேரில் ஒருவராகத் தேர்ந்து கௌரவித்தது. 2002இல் Research Assistant at the Princeton Theological Seminary In The U.S.A நிறுவனத்தின் கௌரவம் பெற்றார். 2000ஆண்டில் இருந்து The Justice Internatinatiol Affairs Development and Service செயற்குழு உறுப்பினராகவும் விளங்குகிறார். 2003இல் தெற்கு ஆசியாவின் Solidarity Fund For Theological Education தலைவராக நியமிக்கப்பட்டார். அத்தோடு இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் உள்ள பல்வேறு ஆலோசனைச் சபைகளிலும் நிர்வாக சபைகளிலும் பணியாற்றியுள்ளார். தென் இந்தியாவில் உள்ள பல திருச்சபைகளின் செயற்குழுத் தலைவராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

ஈழத் தமிழ்மண்ணின் உன்னத கல்வியாளனாகத் திகழும் கலாநிதி ஜெபநேசன் தமிழ் இலக்கிய ஆங்கில இலக்கிய உறவுப் பாலமாகவும் இந்து கிறிஸ்தவ சமயங்களுக்கான நட்புறவுப் பாலமாகவும் விளங்குகின்றார். இவற்றைக் கௌரவிக்கும் வகையில் திருநிலையினரும் பொதுநிலையினரும் இணைந்து 2015 மார்ச்சு மாதத்தில் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் பவளவிழா எடுத்து மகிழ்ந்தனர். இவ்விழாவில் கிறிஸ்தவ இந்து சமயத் தலைவர்களும் அபிமானிகளும் அரசியலாளர்களும் மண்டபத்தை நிறைத்தனர். அன்று யாழ்பாணத்தில் இருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகள் சிறப்புமலர் வெளியிட்டு பேராயரைக் கௌரவித்தன.



# 16

# நிலையான கருத்தியல் கொண்ட இலக்கியவாதி நீர்வை பொன்னையன்

**இ**லங்கை அரசின் இலக்கியத்திற்கான உயர்விருதான சாகித்தியரத்னா விருதினை 2017இல் பெற்றவர் நீர்வை பொன்னையன்.

இவர், 1930ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் - நீர்வேலி என்னும் விவசாயக் கிராமத்தில் உள்ள ஒல்லைக்குறிச்சி எனப்படும் இடத்தில் இராமலிங்கம் - இலட்சுமி தம்பதிக்கு மகனாகப்பிறந்தார். நீர்வேலியிலுள்ள அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர், பின்னர் மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா கல்லூரியில் பயின்று பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக கிழக்கிலங்கையில் உள்ள சம்மாந்துறை முஸ்லிம்பாடசாலையில் பணியாற்றினார்.

பின்னர் இந்தியா சென்று கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பயின்று பி.ஏ. பட்டதாரியாகத் தாயகம் திரும்பினார். புரட்சியின் தொட்டில் என்று கூறப்படுகின்ற கல்கத்தாவிற்கு இவர்

சென்ற காலத்தில், வங்காளத் தொழிலாளி வர்க்கத்தின் தீவிர போராட்டங்களிலிருந்தும் கலை, இலக்கிய இயக்கத்தின் செயற்பாடுகளிலிருந்தும் இவர் பெற்ற புரட்சிகர உணர்வும் அனுபவங்களும் இவரை படைப்பிலக்கியக் களத்திற்குள் பிரவேசிக்க உந்துதலாயிருந்தன.

கல்கத்தாவில் இருந்த காலத்தில் அங்கு நிலவிய சுதந்திர வேட்கை மற்றும் முற்போக்குச் சூழல் இவரை மாற்றியது. மாணவ மற்றும் வாலிப இயக்கங்களில் பங்கு பற்றினார். இந்திய மக்கள் கலாசார மன்றத்தின் ஹீக்லி பிரதேச அமைப்புச் செயலாளராகவும் பணியாற்றினார்.

அக்கால கட்டத்தில்தான் இவர் மார்க்ஸிம் கார்க்கி, முல்க்ராஜ் ஆனந்த், கே.ஏ. அப்பாஸ், பிரேம்சந், கிஷன்சந்தர், சரத்சந்ர சட்டர்ச்சி, மாணிக் பந்தோபாந்யாய, தரசங்கர் பாணார்ஜி, விபூதிபூஷன் பர்ணார்ச்சுஜி ஆகியோரது படைப்புகளை ஆங்கிலத்தில் வாசித்தார். இவர் தமிழில் முதல் முதல் வாசித்த சிறுகதைத் தொகுப்பு புதுமைப் பித்தன் கதைகள். அத்துடன் சிதம்பர ரகுநாதன் தமிழில் மொழிபெயர்த்த மார்க்ஸிம் கார்க்கியின் ‘தாய்’ என்ற படைப்புத்தான் இவர் படித்த முதல் நாவல். இவரது படைப்பிலக்கிய வளர்ச்சிக்கு முற்போக்கு எழுத்தாளர்களின் எழுத்துக்கள் உந்துசக்தியாக இருந்தன.

சரியான அரசியல் களத்தைத்தேடி அலைந்த இவருக்கு கம்யூனிஸ்ட் இயக்கம் கைகொடுத்தது. நாற்பதுகளின் இறுதிக் காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைந்தார். இவர் மாணவனாக இருந்த காலத்தில் இவரது பேரன்பிற்குரிய ஆசிரியர் நீர்வேலி எஸ்.கே. கந்தையா ஆங்கில இலக்கியத்திலும் மார்க்ஸியத்திலும் இவருக்கு ஆர்வத்தையூட்டி, இவரது அறிவு வளர்ச்சிக்கு வழிவகுத்தார்.

அதேவேளை, கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்த தோழர் கார்த்திகேசன் மார்க்ஸிசம் பற்றிய தெளிவை ஏற்படுத்தினார்.

இவ்விரு ஆசான்களது சரியான வழிகாட்டுதலும் இந்த சமூகத்தை மாற்றி அமைப்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டங்களும் இவருக்கு உறுதியான அரசியல் தளத்தை இட்டன.

1957இல் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் பல ஆண்டுகளாக வேலைதேடி அலைந்து வேலை கிடைக்காமையால் விவசாயியாகவே வாழ்ந்தார். 1947 ஆம் ஆண்டளவில் நீர்வை பொன்னையன் வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தம்மை இணைத்துக்கொண்டு பல போராட்டங்களில் கலந்து கொண்டார். இலங்கை இடதுசாரி இயக்கத்திலும் முற்போக்கு இலக்கியத்துறையிலும் இரண்டாம் தலைமுறை எழுத்தாளர் ஆவார். சீனச் சார்பினை ஆதரித்த இவர், கட்சியில் பல பிளவுகள் ஏற்பட்டபோதும் முற்போக்கு இடதுசாரி அரசியலிலிருந்து ஒருபோதம் விலகியதில்லை.

இவர் எழுதிய முதலாவது சிறுகதையான 'பாசம்' யாழ்ப்பாணம் ஈழநாடு இதழில் 1957இல் வெளியானது. இவரது இரண்டாவது கதையான 'மேடும் பள்ளமும்' கலைச்செல்வியில் வெளியானது. தொடர்ந்து கவிஞர் நாகராஜன் நடத்திய தமிழன் சஞ்சிகையில் பல கதைகளை எழுதினார். 1960களில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து கொண்டார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி 'மேடும் பள்ளமும்' 1961இல் வெளியானது. இந்நூலுக்கு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரன் முன்னுரை எழுதியுள்ளார்.

"நான் ஒரு விவசாயியின் மகன் என்ற ரீதியில் தொழிலாளர் சார் விடயங்களை எனது எழுத்தில் உள்வாங்கினேன். தொழிலாளர் சார் விடயங்களின் உணர்வுகளே எனக்கு அதிகமாக இருந்தன. விவசாயிகளை மையப்படுத்தி எழுதப்பட்டதே 'மேடும் பள்ளமும்' எனும் சிறுகதை தொகுதி" எனத் தனது முதலாவது சிறுகதைத் தொகுதி தொடர்பாகக் குறிப்பிட்டுள்ள

நீர்வை பொன்னையன், இலக்கிய உலகில் மறக்க முடியாத விடயமாகப் பின்வரும் நிகழ்வைப் பதிவு செய்துள்ளார்.

"எனது முதலாவது சிறுகதைத் தொகுதி 1961ஆம் ஆண்டு சிறந்த சிறுகதைத் தொகுதியாக அவ்வாண்டின் நடுவர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிகிறேன். ஆனால், அன்றைய சாஹித்திய குழுத் தலைவரான ஒரு பேராசிரியர் "சிறுகதை என்பது ஒரு இலக்கிய வடிவம் அல்ல அதற்குப் பரிசு கொடுக்க வேண்டியது அவசியமில்லை" எனத் தடுத்துவிட்டதாகத் தெரிகிறது. அந்த ஒரே வருடம் மட்டும் சிறுகதைக்கென சாஹித்தியப் பரிசு வழங்கப்படவில்லை. இதனால் சிறந்த சிறுகதைத் தொகுதியாக பரிசிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டும் பரிசு கிடைக்காமல் போய்விட்டது. இது ஆச்சரியமான செய்தி மட்டுமல்ல. பரிசளிப்புகளின் போது திறமைகளைவிட வேறு விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுகின்றன. தனிப்பட உள்நோக்கம் கொண்ட செயற்பாடுகளுக்கும் குறைவில்லை என்று உணர்ந்தேன். நான் ஒரு போதும் பரிசுகளைத் தேடி ஓடியதில்லை. ஒரு எழுத்தாளனுக்கான அங்கீகாரம் மக்களிடம் இருந்தே வரவேண்டும்." மேடும் பள்ளமும் தொகுதி பின்னர் 2005இல் மீள்பதிப்பு பெற்றது.

'உதயம்' என்ற இரண்டாவது தொகுப்பு 1970இல் வெளி யானது. அதன்பின்னர் இவரின் 'பாதை' சிறுகதைத் தொகுதி தமிழ் நாட்டில் வெளிவந்து முற்போக்கு இலக்கியத்தின் இலக்கணமாகத் திகழ்ந்தது. 'வேட்கை' ஐந்தாவது சிறுகதைத் தொகுதியாக தமிழ்நாட்டில் அறிமுக மானது.

இதைத்தவிர 'நிமிர்வு', 'ஜென்மம்' 'காலவெள்ளம்', 'நினைவுகள் அழிவதில்லை' 'நீர்வை பொன்னையன் கதைகள்' ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வெளியாகின. இவர் இதுவரை 100 சிறுகதைகள்வரை எழுதியுள்ளார். இவரது Devils and Demons சிறுகதை ஆங்கில மொழிபெயர்ப்பாகவும்

Lengathugama சிறுகதை சிங்கள மொழிபெயர்ப்பாகவும் வெளிவந்துள்ளன.

சிறுகதைத்துறைக்கு அப்பால் நாட்டரியலிலும் பங்களிப்பச் செய்துள்ளார். பல நாட்டார் கதைகளை ஆரம்பத்தில் 'தமிழன்' சஞ்சிகையிலும் பின்னர் தினக்குரலிலும் மொழிபெயர்த்து எழுதியுள்ளார். ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் புலமை மிக்க இவரது மொழிபெயர்ப்புகள் வளமானதாக அமைந்தன. இக்கதைகள் தொகுக்கப்பட்டு 'உலகத்து நாட்டார் கதைகள்' என்ற தலைப்பில் வெளிவந்தது. 2001ஆம் ஆண்டு முதற்பதிப்பும் 2004இல் இரண்டாம் பதிப்பும் வெளிவந்தன. இந்நூலுக்கு 'நூல்முகம்' தந்த இ. முருகையன் அவர்கள் 'நாட்டார் கதைகள் பொதுமதியின் உறைவிடம்' என்று குறிப்பிட்டுள்ளார். 'இக்கதைகள் அவற்றிக்குரிய கால அடிப்படையிலோ தேச அடிப்படையிலோ இங்கு தொகுக்கப் படவில்லை. காரணம், இவை கால தேச வர்த்தமானங்களைக் கடந்தவை. உலக சமுதாயத்திற்கு உரிய பொதுமைக் கருத்தியலை வெளிப்படுத்துபவை' என மக்கள் இலக்கியம் என்ற தனதுரையில் நீர்வை பொன்னையன் விளக்கியுள்ளார். இந்நூலில் 250 நாட்டார் கதைகள் அடங்கியுள்ளன.

2002 ஆம் ஆண்டில் 'முற்போக்கு இலக்கிய முன்னோடிகள்' என்ற தலைப்பில் ஒரு நூலை வெளிக்கொணர்ந்தார். இந் நூல் தோழர் மு. கார்த்திகேசன் ஞாபகார்த்தமாக அவரது மறைவின் 25ஆவது ஆண்டில் வெளிவந்தது. உலகம் ஏற்றுக் கொண்ட எழுத்தாளர் மார்க்ஸிம் கார்க்கியின் புகைப்படத்தை அட்டையில் தாங்கி வெளிவந்திருக்கும் இந்நூலில், பத்து இலக்கிய கர்த்தாக்களின் அறிமுகத்துடன் அவர்களின் படைப்பாற்றல்களின் உத்வேகத்தை நயம்பட எடுத்தியம்பி யுள்ளார். மார்க்ஸிம் கார்க்கியின் 'மனிதன் பிறந்தான்', பிரேம் சந்த் எழுதிய 'கொஞ்சம் கோதுமை', லூசுன் தந்த 'ஒரு நிகழ்ச்சி', சரத் சந்திரர் எழுதிய 'மகேஷ்',

ஆஸ்த்றோவஸ்கி படைத்த 'வீரம் விளைந்தது', தகழி தந்த 'தந்தையும் மகனும்', அப்பாஸ் ஆக்கிய 'அநாமதேய அகதி', அசுரவேக எழுத்தாளர் ராகுல சாங்கிருத்யாயனின் 'சுமேர்', முல்க்ராஜ் ஆனந்த் எழுதிய 'நாவிதர் சங்கம்', கிருஷன் சந்தர் படைத்த 'முழுநிலவு' ஆகிய பத்து சிறுகதைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இந் நூலில் இடம்பெற்றுள்ளன.

நீர்வை பொன்னையனின் 'நாம் ஏன் எழுதுகின்றோம்?' என்ற கட்டுரைத் தொகுதியின் முதற்பதிப்பு 2004 செப்டம்பரில் வெளிவந்தது. 1970களில் வெளிவந்த 'களனி' என்ற இலக்கிய சஞ்சிகையிலும், 1975ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டு மலராகிய 'புதுமை இலக்கியத்திலும்', 'விபவி' கலாசார மையத்தின் செய்தி ஏட்டிலும் வெளிவந்த கலை இலக்கியக் கட்டுரைகளில் பதினைந்து இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இந்நூலில் இடதுசாரிச் சிந்தனைகளையும் முற்போக்கு இலக்கியக் கோட்பாடுகளையும் அவர் விரிவாக எழுதியுள்ளார்.

'நினைவலைகள்' என்ற இவரது சுய வரலாற்று நூலில், இலங்கையின் இடதுசாரி அரசியலின் எழுச்சியும் வீழ்ச்சியும் வெளிச்சத்துக்கு வருகிறது. இவர் 'இலங்கை முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்கள்' என்ற நூலின் தொகுப்பாசிரியரு மாவார்.

நீர்வை பொன்னையன் இதுவரை பதினொரு நூல்களை எழுதியுள்ளார்.

இவர் முற்போக்கு எழுத்தாளரான சமீமுடன் இணைந்து முற்போக்கு இலக்கியப் பேரவையை உருவாக்கினார். இந்த அமைப்பின் மூலம் பல நூல்களை வெளியிட்டார். ஈழத்து முற்போக்குச் சிறுகதைகள் என்ற தலைப்பில் சுமார் 25 சிறுகதைகளைத் தேர்வுசெய்து இம்மன்றம் நூலாக்கியது. இம்மன்றம் முற்போக்கு இலக்கியத் தடத்தில்

புனைகதைச்சுவடுகள் - கவிதைச்சுவடுகள் முதலான இரண்டு தலைப்புகளில் ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளது. அத்தோடு மூத்த முற்போக்கு எழுத்தாளர்களின் வாழ்வையும் பணிகளையும் கௌரவிக்கும் நோக்கத்துடன் கொழும்பில் 2013இல் விழாவெடுத்தது.

நீர்வை பொன்னையன் 'நீர்வை', 'ஞானி' ஆகிய புனை பெயர்களில் கட்டுரைகள், சிறுகதைகள் எழுதியதோடு பிறநாட்டு இலக்கிய மொழி பெயர்ப்புகளும் செய்துள்ளார். 'கலைமதி', 'வசந்தம்' ஆகிய முற்போக்குக் கலை இலக்கியச் சஞ்சிகைகள் மூலமும் தன் பணியை மேற்கொண்டார். 'தேசாபிமானி', 'தொழிலாளி' ஆகிய அரசியல் வாரப் பத்திரிகைகளின் ஆசிரிய குழுவில் பணியாற்றி ஆக்க பூர்வமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1969ஆம் ஆண்டிலிருந்து 1983வரை அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார்.

1996இல் இருந்து 'விபவி' மாற்றுக் கலாசார மையத்தில் தமிழ்ப்பிரிவின் இணைப்பாளராகச் செயற்பட்டு ஆக்க இலக்கியம் மற்றும் கலை சம்பந்தப்பட்ட விடயங்களில் தன்னாலான பங்களிப்பைச் செய்துள்ளார். இந்த அமைப்பு பல இலக்கியக் கருத்தரங்குகளையும் இலக்கியப் போட்டி களையும் நடத்தி சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி யிருக்கிறது. விபவி வாயிலாக அவர் மேற்கொண்ட செயற்பாடுகள் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் மாற்றுப்பண்பாட்டினூடாக வர்க்கமுனைப் பாட்டை முன்னெடுப் பதற்கான பணியாகவும் அமைந்தன.


முற்போக்கு எழுத்துலகில் இன்று ஆறு தசாப்தங்களை எட்டியுள்ள நீர்வை இன்றும் எழுத்துத் துறையில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். அத்துடன் இலங்கை முற்போக்குக் கலை, இலக்கிய மன்றத்தின் ஊடாக இலக்கிய கூட்டங்கள்,

நினைவுப்பேருரைகள், நூல்வெளியீடுகள் என்பவற்றை முன்னின்று நடத்தி வருகின்றார்.

"இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உயரிய தேசிய விருதான 'சாஹித்ய ரத்னா' விருது நீர்வை பொன்னையனுக்கு கிடைத்ததல்ல. இது எங்களது முற்போக்கு இலக்கிய இயக்கத்துக்கும் எனது கொள்கைக்கும் கிடைத்த விருது. நான் அரசியலில் இருந்து இலக்கியத்துக்கு வந்துள்ளேன். இலக்கியத்தில் இருந்து அரசியலுக்கு வரவில்லை. எனது அரசியல்பயணம் 1947ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பமானது. இலக்கியப்பயணம் 1957இல் ஆரம்பித்தது" எனக்குறிப்பிட்டுள்ளார் நீர்வை பொன்னையன். (25.11.2017 வீரகேசரி சங்கமம் நேர்காணல்)

இவரது பணிகளைக் கௌரவிக்கும் முகமாக கொழும்பு பல்கலைக்கழகம் 1998இலும் பேராதனைப்பல்கலைக்கழகம் 2009இலும் இலக்கிய விருதுகள் வழங்கிக் கௌரவித்தன.

❋



# 17

# ‘மெய்முதல்வாத’ கருத்தியலை முன்னிறுத்தும் மு.பொ.

**மு.பொ.** என்ற புனைபெயரில் தமிழ் இலக்கிய உலகில் பிரபலம்பெற்ற மூத்த எழுத்தாளரான மு. பொன்னம்பலம் 2008ஆம் ஆண்டுக்கான அரச உயர் இலக்கிய விருதான “சாகித்திய ரத்னா” விருதினைப் பெற்றார்.

கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் ஆகிய துறைகளில் கடந்த ஆறு தசாப்தங்களாக எழுதிவரும் இவர், யாழ்ப்பாணம் புங்குடுதீவை பிறப்பிடமாகக் கொண்டவர். முருகேசு, மாரிமுத்து (சின்னத்தங்கம்) தம்பதிக்கு 26-08-1939 அன்று இவர் மகனாகப் பிறந்தார். மு.தளையசிங்கம் இவரது மூத்த சகோதரர். பராசக்தி இவர்கள் இருவருக்கும் மூத்த சகோதரி ஆவார்

இவர் ஆரம்பக் கல்வியை தனது கிராமத்தில் உள்ள சண்முகநாதன் வித்தியாசாலையிலும் பின்னர் இரத்தினபுரியில் உள்ள சென்ற் லூக்ஸ் (St. Lukes College) கல்லூரியிலும் பயின்று உயர்கல்வியை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

மு.பொ.வின் இலக்கியப் பிரவேசத்தை இரண்டு கால கட்டங்களாகப் பிரிக்கலாம். முதலாவது காலகட்டம் 1950 களில் ஆரம்பிக்கிறது. இவரது பாடசாலைக் காலத்தில் இலக்கிய இரசனையை ஊட்டியவர் இவருக்குக் கம்பராமாயணம் படிப்பித்த அல்வாய் கந்தசாமி ஆசிரியராவார். மு.பொ. அப்போது சிறுவர் கவிதைகளை எழுதினார். 1958இல் தினகரன் சிறுவர் பகுதியில் வெளியான "மழையும் வெயிலும்" என்ற படைப்பே இவரது முதற் படைப்பாகும். இக்காலங்களில் "தீவான்" என்ற புனைபெயரில் சுதந்திரன், வீரகேசரி ஆகியவற்றில் சில சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

இவரது இரண்டாவது இலக்கிய காலகட்டம் 1960களில் ஆரம்பமாகியது. இவரது தந்தையார் இரத்தினபுரியில் வர்த்தகராக இருந்த காரணத்தினால் இவர் அங்கு தனது தமையன் மு.தளையசிங்கத்துடன் வாழநேரிட்டது. அங்கு இயங்கிய புத்திஜீவிகள் சங்கம் (Intellectual Club) என்று சொல்லக் கூடிய ஓர் அமைப்பில் இவரும் மு.த.வும் தங்களை இணைத்துக்கொண்டனர். அந்த அமைப்பில் அனேகமானோர் இடதுசாரிகளாக இருந்தனர். அங்கு இலக்கியம், அரசியல் தொடர்பான பலதரப்பட்ட விடயங்கள் பேசப்பட்டன. அத்தோடு களுகங்கை ஆற்றங்கரையில் இருந்த மு.த.வின் அறையிலும் நண்பர்கள் கூடி பலதரப்பட்ட இலக்கிய விடயங்களைப் பேசினர். இந்த அமைப்பில் சிங்கள, முஸ்லிம் இலக்கிய ஆர்வலர்கள் பலர் இருந்தனர். மு.பொ.வும் மு.த.வும் மட்டுமே தமிழர்கள். இந்தத் தொடர்புகள் காரணமாக இவருக்கு மேல்நாட்டு இலக்கியங்கள் பற்றியும் சிங்கள இலக்கியங்கள் பற்றிய ஓரளவு அறிவும் ஏற்பட்டன. இவற்றின் பின்னணியில் இவர் எழுதிய "அரைநாள் பொழுது", "ஒரு நாள்பொழுது" ஆகிய சிறுகதைகள் அக்காலத்தில் பெரும் கணிப்புக்கு உள்ளாகின.

இவரது சகோதரரான மு.தளையசிங்கத்தின் "மெய்முதல் வாத" கருத்தியலை ஏற்றுக்கொள்ளும் இவர், அதனை

இன்றைய காலத்திற்கேற்ப மேலும் வளர்த்துக் காட்டுவதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டுவருகிறார்.

இவரது படைப்புகள் பலவும் தென்புலம் - வடபுலம் சார்ந்து வெளிப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் மரபுக்கவிதை எழுதுவதில் ஆர்வம்காட்டிய இவர், அறுபதுகளின் பிற்பகுதியில் இருந்து புதுக்கவிதை எழுதத் தொடங்கினார். இவரது முதலாவது கவிதைத் தொகுதி "அது" 1968இல் வெளியாகியது. இவரது ஏனைய கவிதைத் தொகுதிகளாக, "விலங்கை விட்டெழும் மனிதர்கள்" (1989) "விடுதலையும் புதிய எல்லைகளும்" (1990), "காலி லீலை" (1997), "பொறியில் அகப்பட்ட தேசம்" (2002) "சூத்திரர்வருகை" (2003) "கவிதையில் துடிக்கும் காலம்" (2009), "குந்திசேத்திரத்தின் குரல்" (2017) என்பன வெளிவந்துள்ளன. "கவிதையில் துடிக்கும் காலம்" கவிதைத் தொகுதி அவ்வாண்டின் தேசிய சாகித்திய விருதினைப் பெற்றுக்கொண்டது.

2002இல் "பொறியில் அகப்பட்டதேசம்" வெளிவந்த காலத்திலே அக்கவிதைத்தொகுதி பலதரப்பட்ட விமர்சனங் களுக்கு உள்ளாகியது. காலனித்துவ, ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரலான இவ்வரசியல் கவிதை 2001 செப்டெம்பர் 11 அமெரிக்காவில் நடந்த விமானத் தற்கொலைத் தாக்குதல் ஏற்படுத்திய சர்வதேச அதிர்ச்சியின் கிளர்ச்சியாகவும் அமைந்தது. காலம் காலமாக அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு எதிராக உள்ளோடியிருந்த உலகின் கண்டனப் பார்வை இங்கு இலக்கிய வெளிப்பாடாகியுள்ளது. அதேவேளை இதே அமெரிக்காவே முற்போக்குச் சக்திகளின் உருவாக்கத்திற்கும் அவற்றின் போராட்டத்திற்கும் விளைநிலமாக இருந்திருக்கின்ற அத்தகைய போக்கும் இங்கே அவிழ்கின்றது. சர்வதேசியமாய் விரிந்த தமிழ்க்கவிதைப் பரப்பை இக்கவிதை கொண்டுள்ளது. A Country Entraped என்ற தலைப்பில் இக்கவிதை ஏ. ஜே.கனகரட்னாவால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பட்டது. அத்துடன் மு.பொ. ஆங்கிலத்தில் எழுதிய இன்னொரு

நீண்ட கவிதையும் *The Song of Liberated Zone* என்ற மகுடத்தில் இத்தொகுப்பில் அடங்கியுள்ளது.

இந்தக் கவிதை நூலின் முன்னுரையில் பேராசிரியர் சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "மு. பொ. பற்றி முதலில் குறிப்பிடவேண்டியது அவர் தம் கவிதைகளிலே கொண்டுவரும் தத்துவம் ஆகும் (மெய்யியல்). மு.பொ. வினுடைய அறிவாழமும், அகற்சியும் வியக்கத்தக்கவை. ஆங்கில அறிவு அவரிடத்தில் உண்டு எனச் சொல்வது முழு உண்மையையும் வெளிக்கொணர மாட்டாது. ஆங்கிலத்தை மூல மொழியாகக்கொண்டு வெளிவரும் கவிதைப் படைப்புகள் பற்றிய அறிவு இவரிடத்தில் நிறைய உண்டு. சர்வதேச அரசியல் பற்றிய சிரத்தையும் ஈடுபாடும் உண்டு. இவற்றால் மு.பொ.வின் கவிதைகள் மிக வித்தியாசமாக உள்ளன."

மேலும், பிறிதோரிடத்தில் மு.பொ.வின் ஆக்கங்கள்பற்றி பேராசிரியர் குறிப்பிடும்போது, *'Among the Poets of the1970s, M.Ponnambalam is considered to be highly articulate, - using his poetry to experiment with language" (50 Years of Sri Lankan Tamil Literature)* என்கிறார்.

"ஊஞ்சல் ஆடுவோம்" *(2001)* "நீர்க் கோலம்" என்பன மு.பொ. எழுதிய சிறுவர் ஆக்கங்களாகும்.

இவரது சிறுகதைத் தொகுதிகளாக "கடலும் கரையும்", "முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை" என்பன வெளி வந்துள்ளன. இத்தொகுப்புகள் பெரும்பாலும் ஈழத் தமிழர் போராட்டம் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியுமே பேசியுள்ளன. ஈழத்துச் சிறுகதை வரலாறு பற்றி எழுதிய செங்கை ஆழியான் அந்நூலில் தமிழ் தேசிய உணர்வு காலகட்டக் கதைகளை ஆராயும்போது, "ஏனைய சிறுகதை ஆசிரியர்களிலிருந்து மு.பொன்னம்பலம் விலகி ஒரு தனிப்போக்கைக் கொண்டுள்ளார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவரது “கடலும்கரையும்” என்ற சிறுகதைத் தொகுதி வடக்கு கிழக்கு மாகாண விருதினைப் பெற்றுக் கொண்டது.

மு.பொ. 1967இல் இருந்து 2001வரை தனது கிராமமான புங்குடுதீவில் இருந்தார். அங்கு சர்வமத அலுவல்களில் முழுநேர ஊழியராகக் கடமையாற்றினார். தீவுப்பகுதியை இராணுவம் கைப்பற்றியபோது பலர் இடம்பெயர்ந்து சென்றபோதும் 1991இல் அக்கிராமத்தில் ஒரு சிலருடன் தங்கி அங்குள்ளவர்களுக்குத் தன்னாலான சேவைகளைச் செய்தார். அக்கால நிகழ்ச்சிகள் சிலவற்றை அவருடைய சிறுகதையான “கைது செய்யப்பட்ட கிராமம்” என்ற சிறுகதையில் பதிவு செய்துள்ளார். அச்சிறுகதை “முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை”த் தொகுதியில் அடங்கியுள்ளது.

மு.பொ.வின் நாவல்களாக “நோயில் இருத்தல்” (1999), “சங்கிலியன்தரை” (2016) ஆகியவை வெளிவந்துள்ளன. “நோயில் இருத்தல்” அவ்வாண்டுக்கான தேசிய சாகித்திய விருதினைப் பெற்றது.

“நோயில் இருத்தல்” நாவல் இரண்டு பாகங்களைக் கொண்டது. முதலாம் பாகம் 1984இல் மயிலிட்டிக் கிராமத்தில் அங்குள்ள ஆஸ்பத்திரியில் மு.பொ. மூன்று மாதம் தங்கியிருந்து சிகிச்சைபெற்ற காலத்தில் அங்கு நடைபெற்ற நிகழ்வுகள், ஆசிரியரது உள்மன யாத்திரை, தன் குடும்பத்தைவிட்டுப் பிரிந்திருத்தல், உலகியல் நிகழ்வுகள் போன்றவற்றைப் பேசுகிறது.

இரண்டாம் பாகத்தில், இவரது சகோதரர் மு.தளையசிங்கத்தின் ஆன்மீகச் செயற்பாடுகள், அவரது இறந்த தருணம் போன்றவற்றை விபரிக்கிறது. இக்காலத்தில் மு.பொ. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இருந்தார். அக்காலத்திலேதான் இந்திய இராணுவத்தின் செயற்பாடுகள் உக்கிரமடைந்தன. இந்நாவல் 80களுக்குப் பின்பு ஏற்பட்ட ஈழத்து சமகால அரசியல் நிலைமைகள் பற்றியும் இலங்கை

இராணுவம் மற்றும் இயக்க நடவடிக்கைகள் பற்றியும் விபரிக்கிறது.

"நோயில் இருத்தல்" கதாநாயகனின் நோயை மட்டுமல்ல இது எங்கள் தேசத்தின் நோய் என்பதையும் குறியீடாக இந்நாவல் பேசுகிறது.

மு.பொ.வின் விமர்சன நூல்கள் இலக்கிய உலகில் பெரும் வரவேற்பைப் பெற்றன. "யதார்த்தமும் ஆத்மார்த்தமும்" (1992), "திறனாய்வு சார்ந்த பார்வைகள்" (2000), "திறனாய்வின் புதிய திசைகள்" (2011) ஆகிய நூல்கள் வெளியாகியுள்ளன. இவற்றுள் "திறனாய்வின் புதிய திசைகள்" நூலுக்கு மலேசியா "தான்ஸ்ரீ" சோமசுந்தரம் கலை இலக்கிய அறிவாரியம் 2010/ 2011 ஆண்டுக்கான அனைத்துலகப் புத்தகங்களுக்குள் சிறந்த நூலுக்கான பரிசாக 10,000 அமெரிக்க டொலர்களை வழங்கிக் கௌரவித்தது.

இவரது மொழிபெயர்ப்பு நூல்களாக "பேரிடர்களை பெரு வாய்ப்புகளாக மாற்றுதல்" (மருத்துவமும் நலவழியியலும் தொடர்பான நூல்), கம்லா பஹாசின் "ஆண்நிலை இயல்பு பற்றிய ஆழமான தேடல்" (சமூகவியல்) ஆகியவை வெளியாகியுள்ளன. இவற்றைவிட இவர் எட்டு ஆங்கில நூல் களைத் தமிழாக்கம் செய்துள்ளார். அவையாவன:

(1) Casting Pearls - Malathi de Alwis & Kumari Jaya wardena (2) Exploring Masculinity -Kamala Bhasin, (3) A Hidden History, (4)Turning Dangers into Opportunities -Kamala Bhasin, (5) Paradise Poisned (3Chapters) -John Richardson,(6) The Way We Are -Jayadeva Uyan goda, (7) Feminist Under Fire ( Collaction of Articls), (8) The Tsunami : affected Burgher woman of Dutch Bar, Batticoloa, Sri Lanka -Robert Crusz

இவர் மொழிபெயர்த்த குமாரி ஜெயவர்த்தனாவின் நூல் "ஓயாத கிளர்ச்சி அலைகள்" மொழிபெயர்ப்புக்கான அரச தேசிய சாஹித்திய விருதினைப் பெற்றது.

மு.பொ. 1970-1971 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் "சத்தியம்" என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார். அப்பத்திரிகை புங்குடுதிவில் இயங்கிய சர்வோதயம் -சர்வமதசங்கம் ஆகியவற்றையும் ஈழத்து அரசியல், இலக்கியம் ஆகியவற்றையும் நெறிப்படுத்துவதாக அமைந்தது. மு.தளையசிங்கம் அதில் அரசியல், வரலாற்றுக் கட்டுரைகளை எழுதினார். "பூரணி" சஞ்சிகை வெளியீட்டிலும் மு.பொ.வின் பங்களிப்பு இருந்தது. 1989 தை முதல்1990 வைகாசி வரை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த "திசை" என்ற பத்திரிகைக்கும் மு.பொ. ஆசிரியராக இருந்துள்ளார். அப்போது அதன் உதவி ஆசிரியராகச் செயற்பட்டவர் அ.யேசுராசா.

மு.பொ. பாடசாலை ஆசிரியராகத் தொழில் புரிந்தவர், மு.பொ.வின் மனைவி பெயர் செல்வநாயகி (உமா). மு. பொ. தம்பதிக்கு பிள்ளைகள் கிருபாகரன், யசோதா, டாக்டர் மனோகரன், டாக்டர் துளசி ஆகிய நால்வர் ஆவர்.

இன்றைய இலக்கியங்கள் பற்றிய பார்வை தொடர்பாக அண்மையில் அவருடன் உரையாடியபோது, அவர் பின்வருமாறு கூறினார் "இது காலவரை மேல் நாட்டிலும்சரி கீழ்நாட்டிலும் சரி பலர் இலக்கியத் திறனாய்வு சார்ந்த விஷயங்களை பல்வகை நோக்கை முன்வைத்து எழுதியுள்ளனர். ஆரம்பகால இலக்கியம், மறுமலர்ச்சிகால இலக்கியம், காலனித்துவ, பின்காலனித்துவ இலக்கியம் என்று காலப்பகுப்புக்களை இலக்கியத்துள் புகுத்தி, அதற்குள், அழகியல் கருத்தியல், என்று 'கண்டுபிடிப்பு'ச் செய்வதுதான் இன்று அனேகர் செய்யும் விமர்சனமாக உள்ளது. ஆனால் மறுமலர்ச்சி காலத்திலிருந்து வீறிட்டெழுந்த நவீன கலை இலக்கியம் இன்று என்ன நிலையில் உள்ளது, எவற்றை யெல்லாம் இணைத்துக்கொண்டு எதனை நோக்கி ஓடிவருகின்றது என்பது பற்றி எவரும் அறியார். பல பிரிவுகளுக்குட்பட்டு கணிதவியல், இரசாயனவியல், பௌதிக வியல், என்று

பிரிந்துகிடந்த விஞ்ஞானம் இன்று அந்தப்பிரிவுகளிலிருந்து விடுபட்டு பேர் உளவியல் (Parapsychology), Quantum பௌதிகவியல் என்பவற்றோடு இணைந்து நம் ஆன்றோர் கூறிய மெஞ்ஞானத்தின் கதவுகளைத் தட்டிக்கொண்டு நிற்கிறது. மறுமலர்ச்சியின் ஆரம்பகாலத்தில் தாந்தேயால் எழுதப்பட்ட மாபெரும் காவியமான “டிவைன் கொமடி” பற்றி ஆய்வு செய்பவன், இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஸ்ரீஅரவிந்தரால் எழுதப்பட்ட மாபெரும் காவியமான “சாவித்திரி”யோடு அது ஏதோவகையில் தொட்டுக்கொண்டு நிற்பதை அறிவான். இன்றுள்ள கலை இலக்கிய விமர்சகர்கள் என்பவர்கள் செய்யவேண்டிய ஆய்வும், விமர்சனமும் என்னவகையில் அமையவேண்டும் எத்திசையில் செல்ல வேண்டும் என்பதையே நான் இதன்மூலம் சொல்ல விழைகிறேன். மனித இனத்தின் கூர்ப்பும் அதன் விழுமியங்களும் எதைநோக்கிப் பயணிக்கின்றன என்பதை அறியக்கூடிய தரிசனம் உள்ளவர்களாக எழுத்தாளர்களாகிய நாம் இருக்கவேண்டும்.அவ்வாறிருப்பின் எமது கலை இலக்கிய ஆக்கங்களால் அதன் முற்போக்குப் பாய்ச்சல் விரைவுபடுத்தப்படும்”

ஞானம் சஞ்சிகையில் இவர் “மு.பொ.பக்கம்” என்ற தொடர் பத்தியை எழுதியதோடு சிறுகதை, கவிதை, கட்டுரைகளையும் எழுதி வந்துள்ளார்.

ஈழத்துப்போர் இலக்கியம் தொடர்பாக இவருடனான கருத்தாடல் “ஞானம் போர் இலக்கியச் சிறப்பிதழி”ல் இடம் பெற்றுள்ளது.

ஞானம் சஞ்சிகைக்கு இவர் அளித்த நேர்காணல் ஞானம் 196வது இதழில் வெளியாகியுள்ளது,

மு.பொ.வின் இலக்கியப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக தெற்காசியாவின் 'Library of Congress' என்ற அமைப்பு தேர்ந் தெடுக்கப்பட்ட எழுத்தாளர்களில் ஒருவராக 2002இல் இவரைக் கௌரவித்தது.

அத்தோடு இலண்டன், சுவிஸ், பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளின் தமிழ் இலக்கிய அமைப்புக்களால் இவர் கௌரவிக்கப்பட்டார்.

2010இல் தமிழ்க் கதைஞர்வட்டம் (தகவம்) கௌரவித்தது.

அதே ஆண்டில் நடைபெற்ற சார்க் மகாநாட்டில் கவிதைத்துறை சார்ந்த நிகழ்வில் ஒரு அரங்கத்துக்கு இவர் தலைமை வகித்ததோடு கௌரவமும் பெற்றார்.

2010இல் கனடாவில் வெளிவரும் "காலம்" இதழ் இவரைக் கௌரவிக்கும் வகையில் "மு.பொ. சிறப்பிதழை" வெளியிட்டது.

2010இல் வடக்கு கிழக்கு மாகாண சபை ஆளுநர் விருது வழங்கிக் கௌரவித்தது.

2016இல் தெகிவளை நகரசபை இவரது பணிகளைப் பாராட்டிக் கௌரவித்தது.

2016இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் உப்புல் திஸாநாயக்கா அவர்களால் கௌரவிக்கப்பட்டார்.